வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P . 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
## வார மலர்

Eelanadu

Email : news@eelanadu.lk | மலர் : 04 | 08.10.2023 ஞாயிற்றுக்கிழமை | இதழ் : 302 | பக்கங்கள் : 20



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி,
வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram money transfer – மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER – றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER – வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை



07
“அப்படியே ஆகட்டும் நண்பா!”



08
மீண்டும் சீனக்கப்பல் வருகைப் பிரச்னை



09
இனநாயகமே ஜனநாயகமானால் அநீதியே நீதியாக மாறிவிடும்!



11
‘யாகாவாராயினும் நா காக்க’ வேண்டியிருந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க!

## மயிலத்தமடு மேய்ச்சல் தரை விவகாரம்:
# ஜனாதிபதிக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஏட்டிக்குப் போட்டியாக போராட்டம்

### நிலத்தை பறிகொடுத்தோரும் ஆக்கிரமித்தோரும் நடத்தினர்





மட்டக்களப்பு, ஒக்ரோபர் 08

**மட்டக்களப்பு மாவட்டத்துக்கு நேற்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வருகை தந்த நிலையில் அவருக்கு எதிர்ப்பு தெரிவித்து இரு போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.**

மயிலத்தமடு - மாதவனை மேய்ச்சல் தரையை இழந்த தமிழ் மக்கள் சித்தாண்டியில் நேற்றைய தினம் 23ஆவது நாளாக தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டனர். இதன்போது, போராட்டக்காரர்கள் பிச்சைப் பாத்திரம் ஏந்திப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இதேநேரம், மயிலத்தமடு மேயச்சல் தரையில் குடியேறிய சிங்கள பெரும்பான்மை இனத்த வர்கள் தம்மை வெளி யேற்றக் கூடாது என்று கூறி அம்பிட்டிய

15

## ஓ. எல். பரீட்சையில் இனி ஆறு பாடங்கள்

கொழும்பு, ஒக். 08

எதிர்வரும் 2025 ஆம் ஆண்டிலிருந்து, சாதாரண தர பரீட்சையில் 5 அல்லது 6 பாடங்களாகக் குறைக்கப்படும் என கல்வி அமைச்சின் ஆலோசகர் பேராசிரியர் குணபால நாணயக்கார தெரிவித்தார்.

குறித்த விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படவுள்ள கல்விச் சீர்திருத்தத்தின் கீழ் இந்த நாட்டில் பரீட்சை முறையில் விரிவான மாற்றம் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும்.

மாணவர்களின் பரீட்சை சுமையை

15

## கதவடைப்பு போராட்டத்துக்கு யாழ்.வணிகர் கழகம் ஆதரவு

கொழும்பு,ஒக். 08

எதிர்வரும் 13ஆம் திகதி தமிழ் தேசிய கட்சிகள் திட்டமிட்டுள்ள கதவடைப்பு போராட்டத்துக்கு யாழ். வணிகர் கழகம் முழுமையான ஆதரவு தெரிவித்துள்ளது.

முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதி ரி.சரவணராஜாவுக்கு நீதி கோரும் விவகாரத்துடன், தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்னை தீர்வுக்கு முழுமையான சர்வதேச தலையீட்டையும் கோரி இந்த கதவடைப்பு போராட்டம் நடத்தப்படவேண்டுமென்றும் வணிகர் கழகம் வலியுறுத்தியுள்ளது.

15

### காங்கேசன்துறையில்
## வைரவர் ஆலயம் எதிரே புத்தர் குடியமர்ந்தார்!



யாழ்ப்பாணம், ஒக். 08

இராணுவ கட்டுப்பாட்டு பிரதேசமாக இருந்து அண்மையில் விடுவிக்கப்பட்ட காங்கேசன்துறை - மாங்கொல்லை பகுதியில் ஞான வைரவர் ஆலயம் முன்பாக உள்ள அரசமரத்தின் கீழ் புத்தர் சிலை வைக்கப்பட்டுள்ளது.

இந்த புத்தர் சிலையை இராணுவத்தினர் தமது வழிபாட்டுக்காக வைத்திருக்கலாம் என்று நம்பப்படுகின்றது. எனினும், இராணுவத்தினர் இந்த புத்தர் சிலையை அங்கிருந்து அகற்றவில்லை. இது அந்தப் பகுதியை சேர்ந்த மக்களிடையே பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. அத்துடன், இதனை அகற்றுமாறும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(தொடர்புடைய மற்றொரு செய்தி 5ஆம் பக்கத்தில்)

## மட்டக்களப்பில் இன்று போராட்டம்

மட்டக்களப்பு,ஒக். 08

மட்டக்களப்பில் இன்று இடம்பெறவுள்ள போராட்டத்துக்கு அனைவரையும் அணி திரளுமாறு தமிழ் தேசிய மக்கள் முன்னணி ஊடகப் பேச்சாளர் க.சுகாஷ் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

15

## மன்னாரில் அம்புலன்ஸில் போதைப்பொருள் கடத்தி தப்பிய சாரதி தமிழகத்தில் கைது!

சென்னை, ஒக். 08

ஐஸ் போதைப் பொருளை நோயாளர் காவு வண்டியில் கடத்தி விற்பனை செய்தபோது, மன்னார் பொலிஸார் கைது செய்ய முற்பட்ட சமயத்தில், பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரின் கட்டை விரலை கடித்து விட்டு தப்பிய அம்புலன்ஸ் சாரதி கடல் மார்க்கமாக இந்தியாவுக்கு தப்பிச் சென்றுள்ளார்.

நேற்றுக் காலை பாம்பன் குந்துகால் கடற்கரை அருகில் வைத்து மரைன் பொலிஸாரால் அவர் கைது செய்யப்பட்டார்.

ராமநாதபுரம் மாவட்டம் பாம்பன் குந்துகால் கடற்கரை அருகே நேற்று முன் தினம் இரவு இலங்கையிலிருந்து சட்டவிரோதமாக இந்திய படகில் வந்து இறங்கிய இலங்கை நபர் தொடர்பில், அப்பகுதியில் உள்ள பொதுமக்கள் சந்தேகத்தின் பெயரில் மண்டபம் மரைன் பொலிஸாருக்குத் தகவல் கொடுத்தனர்.

தகவலின் அடிப்படையில் மரைன் பொலிஸார் இலங்கை நபரை

15

## மலேசிய வெளியுறவு அமைச்சர் இன்று கொழும்புக்கு வருகிறார்

கொழும்பு,ஒக். 08

மலேசிய வெளிவிவகார அமைச்சர் சம்ப்ரி அப்துல் காதிர் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு இன்று இலங்கைக்கு வருகை தரவுள்ளார்.

இந்த விஜயத்தின்போது அவர் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் வெளிவிவகார அமைச்சர் ஆகியோரை சந்திக்கவுள்ளார்.

எதிர்வரும் 09 ஆம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ள இந்து சமுத்திர வலய நாடுகளின் பிரதிநிதிகள் மாநாட்டில் சம்ப்ரி அப்துல் காதிர் கலந்து கொள்ளவுள்ளார்.

மலேசிய வெளிவிவகார அமைச்சருடன்

15

## சிறையிலுள்ள ஈரான் பெண்ணுக்கு சமாதானத்துக்கான நோபல் பரிசு!



ஸ்டொக்ஹோம், ஒக். 08

சிறையிலுள்ள ஈரானிய மனித உரிமை ஆர்வலர் நாகேஸ் மொகம்மதிக்கு இந்த வருடத்தின் சமாதானத்துக்கான நோபல் பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது.

அவரை பெண்களுக்கு எதிரான ஒடுக்குமுறைக்கு எதிராக போராடியவர் என நோபல் பரிசுக் குழுவின் தலைவர் பாராட்டியுள்ளதுடன், இவர் சுதந்திர போராட்ட வீராங்கனை

15

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

## இப்படியும் நடக்கிறது

ஒரு கிராமத்தில் ஒரு அறிஞர் இருந்தார். அவர் ஒரு பொருளாதார மேதை. பல மன்னர்கள் தங்கள் நாட்டுப் பொருளாதாரத்தைச் சீர்ப்படுத்த அவர் ஆலோசனையை நாடுவதுண்டு.

ஒரு நாள் அவரது கிராமத்து தலைவர் அவர் முன் வந்து அவரைப் பார்த்துக் கிண்டலாக, 'அறிஞரே! நீங்கள் பெரிய அறிஞர் என்று உலகமே பாராட்டுகிறது. ஆனால் உங்கள் பையன் ஒரு அடி முட்டாளாக இருக்கிறானே! தங்கம், வெள்ளி இவற்றுள் அதிகம் மதிப்பு வாய்ந்தது எது என்று அவனைக் கேட்டால் அவன் வெள்ளி என்று சொல்கிறான். வெட்கக்கேடு!' என்றார்.

அறிஞருக்கு மிகுந்த அவமானமாகப் போய்விட்டது. மிக வருத்தமடைந்தார். வீட்டுக்கு வந்ததும், பையனை அழைத்தார். 'தங்கம், வெள்ளி இவை இரண்டில் அதிகம் மதிப்பு வாய்ந்தது எது?' என்று கேட்டார். பையன் 'தங்கம்' என்று சொன்னான்.

'பின்னர் ஏன் ஊர்த் தலைவர் கேட்கும்போது வெள்ளி என்று சொன்னாய்?' கோபத்துடன் கேட்டார்.

அதற்கு அவன் சொன்னான்:

'தினமும் நான் பள்ளி செல்லும் போது அவர் ஒரு கையில் தங்க நாணயமும், மறு கையில் வெள்ளி நாணயமும் வைத்துக் கொண்டு என்னை அறிஞரின் மகனே என அழைத்து 'இவ்விரண்டில் மதிப்பு வாய்ந்ததை நீ எடுத்துக் கொள்' என்பார். நான் உடனே வெள்ளியை எடுத்துக் கொள்வேன். உடனே அவரும் சுற்றி இருப்பவர்களும் சிரித்துக் கிண்டல் செய்வார்கள். நான் அந்த நாணயத்துடன் போய் விடுவேன். இது ஓராண்டாக நடக்கிறது. தினம் எனக்கு ஒரு வெள்ளி நாணயம் கிடைக்கிறது. நான் தங்கம் என்று சொல்லி எடுத்துக் கொண்டால் அன்றோடு இந்த விளையாட்டு நின்று விட்டிருக்கும். எனக்கு நாணயம் கிடைப்பதும் நின்று போகும். எனவே தான்' என்றான்.

அறிஞர் திகைத்துப்போனார்.

வாழ்க்கையில் பல நேரங்களில் நாம் முட்டாள்களாக வேடம் அணிகிறோம், மற்றவர்கள் அதைப் பார்த்து மகிழ்வதற்கு. ஆனால் நாம் தோற்பதில்லை. அவர்கள் வெல்வதாக எண்ணிக் கொண்டிருப்பார்கள். ஆனால் வேறு கோணத்தில் பார்க்கும் போது நாம் வென்றிருப்போம்! எந்தக் கோணம் நமக்கு முக்கியம் என்பதை நாம்தான் தீர்மானிக்க வேண்டும்!

முல்லைத்தீவு நீதிபதியின் பதவி விலகலைக் கண்டித்து தமிழ் தேசியக் கட்சிகள் அனைத்தும் நடத்திய மனித சங்கிலிப்போராட்டம் குறித்து நேற்று இந்தப் பத்தியில் எழுதியிருந்தேன்.

ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணியின் ஏற்பாட்டில் நடந்த கூட்டத்தில் தமிழரசுக்கட்சியும், கலந்துகொண்டு அப்படியொரு போராட்டத்தை நடத்துவததென்று முடிவு செய்தபோது அதற்கு ஏனைய தமிழ் தேசியக் கட்சிகள் மாத்திரமன்றி, மாக்சிய லெனினிச சோசலிசக் கட்சியும் ஆதரவு வழங்கியிருந்தது. எதிர்பார்த்ததுபோல மக்கள் பெருந் தொகையாக கலந்துகொள்ளவில்லை என்பது பற்றி நேற்று இந்தப் பத்தியில் எழுதியிருந்தேன்.

அந்தப் போராட்டம் நடந்த பின்னர், அதாவது அந்த இரவே போராட்டத்தை முன்மொழிந்த இரண்டு கட்சிகளின் தலைவர்கள் தமது மற்றுமொரு பங்காளிக் கட்சித் தலைவரின் வீட்டுக்கு சென்று போராட்டம் பற்றி கலந்துரையாடியிருக்கிறார்கள்.

மனித சங்கிலிப் போராட்டம் நடத்துவது என்று முடிவெடுத்தது பிழையாகப் போய்விட்டது என்பதுதான் அவர்களின் கவலையாக இருந்திருக்கின்றது.

ஒரு தலைவர் சொன்னாராம், 'நாங்கள் மக்களை வீதிக்கு வாருங்கள் என்று சொன்னதுதான் பிழையாகப் போய்விட்டது. அதற்குப் பதிலாக வீட்டிலேயே இருங்கள் என்றிருந்தால் மாபெரும் வெற்றி பெற்றதாக ஆக்கியிருக்கலாம்' என்று.

அதாவது அவர் சொல்லியது, மனித சங்கிலிப் போராட்டத்திற்கு வரச்சொன்னதற்குப் பதிலாக ஹர்த்தால் என்று அறிவித்திருந்தால், மக்கள் 'அப்பனே சிவா' என்று வீட்டில் இருந்து ஒரு நாளைக் கொண்டாடியிருப்பார்கள். நாங்களும் ஹர்த்தால் மாபெரும் வெற்றி என்று பின்னர் அறிக்கை விட்டிருக்கலாம் என்றிருக்கிறார்.

அவர்களைப் பொறுத்தவரை, தமது போராட்டம் குறித்து மக்கள் என்ன கருத்தைக் கொண்டிருக்கிறார்கள் என்பது தெரியாது. தங்களாலும் போராட்டங்களுக்கு மக்களை அழைத்துவர முடியாது.

அங்கஜன் ராமநாதன் கூட தனது கட்சித் தலைவர் மைத்திரி யாழ்ப்பாணம் வந்தபோது மண்டபம் நிறைந்த மக்களுடன் கூட்டம் நடத்துகின்றார். அதாவது மக்களை கொண்டுவந்து சேர்த்து மாபெரும் கூட்டம் நடத்துவதற்காவது அவரால் முடிகின்றது. அதிகம் ஏன் தீவிர தமிழ் தேசிய கட்சிகளில் ஒன்றான பொ. ஐங்கரநேசனின் தமிழ் தேசிய பசுமை இயக்கத்தையும் இந்த தமிழ் தேசியக் கட்சிகள் தமது கூட்டங்களுக்கு அழைத்திருந்தால்கூட அவர்கள் சில நூறு பேருடனாவது வந்து போராட்டத்தில் கலந்துகொண்டிருப்பார்கள்.

அத்தோடு விட்டிருக்கலாம் அவர்கள். மீண்டும் அனைத்து தமிழ் தேசியக் கட்சிகளும் (தமிழ் தேசிய மக்கள் முன்னணி தவிர்ந்த) கூடி மீண்டும் அடுத்த வாரம் ஹர்த்தால் நடத்துவது என்று முடிவுசெய்திருக்கிறார்கள்.

எதிர்வரும் 15ஆம் திகதி ஐந்தாம் ஆண்டுக்கான புலமைப் பரிசில் பரீட்சை நடைபெறவிருக்கின்றது. 25ஆம் திகதி இரண்டாம் தவணைப்பரீட்சைகள் நடக்க விருக்கின்றன. பிள்ளைகளை ஒரு நாள் வீட்டில் வைத்திருப்பதன் மூலம் அவர்களின் கல்வி பாதிக்கவா போகின்றது என்று தலைவர்கள் கேட்கலாம். நியாயமான கேள்விதான்.

இவற்றைப் பார்க்கின்றபோது மேலேயுள்ள கதையில் வரும் ஊர்த்தலைவரின் நிலையில்தான் தமிழ் மக்கள் இருக்கிறார்கள் என்றே எண்ணத்தோன்றியது.!

- ஊர்க்குருவி.

# இலங்கை ஆசிரியர் சங்க யாழ்.கிளை கொழும்பில் போராட்டத்துக்கு அழைப்பு

யாழ்ப்பாணம், ஒக். 08

அதிபர் ஆசிரியர்களின் சம்பளப் பிரச்னைகளுக்கு தீர்வு கோரி முன்னெடுக்கப்படவுள்ள போராட்டத்தில் அனைத்து ஆசிரியர் மற்றும் அதிபர்களையும் கலந்து கொள்ளுமாறு இலங்கை ஆசிரியர் சங்கத்தின் யாழ் மாவட்ட செயலாளர் ஜெயராஜசிங்கம் போல்வின் அழைப்பு விடுத்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கும் போதே அவர் இதனை கூறினார்.

அதிபர் மற்றும் ஆசிரியர்களின் சம்பள நிலுவை தீர்க்கப்படாமையினால், ஆசிரியர்கள் பல்வேறு நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்துள்ள நிலையில், இதற்கு எதிர்ப்பு தெரிவித்து போராட்டமொன்று முன்னெடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 24ஆம் திகதி கொழும்பில் உள்ள மத்திய கல்வி அமைச்சுக்கு முன்பாக குறித்த போராட்டம் முன்னெடுக்கப்படும் என இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

அத்துடன், சம்பள நிலுவை தொடர்பில் அரசாங்கத்துடன் பல்வேறு சந்தர்ப்பங்களில் பேச்சுவார்த்தை நடத்திய போதும் இதுவரை தீர்க்கமான முடிவுகள் எடுக்கப்படவில்லை எனவும் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் யாழ் மாவட்ட செயலாளர் ஜெயராஜசிங்கம் போல்வின் விசனம் தெரிவித்தார்.

அதிபர் ஆசிரியர்களின் ஏனைய நிலுவைகள் மற்றும் நிர்வாகப் பிரச்னைகள் தீர்க்கப்படாமல் உள்ளமையால் அவற்றை தீர்க்கும் முகமாக அரசாங்கத்திற்கு அழுத்தம் வழங்குவதற்காக போராட்டத்தை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

ஆகவே அதிபர் ஆசிரியர்களின் சம்பள முரண்பாட்டிற்கு நிரந்தர தீர்வை காணும் முகமாக எதிர்வரும் 24 ஆம் திகதி அனைத்து அதிபர் ஆசிரியர்களும் கொழும்பில் இடம்பெறும் உரிமைப் போராட்டத்தில் கலந்து கொள்ளுமாறும் கோரிக்கை விடுத்தார். (அ)

# இந்திய பொருளாதார ஒத்துழைப்பு நாள் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஒக். 08

இந்திய தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு நாள் நிகழ்வு யாழ்ப்பாணத்தில் நேற்று இடம் பெற்றது.

இந்தியத் துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் யாழ். நகரிலுள்ள விருந்தினர் விடுதியொன்றில் இது நடைபெற்றது. இந் நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எச்.எம்.சாள்ஸ் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார்.



நிகழ்வில் இந்திய துணைத் தூதர் உள்ளிட்ட தூதரக அதிகாரிகள், வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வி.கே. சிவஞானம், யாழ். பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் சிறி சற்குணராசா மற்றும் வர்த்தகர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (அ)

# கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் நூற்றாண்டையொட்டி ஆய்வு மாநாடு

யாழ்ப்பாணம், ஒக். 08

கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் நூற்றாண்டு நிறைவையொட்டி நடத்தப்படும் கல்விசார் ஆய்வு மாநாடு நாளை திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. கோப்பாயில் கலாசாலை நிறுவப்படுவதற்கு பின்புலமாக இருந்த சேர் பொன் இராமநாதன் பெயரிலும் காரைநகர் ச.அருணாசலம் உபாத்தியாயர் பெயரிலும் இரு அரங்குகள் அமைக்கப்பட்டு ஆய்வுக்கட்டுரைகள் சமர்ப்பிக்கப்படவுள்ளன.

மாநாட்டின் தொடக்க நிகழ்வு பொது அரங்காக யாழ்ப்பாண பல்கலைக்கழக கல்வியியற்துறைத் தலைவர் கலாநிதி ஜெயலக்சுமி இராசநாயகம் தலைமையில் இடம்பெறும் இதன்போது யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சிரேஸ்ட பேராசிரியர் தி.வேல்நம்பி ஆய்வரங்கத் திறப்புரையையும் கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் வாழ்த்துரையையும் வழங்குவர்.

ஆய்வுக்கட்டுரை அளிக்கைகளின் முதல் அமர்வு கலாசாலைக்கென காணியை வழங்கிய சேர் பொன் இராமநாதன் அரங்காக யாழ். பல்கலைக்கழக கல்வியியற்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ஆ. நித்திலவர்ணன் தலைமையில் நடைபெறும். கோப்பாயில் ஆசிரிய கலாசாலையை நிறுவதற்கு அடித்தளமிட்ட காரைநகர் ச. அருணாசலம் உபாத்தியாயர் பெயரில் இரண்டாவது அரங்கு யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி கலாநிதி சு. பரமானந்தம் தலைமையில் நடைபெறும்.

பாடசாலை ஆசிரியர்கள், பல்கலைக்கழக, தேசிய கல்விநிறுவக, கலாசாலைகள் மற்றும் கல்வியியற் கல்லூரிகளின் விரிவுரையாளர்கள் ஆய்வுக்கட்டுரைகளைச் சமர்ப்பிக்கவுள்ளதாகவும் ஆய்வுக்கட்டுரைகளை உள்ளடக்கிய 150 பக்கங்கள் கொண்ட ஆய்வு மாநாட்டு மலரும் வெளியிட்டு வைக்கப்படவுள்ளதாகவும் ஆய்வரங்க இணைப்பாளரும் கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளருமாகிய சின்னையா மனோகரன் தெரிவித்தார். (அ)

# 9 மாவட்டங்களுக்கு மண் சரிவு எச்சரிக்கை தொடர்ந்தும் நீடிப்பு

கொழும்பு, ஒக். 08

நாட்டிலுள்ள 9 மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்டுள்ள மண்சரிவு எச்சரிக்கை நீடிக்கப்பட்டுள்ளது

கொழும்பு, களுத்துறை, கண்டி, கேகாலை, இரத்தினபுரி, காலி, கம்பஹா, ஹம்பாந்தோட்டை, மற்றும் மாத்தறை ஆகிய மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள மண்சரிவு எச்சரிக்கை தொடர்ந்தும் நீடிப்பு விடுக்கப்பட்டிருந்த நிலையில் தொடர்ந்தும் நீடிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக களுத்துறை மாவட்டத்தின் இங்கிரிய, வலல்லாவிட்ட மற்றும் மத்துகமை ஆகிய பிரதேச செயலக பிரிவுகளுக்கு மண்சரிவு அபாய சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இரத்தினபுரி மாவட்டத்தின் குருவிட்ட பிரதேச செயலக பிரிவுக்கும் மாத்தறை மாவட்டத்தின் பிட்டபெத்தர பிரதேச செயலக பிரிவுக்கும் காலி மாவட்டத்தின் எல்பிட்டிய மற்றும் நாகொட பிரதேச செயலக பிரிவுகளுக்கும் மண்சரிவு அபாய சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

குறித்த 9 மாவட்டங்களில் உள்ள மக்களை மிகுந்த அவதானத்துடன் செயற்படுமாறு தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் அறிவுறுத்தியுள்ளது. (அ)

# 2025 முதல் பரீட்சைகளை உரிய நேரத்தில் நடத்துக!

## ஜனாதிபதி பணிப்புரை

கொழும்பு, ஒக். 08

2025ஆம் ஆண்டு முதல் கல்விப் பொதுதராதர உயர்தர மற்றும் சாதாரண தரப் பரீட்சைகளை உரிய நேரத்தில் நடத்துமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

பாராளுமன்ற கட்டடத் தொகுதியில் இடம்பெற்ற சந்திப்பின்போதே ஜனாதிபதி கல்வி அமைச்சருக்கு இந்த பணிப்புரையை வழங்கினார்.

இந்த ஆண்டும் பரீட்சைகள் தீர்மானிக்கப்பட்டதன் பிரகாரம் நடத்தப்பட வேண்டும் எனவும் 2025 ஆம் ஆண்டு முதல் பரீட்சைகளை நடத்துவதற்கு பிள்ளைகளுக்கு சுமை ஏற்படாத வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டுமென ஜனாதிபதி குறிப்பிட்டார்.

பரீட்சைகளை உரிய நேரத்தில் நடத்துவதற்கு பாராளுமன்ற சட்டத்தின் ஊடாக ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி கல்வி அமைச்சருக்கு வழங்கிய பணிப்புரையிலும் காணப்படுகின்றது.

அரசியல் அதிகாரங்களுக்கோ அல்லது வேறு எவருக்கோ பரீட்சை திகதியை சட்டத்தின் மூலம் மாற்ற முடியாது எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

இந்த நாட்டில் பரீட்சைகள் பிற்போடப்படுவதனால் வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் புலமைப்பரிசில்கள் பெறுவது, வயது வரம்பைத் தாண்டிச் செல்வது போன்ற பல பாதகமான விளைவுகளை மாணவர்கள் சந்திக்க நேரிடும் என அண்மையில் கல்வி நிபுணர்கள் ஜனாதிபதியிடம் குறிப்பிட்டிருந்தனர். (அ)

# பொதுஜன பெரமுனவில் இணையத் தயாரில்லை

## கூறுகிறார் மைத்திரிபால



கொழும்பு, ஒக். 08

பொதுஜன பெரமுனவில் இணைவதற்கு தயார் இல்லை என சுதந்திரக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழு கூட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை கூறினார்.

எதிர்வரும் தேர்தலை இலக்காகக் கொண்டு தேர்தல் விஞ்ஞாபனமொன்றை முன்வைப்பது மற்றும் மாவட்ட தொகுதி மட்டத்தில் அமைப்புச் செயற்பாடுகளை விரிவுபடுத்துவது தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# விஜயகலாவுக்கு எதிரான வழக்கு முடிவு

கொழும்பு, ஒக். 08

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை மீளக் கட்டியெழுப்ப வேண்டும் என்று கூறி இனங்களுக்கிடையில் ஒற்றுமையை சீர்குலைக்க முயன்றதாக தொடரப்பட்ட வழக்கில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் விஜயகலா மகேஸ்வரனுக்கு எதிராக எந்தவொரு சட்ட நடவடிக்கையும் மேற்கொள்ளப்படாது என சட்டமா அதிபரால் அறிவிக்கப்பட்டதாக ஒழுங்கமைக்கப்பட்ட குற்றத்தடுப்பு பிரிவு கொழும்பு பிரதான நீதவான் பிரசன்ன அல்விஸ் முன்னிலையில் தெரிவித்தது.

ஒழுங்கமைக்கப்பட்ட குற்றத்தடுப்புப் பிரிவினர் நீதிமன்றத்தில் மனுவொன்றை தாக்கல் செய்து, சட்டமா அதிபரின் கடிதத்தை நீதிமன்றில் சமர்ப்பித்துள்ளனர். சம்பவம் தொடர்பில், சட்டமா அதிபர் ஒக்ரோபர் 2ஆம் திகதி அறிவுறுத்தல்களை வழங்கியதுடன், பாராளுமன்ற உறுப்பினருக்கு எதிரான வழக்கை நீடிக்க முடியாது என்பதால் அவரை விடுதலை செய்யுமாறு நீதிமன்றில் அறிவித்தார்.

இதனை பரிசீலித்த கொழும்பு பிரதான நீதவான் பிரசன்ன அல்விஸ், விஜயகலா மகேஸ்வரனை எதிர்வரும் ஒக்ரோபர் 19ஆம் திகதி நீதிமன்றில் முன்னிலையாகுமாறு நோட்டீஸ் அனுப்பியுள்ளார்.

2016 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 2 ஆம் திகதி யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் விடுதலைப் புலிகள் அமைப்பை மீளக் கட்டியெழுப்ப வேண்டும் எனப் பிரகடனம் செய்து இனங்களுக்கிடையில் முரண்பாடுகளை ஏற்படுத்த முயன்றதாகக் கூறி பாராளுமன்ற உறுப்பினர் விஜயகலா மகேஸ்வரனுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

அன்றைய நிகழ்வில் விஜயகலா விடுதலைப் புலிகள் பற்றி பேசினாலும், அவரது கணவர் மகேஸ்வரன் கொலையில் தொடர்புபட்டதாக கைது செய்து தடுத்து வைக்கப்பட்டுள்ள முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினருக்கு பொதுமன்னிப்பளிக்க அவர் சம்மதிக்காததால் அவரை விடுவிக்க முடியாதுள்ளதாக அரச தரப்பினர் அடிக்கடி தெரிவித்து வருவது குறிப்பிடத்தக்கது. (அ)

# மன்னார் மீனவரின் வலையில் சிக்கிய அபூர்வ-ஆபத்தான மீன்!



மன்னார், ஒக். 08

மன்னார் மீனவர் ஒருவரின் வலையில் மிகவும் அபூர்வமும் ஆபத்து நிறைந்த விலாங்கு மீன் என அழைக்கப்படும் பாம்பு மீன் ஒன்று சிக்கியுள்ளது.

நேற்று மீன் பிடியில் ஈடுபட்ட நிலையிலேயே குறித்த மீனவரின் வலையில் குறித்த மீன் சிக்கியுள்ளது.

பாம்பின் தோற்றம் கொண்ட குறித்த மீன் 10 அடிக்கும் அதிகமான நீளத்தை கொண்டுள்ளது.

பெரும்பாலும் இவ்வகை மீன்கள் மீனவர்களின் வலைகளில் சிக்குவது குறைவாக காணப்படுகின்றது.

அவ்வாறு சிக்குகின்ற மீன்களும் அளவில் சிறிதாகவே காணப்படும். ஆனாலும் நேற்று பிடிபட்ட குறித்த மீன் 10 அடிக்கும் அதிகமான நீளத்தை கொண்டதாக காணப்படுகின்றது.

இவ் வகை மீன்கள் இடுப்பு பிடிப்பு, உட்பட பல்வேறு நோய்களுக்கான மருந்தாக அமைவதாகவும் மீனவர்கள் தெரிவிக்கின்றனர். (அ)

# பிரபல ஜோதிடர் விளக்கமறியலில்

கொழும்பு, ஒக். 08

மத நல்லிணக்கத்தை சீர்குலைக்கும் வகையில் சமூக வலைத்தளங்களில் அவதூறான கருத்துக்களை வெளியிட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட பிரபல ஜோதிடர் இந்திக்க தொட்டவத்த எதிர்வரும் 10ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

கணினி குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் நேற்று முந்தினம் பிற்பகல் அவர் கைது செய்யப்பட்டார்.

யூரியூப் சனலில் தேசிய மற்றும் மத நல்லிணக்கத்துக்கு குந்தகம் விளைவிக்கும் வகையில் கருத்து வெளியிட்டதாக முஸ்லிம் அமைப்புகள் செய்த முறைப்பாட்டையடுத்து விசாரணைகளை மேற்கொண்ட கணணி குற்றத்தடுப்பு பிரிவினரால் அவர் கைது செய்யப்பட்டார்.

கணினி குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் பிரகாரம், சந்தேகநபர் இந்திக்க தொட்டவத்த கைது செய்யப்பட்டு, கணினி குற்றச் சட்டத்தின் 6ஆவது பிரிவு மற்றும் இலங்கை குற்றவியல் சட்டத்தின் 291ஆவது பிரிவின் கீழ் குற்றஞ்சாட்டப்பட்டார்.

இதன்படி மாளிகாகந்த நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட நிலையில் அவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச உடன்படிக்கையின் கீழ் குற்றம் இழைக்கப்பட்டுள்ளதா என்பதை விசாரித்து நீதிமன்றத்தில் அறிக்கை அளிக்குமாறு பொலிஸாருக்கு நீதவான் உத்தரவிட்டார். (அ)

# சமுர்த்தி திட்டம் குறித்து அரசு கரிசனை வேண்டும்

கொழும்பு,ஒக். 08

சமுர்த்தி வேலைத்திட்டம் தொடர்பில் அரசாங்கம் அதிக கரிசனையுடன் செயற்பட வேண்டும் என எதிர்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

சேமிப்பு,நுகர்வு போன்றவை இருப்பதாகவும்,இவ்வாறு சேமித்த பணத்தில் கோடிக் கணக்கில் பெறப்பட்டு 5000 ரூபா அளவில் கொடுப்பனவு கோவிட் காலத்தில் வழங்கப்பட்டதாகவும், இதற்காக பெறப்பட்ட பணத்தில் ஒரு பகுதி மட்டுமே இதுவரை வழங்கப்பட்டுள்ளதாகவும் மற்றுமொரு தொகுதி வழங்கப்பட வேண்டியுள்ளதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் கூறினார்.

நாடாளுமன்றக் குழுவில் கலந்து கொண்டு அஸ்வெசும வேலைத்திட்டம் மற்றும் சமுர்த்தி வேலைத்திட்டம் தொடர்பில் கருத்து தெரிவிக்கும்போதே எதிர்க்கட்சித் தலைவர் இதனைத் தெரிவித்தார்.

சமுர்த்தி வேலைத்திட்டமானது சமூகப் பாதுகாப்பு, மற்றும் மக்கள் நலன் மேம்பாடு ஆகியவற்றைக் கொண்டுள்ளதாகவும்,அது நூறு சதவிகிதம் பொருத்தமானது இல்லை என்றாலும்,1994 இல் இருந்து இப்போது வரை இதில் ஏராளமான பணம் வைப்புச் செய்யப்பட்டுள்ளதாகவும்,இந்த பணம் அதன் பயனாளிகளுக்கு சொந்தமானது என்றும், இங்குள்ள சமூக பாதுகாப்பு காரணமாக எந்த பயனாளியும் அதை நீக்கிக் கொள்ள விரும்பவில்லை என்றும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

இதன் காரணமாக சமுர்த்தி வேலைத்திட்டம் தொடர்பில் அரசாங்கம் அதிக கரிசனையுடன் செயற்பட வேண்டுமென எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குறிப்பிட்டார். (அ)

# வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு இராணுவம் நிவாரணம்

கொழும்பு, ஒக். 08

மாத்தறை மாவட்டத்தில் வெள்ளம் மற்றும் அனர்த்த நிவாரண நடவடிக்கைகளுக்காக இலங்கை இராணுவம் 600 பணியாளர்களைக் கொண்ட குழுவொன்றை அனுப்பியுள்ளது.



மாத்தறை மாவட்டத்தில் நிலவும் தொடர் மழை காரணமாக நில்வலா ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதால் மாத்தறையில் பல வீதிகள் நீரில் மூழ்கியுள்ளதுடன், தேசிய கட்டடம் மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தினால் பல பகுதிகளுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, மாத்தறை மாவட்டத்தின் அனைத்து பாடசாலைகளும் ஒக்டோபர் 10 ஆம் திகதி வரை மூடப்படும் என மாவட்ட அனர்த்த முகாமைத்துவ குழு தெரிவித்துள்ளது. (அ)

# கத்தோலிக்க ஆயர் மன்றத்துடன் கலந்துரையாட ஜனாதிபதி தயார்!

**கொழும்பு,ஒக். 08**

**ஏப்ரல் 21 தாக்குதல் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையை ஆராய்ந்த பின்னர் கத்தோலிக்க ஆயர் மன்ற பிரதிநிதிகளுடன் கலந்துரையாடுவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தயாராகவுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.**

48 ஆயிரம் 909 பக்கங்கள் கொண்ட அந்த அறிக்கையின் அனைத்து ஆவணங்களும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸினால் கத்தோலிக்க ஆயர்கள் மன்றத்தின் தலைவரிடம் கடந்த ஏப்ரல் 20 ஆம் திகதி கையளிக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான், கத்தோலிக்க ஆயர்கள் மன்றத்தின் தலைவருடன் நேற்று முன் தினம் தொலைபேசியில் கலந்துரையாடியதுடன், குறித்த அறிக்கையை தானும் ஆராய்ந்து வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதன்படி, அறிக்கையை ஆராய்ந்த பின்னர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கத்தோலிக்க ஆயர்கள் சங்கப் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடுவதற்கு தயாராகி வருவதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் உள்விவகாரங்கள் தொடர்பில் சர்வதேச விசாரணைகளை நடத்துவதற்கு உடன்படுவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை எனவும், சர்வதேச விசாரணைகளை நடத்துவதற்கு அரசியலமைப்பிலும் ஏனைய சட்டங்களிலும் இடமில்லை எனவும் அந்த அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், ஏப்ரல் 21 தாக்குதல் தொடர்பான சனல் 4 தொலைக்காட்சி நிகழ்ச்சி தொடர்பில் ஆராய்ந்து அறிக்கை வெளியிடுவதற்கு ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி தலைமையில் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு சுட்டிக்காட்டியுள்ளது. (அ)

# விசேட அதிரடிப் படையினரின் சூட்டில் சந்தேகநபர் உயிரிழப்பு

கொழும்பு, ஒக். 08

ஹங்வெல்லயில் பொலிஸ் விசேட அதிரடிப்படையினருடன் நெற்று அதிகாலை இடம்பெற்ற மோதலில் சந்தேகநபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

அண்மையில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டு சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபரே உயிரிழந்துள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சட்டத்தரணி நிஹால் தல்துவ தெரிவித்தார்.

கடந்த 25 ஆம் திகதி தலங்கம ரொபர்ட் குணவர்தன மாவத்தையில் வியாபாரி ஒருவரை சுட்டுக் கொலை செய்த சம்பவத்தின் பிரதான சந்தேகநபரே இவர் என பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சந்தேகநபரை கைது செய்வதற்காக அதிகாரிகள் குழுவொன்று பாதுக்க - வக்க பகுதிக்கு நேற்று அதிகாலை சென்றதாகவும்,

இதன்போது சந்தேகநபர் ரி-81 தன்னியக்க துப்பாக்கி மூலம் பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

இதனையடுத்து, பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் மேற்கொண்ட பதில் தாக்குதலின்போது, அவர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# வருமான வரிப் பத்திரம் வீட்டிலிருந்தே பெறலாம்

கொழும்பு, ஒக். 08

நேற்று முதல் வீட்டில் இருந்தவாறு பொதுமக்களுக்கு வருமான வரிப் பத்திரம் பெற்றுக்கொள்ள முடியும் என தொழிநுட்ப இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்து தெரிவித்த போதே அவர் இந்த விடயத்தை தெரிவித்தார்.

மேல் மாகாணத்தில் உள்ள மக்கள் தவிர்ந்த ஏனைய மாகாணங்களில் உள்ள மக்களுக்கு இந்த வசதியைப் பெற்றுக்கொள்ள முடியும் என அவர் குறிப்பிட்டார்.



அடுத்த வருடத்தின் மார்ச் மாதம் 31ஆம் திகதிக்கு முன்னதாக சகல அரச நிறுவனங்களினதும் கட்டணம் செலுத்தும் முறைமையை இணைய வழியில் முன்னெடுப்பதற்கான வேலைத்திட்டம் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாக தொழிநுட்ப இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத் குறிப்பிட்டார். (அ)

# கொழும்பு, கண்டி தேசிய வைத்தியசாலைகளில் அஞ்சியோகிராம் பரிசோதனைகள் தடைப்பட்டன

கொழும்பு, ஒக். 08

கொழும்பு மற்றும் கண்டி தேசிய வைத்தியசாலைகளில் அஞ்சியோகிராம் பரிசோதனைகளை மேற்கொள்வதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அஞ்சியோகிராம் பரிசோதனைகளை மேற்கொள்வதில் தடைகள் ஏற்பட்டுள்ளதால், பல இருதய நோயாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக அரச கதிரியக்க தொழிநுட்ப அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் சானக்க தர்மவிக்ரம தெரிவித்தார்.

பரிசோதனை இயந்திரங்கள்



செயலிழந்து 6 மாதங்களுக்கு மேலாகியும் இதுவரை சீர் செய்யப்படவில்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

கண்டி தேசிய வைத்தியசாலையில் குறித்த பரிசோதனை, சிகிச்சைக்கான காத்திருப்பு பட்டியலில் 8 ஆயிரத்திற்கும் அதிகமான நோயாளர்கள் உள்ளதாக அவர் தெரிவித்தார்.

அஞ்சியோகிராம் பரிசோதனையை தனியார் வைத்தியசாலைகளில் மேற்கொள்வதற்கு ஒரு இலட்சம் ரூபாவிற்கும் அதிகமான தொகை செலவாகும் என அரச கதிரியக்க தொழிநுட்ப அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் சானக்க தர்மவிக்ரம சுட்டிக்காட்டினார். (அ)

# 122 மில்லியன் ரூபாய் பெறுமதியான குஷ், ஐஸ் போதைப்பொருட்கள் மீட்பு!

கொழும்பு,ஒக். 08

பேலியகொடை மிட்கோ களஞ்சியசாலையில் இருந்து 122 மில்லியன் ரூபாய் பெறுமதியான 16 கிலோகிராம் நிறையுடைய குஷ் மற்றும் ஐஸ் ரக போதைப் பொருட்கள் சுங்கத் திணைக்களத்தினரால் மீட்கப்பட்டுள்ளன.

கனடாவில் இருந்து கொழும்பில் உள்ள முகவரி ஒன்றுக்கு அனுப்பப்பட்ட பொதியொன்றிலிருந்து குறித்த போதைப் பொருள் மீட்கப்பட்டதாக சுங்கத் திணைக்களத்தின் பேச்சாளர் சீவலி அருக்கொட தெரிவித்துள்ளார்.

குறித்த போதைப் பொருள் மேலதிக விசாரணைகளுக்காக காவல்துறை போதைப் பொருள் ஒழிப்பு பிரிவினரிடம் கையளிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, உடவலவ காவல்துறையினரால் பலஹருவ பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது சட்டவிரோத முறையில் கஞ்சா செய்கையில் ஈடுபட்ட இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களிடம் இருந்து 12 ஆயிரத்துக்கும் அதிகமான கஞ்சா செடிகள் மீட்கப்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பில் 55 மற்றும் 32 வயதுடைய இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (அ)

# இலங்கை பணியாளர்களின் பணம் அனுப்பல் அதிகரிப்பு!

கொழும்பு, ஒக்.08

வெளிநாட்டிலுள்ள இலங்கைப் பணியாளர்களினால் நாட்டுக்கு அனுப்படும் பணத்தின் அளவு அதிகரித்துள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

இந்த ஆண்டின் முதல் 8 மாதங்களில் மூவாயிரத்து 863 மில்லியன் டொலர் இலங்கைக்கு அனுப்பட்டுள்ளது.

2022ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் 2 ஆயிரத்து 215 மில்லியன் டொலர் பணவனுப்பல் இடம்பெற்றது.

இந்தநிலையில் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் இந்த ஆண்டு வெளிநாட்டு பணியாளர்களின் பணவனுப்பல் 74.4 சதவீதத்தால் அதிகரிப்பை பதிவு செய்துள்ளது. (அ)

# விபத்துக்கு உள்ளான பேருந்து சாரதிக்கும் நடத்துநருக்கும் வேதனத்துடன் விடுமுறை!

கொழும்பு, ஒக். 08

கொள்ளுப்பிட்டி, லிபர்ட்டி சுற்றுவட்டத்திற்கு அருகில் பேருந்தொன்றின் மீது மரமொன்று வீழ்ந்து விபத்துக்குள்ளான நிலையில் குறித்த பேருந்தின் சாரதிக்கும் நடத்துநருக்கும் ஒருவார காலம் வேதனத்துடன் விடுமுறை வழங்குவதற்கு இலங்கை போக்குவரத்து சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

குறித்த இருவரினதும் மன அழுத்தத்தை கருத்திற்கொண்டு இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக இலங்கை போக்குவரத்து சபையின் தலைவர் லலித் டி அல்விஸ் தெரிவித்துள்ளார்.

அத்துடன் குறித்த இருவரையும் நேற்று முன் தினம் இலங்கை போக்குவரத்திற்கு சபையின் தலைமையகத்திற்கு அழைத்து, அதன் தலைவர் அவர்களுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டுள்ளார்.

கொழும்பு கொள்ளுப்பிட்டி - லிபர்ட்டி சுற்றுவட்டத்திற்கு அருகில் பேருந்தொன்றின் மீது மரம் வீழ்ந்ததில் ஏற்பட்ட விபத்தில் 5 பேர் பலியானதுடன் 5 பேர் காயமடைந்தனர்.

இந்தநிலையில், கொழும்பு நகரில் உள்ள மரங்களின் உறுதித்தன்மை தொடர்பில் விசேட குழுவொன்று அடுத்த வாரம் ஆய்வினை மேற்கொள்ளவுள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

விடயத்துக்கு பொறுப்பான இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னக்கோனின் பணிப்புரைக்கு அமைய இந்த செயற்பாடு இடம்பெறவுள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம் ஆசிரி கருணாவர்தன தெரிவித்துள்ளார். (அ)

# களஞ்சியசாலை தீப்பரவல் கட்டுக்குள் கொண்டுவரப்பட்டது!

கொழும்பு, ஒக். 08

ஊறுகொடவத்த பகுதியிலுள்ள களஞ்சியசாலை ஒன்றில் ஏற்பட்டிருந்த தீப்பரவல் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது.

கருவாப்பயிர் சார்ந்த உற்பத்தி பொருட்கள் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த பகுதி ஒன்றிலேயே தீப்பரவல் ஏற்பட்டிருந்தது.

தீப்பரலை கட்டுப்படுத்துவதற்காக 8 தீயணைப்பு வாகனங்கள் அங்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தன.

சுமார் 4 மணித்தியாலங்களுக்கு பின்னர் தீப்பரவல் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த தீப்பரவல் ஏற்பட்டமைக்கான காரணமாக இது வரையில் வெளியாகாத நிலையில் குறித்த களஞ்சியசாலை முழுமையாக தீக்கிரையாகியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஈழநாடு
Eelanadu
08.10.2023 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம், புரட்டாதி 21

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# இந்தியாவிற்கான பயணிகள் கப்பல் சேவை

தென்னிந்தியாவின் நாகபட்டினத்துக்கும் இலங்கையின் வடபுலத்தின் காங்கேசன்துறைக்குமான பயணிகள் கப்பல் சேவை ஆரம்பிக்கப்படவுள்ளது. நீண்டகாலமாக இந்த விடயம் பேசப்பட்டு வந்தது. எனினும் பல்வேறு காரணங்களால் பிற்போடப்பட்டுவந்தது. இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையில், மக்கள் தொடர்பாடலை ஏற்படுத்தும் யோசனை பல வருடங்களாக முன்வைக்கப்பட்டு வந்திருக்கின்றது. உள்நாட்டு யுத்தம் அதற்கான சாத்தியத்தை சீர்குலைத்ததுடன், தென்னிலங்கையின் கடும்போக்காளர்கள் மத்தியிலிருந்தும் எதிர்ப்புகள் கிளம்பின. போருக்கு பின்னரான சூழலில் இவ்வாறான திட்டங்களை முன்னெடுப்பதற்கான சாதகமான சூழல் இருந்தாலும் கூட, சீன சார்பு ராஜபக்ஷ நிர்வாகம் இவ்வாறான திட்டங்களை முன்னெடுப்பதை ஆதரிக்கவில்லை. மாறாக, சீனாவுடன் அதிகம் நெருங்கிச் செல்வதற்கான திட்டங்களுக்கே முன்னுரிமையளித்தது. வெளிப்படையாக இந்தியாவை ஆதரிப்பது போன்று காண்பித்துக் கொண்டாலும்கூட உள்ளுக்குள் இந்திய எதிர்ப்பு நிகழ்ச்சி நிரலையே முன்னெடுத்தது. இதன் காரணமாகவும் இவ்வாறான திட்டங்களை முன்னெடுப்பதில் நெருக்கடிகள் ஏற்பட்டன.

தென்னிந்தியாவுக்கும் இலங்கையின் வடக்கு, கிழக்குக்கும் இடையில் மக்கள் தொடர்பாடலை அதிகரிக்கச் செய்வதில் பயணிகள் கப்பல் சேவை முதன்மையான பங்களிப்பை வழங்கக் கூடியது. நாடு மோசமான பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கியிருக்கின்ற சூழலில் தென்னிந்தியாவிற்கும் இலங்கைக்குமிடையிலான இணைவுகள், பொருளாதாரரீதியில் இலங்கை மக்களுக்கு வரப்பிரசாதமாகும். இரண்டு நாடுகளுக்கும் இடையிலான மதரீதியான சுற்றுலாவில் இது பெரியளவில் செல்வாக்குச் செலுத்தும். இரண்டு பகுதிகளுக்கும் இடையிலான வர்த்தக நடவடிக்கைகளுக்குமான வாய்ப்புக்களை ஏற்படுத்தும். இது இலங்கையின் வடபுலத்திற்கும் மட்டுமல்லாது, ஒட்டுமொத்த இலங்கைக்கும் பொருளாதார ரீதியில் நன்மையானது.

இந்தியா வேகமாக வளர்ச்சியடைந்துவருகின்ற ஒரு பொருளாதார சக்தி. குளோபல் சவுத்தின் தலைமை. இந்த நிலையில், இந்தியாவிற்கும் இலங்கைக்குமான தொடர்பாடல் அதிகரிக்கப்பட வேண்டியது, பொருளாதார ரீதியில் அத்தியாவசியமானதொன்று. பொருளாதார ரீதியில் இலங்கை முன்னோக்கி நகர வேண்டுமாயின், ஒரு பொருளாதார சக்தியாக எழுச்சி பெற்றிருக்கும் உடனடி அயல்நாடும், பிராந்திய சக்தியுமான இந்தியாவுடன் ஊடாடுவதே இலங்கைக்கு நன்மையானது.

நாடு ஒரு மோசமான பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கியபோது, உடனடியாக இந்தியாவே கைகொடுத்திருந்தது. மோடி அரசாங்கத்தின் அயலுறவுக் கொள்கையான, 'முதலில் அயலவர்கள்' என்னும் கோட்பாட்டின் கீழ், பெரியளவில் நன்மையை பெற்றிருக்கும் ஒரேயொரு நாடு இலங்கையாகும். ஆனால்,அந்த விடயம் எந்தளவிற்கு இலங்கையின் ஆட்சியாளர்களால் புரிந்துகொள்ளப்பட்டிருக்கின்றது என்பது சந்தேகமே!

இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொண்டு, தமிழ் புலம்பெயர் சமூகம் முதலீடுகளை மேற்கொள்வது தொடர்பில் சிந்திக்க வேண்டும். முதலீட்டுக்கான பாதுகாப்பு தொடர்பில் புலம்பெயர் சமூகத்தின் மத்தியில் அச்சமுண்டு. அந்த அச்சம் மிகவும் நியாயமானது. இலங்கையின் அரசியல் சூழலை நம்பி ஒரு தமிழர் பெரியளவில் முதலீடுகளை மேற்கொள்ள முடியுமா என்பது சந்தேகம்தான். இதனை எதிர்கொள்வதற்கு வழிகள் உண்டு. தென்னிந்தியாவில் வர்த்தக நிறுவனங்களை பதிவு செய்து, இந்தியாவின் முதலீட்டாளர்களாக உள்நுழைவதே, ஒரேயொரு சாத்தியமான உபாயமாகும். இதன் மூலம், புலம்பெயர் சமூகத்தின் முதலீடுகளுக்கு இந்தியாவின் பாதுகாப்பு உண்டு. இந்தியாவின் அரவணைப்பில் முதலீடுகளை மேற்கொள்ளும் போது, முதலீட்டுக்கான பாதுகாப்பும் உறுதிப்படுத்தப்படுகின்றது. அத்துடன், இந்தியாவுடன் இணைந்து பெரியளவில் வளர்ச்சியுறுவதற்கான வாய்ப்பு கிடைக்கின்றது.

பயணிகள் கப்பல் சேவை வடபுலத்திற்கும் இலங்கைக்கும் ஒரு வரப்பிரசாதமாகும். இதனை உச்சபட்சமாக பயன்படுத்திக் கொள்வதில்தான் அனைவருக்குமான நன்மை தங்கியிருக்கின்றது.

# காங்கேசன்துறை மாங்கொல்லை பகுதியில் காணிகளை எல்லைப்படுத்தும் நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஒக். 08

காங்கேசன்துறை , மாங்கொல்லை பகுதியில் இராணு ணவத்தினர் வெளியேறிய பிரதேசங்களில் உள்ள தமது காணிகளை அறுக்கைப்படுத்தும் நடவடிக்கைகளில் காணி உரிமையாளர்கள் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த 33 வருடங்களுக்கும் அதிகமாக மாங்கொல்லை பகுதி இராணுவ உயர் பாதுகாப்பு வலயமாக இராணுவ கட்டுப்பாட்டுக்குள் நிலையில் கடந்த ஜூன் மாத கால பகுதியில் அப்பகுதியில் இருந்த நிலைகொண்டு இருந்த இராணுவத்தினர் அங்கிருந்து வெளியேறினர்.

இராணுவத்தினர் வெளியேறியபோதிலும் அப்பகுதி இராணுவத்தினரால் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்படாததால் , மக்கள் மீள் குடியேற முடியாத நிலைமை காணப்பட்டது.

அதனை அடுத்து , தம்மை மீள் குடியேற தற்போது அனுமதிக்காவிடினும் , எங்கள் காணிகளை எல்லைப்படுத்தி காணிகளை அறுக்கைப்படுத்த அனுமதிக்க வேண்டும் என கடிதம் மூலம் தெல்லிப்பழை செயலரிடம் கோரப்பட்டதை அடுத்து வேலி அடைப்பதற்கான அனுமதிகள் வழங்கப்பட்டன.

அனுமதி வழங்கப்பட்டதை அடுத்து காணி உரிமையாளர்கள் தமது காணிகளை எல்லைப்படுத்தி வேலிகளை அடைத்து வருகின்றனர்.

அதேவேளை கடந்த 33 வருட காலமாக இராணுவ கட்டுப்பாட்டு பகுதியினுள் காணப்பட்ட மாங்கொல்லை ஞான வைரவர் ஆலய புனரமைப்புப் பணிகளையும் அப்பகுதி மக்கள் முன்னெடுத்துள்ளனர்

இராணுவத்தினர் எமது காணியில் இருந்து வெளியேறி 3 மாத காலத்திற்கு மேலாகியும் எமது சொந்த காணிகளில் மீள் குடியேற இன்னமும் அனுமதி கிடைக்கவில்லை. எனவே எம்மை மீள் குடியேற்ற சம்பந்தப்பட்ட தரப்புக்கள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

(அ)

# தென்மராட்சியில் வீடு மீது தாக்குதல்



யாழ்ப்பாணம், ஒக். 08

தென்மராட்சி பகுதியில் வீடொன்றினுள் அத்துமீறி நுழைந்த அடையாளம் தெரியாத சிலர் வீட்டின் மீது தாக்குதல் மேற்கொண்டு , வீட்டில் இருந்த உடைமைகள் மற்றும் வீட்டுக்கு தீ வைத்திட்டு தப்பிச் சென்றனர்.

மீசாலை மேற்கில் உள்ள வீடொன்றினுள் நேற்று அதிகாலை 01 மணியளவில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதனைத் தொடர்ந்து, வீட்டில் இருந்த பெறுமதியான பொருட்களுக்கு தீ வைத்து தப்பி சென்றுள்ளது

குறித்த சம்பவத்தில்டன் வீட்டில் மூன்று பெண்கள் உள்ளிட்ட ஐவர் இருந்தபோதிலும் அவர்கள் மீது தாக்குதல் மேற்கொள்ளப்படவில்லை என ஆரம்பகட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது.

சுமார் 10 இலட்ச ரூபாய்க்கும் அதிகமான சொத்துக்களுக்கு சேதம் ஏற்பட்டுள்ள நிலையில் சம்பவம் தொடர்பில் சாவகச்சேரி பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

(அ)

# இறைவரி, மதுவரி, சுங்கத் திணைக்களங்களை வினைத்திறன் கொண்டதாக மாற்ற நடவடிக்கை

கொழும்பு, ஒக். 08

உள்நாட்டு இறைவரித் திணைக்களம், மதுவரித் திணைக்களம் மற்றும் சுங்கத் திணைக்களத்தை வினைத்திறனுள்ளதாக்கும் வகையில், இந்த நிறுவனங்களுக்கு 2024 ஆம் ஆண்டு முதல் இலக்குகளை வழங்குவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்துள்ளார்.


அதன்படி அந்த நிறுவனங்கள் ஈட்டவேண்டிய வருமானம் உள்ளிட்ட இலக்குகள் வழங்கப்பட உள்ளன. அரசாங்க வருவாயை அதிகரிப்பதற்கு மேற்படி நிறுவனங்கள் முறையாக செயற்பட வில்லை எனவும் சர்வதேச நாணய நிதியம் அரசாங்கத்திற்கு அறிவித்துள்ளது.

அதனடிப்படையில் அரசாங்கத்தின் வருமானத்தை ஈட்டுவதில் இது தொடர்பான நிறுவனங்கள் பலவீனம் காட்டி வருவது அரசாங்கத்தினால் அவதானிக்கப்பட்டுள்ள தாகவும் அவற்றில் உள்ளூர் வருவாய் திணைக்களம் மிகவும் நலிவடைந்த நிறுவனமாக காணப்படுவதாகவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

இதன்படி, ஜனாதிபதியின் உத்தரவுக்கமைய, எதிர்வரும் 2024ஆம் ஆண்டு முதல் அரசாங்கம் வழங்கிய இலக்குகளை நோக்கி உரிய நிறுவனங்கள் செயற்பட வேண்டும் என அரசாங்கத்தின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

(அ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



பகிர்வு -98

# ‘வல்லுவம்’, ஒரு புது வரவாய்...!

**கணபதி சர்வானந்தா**


யாழ் மாவட்டச் செயலகக் காலாசராப் பிரிவு காலாண்டுச் சஞ்சிகையாக ஒரு மின்னிதழை வெளியிட்டிருக்கிறது. அதன் பெயர் ‘வல்லுவம்’. அந்த மின்னிதழ் கடந்த 06.10.2023 அன்று மாவட்டச் செயலகத்தில் மாவட்டச் செயலாளரும் அரசாங்க அதிபருமான அ.சிவபாலசுந்தரனால் உத்தியோக பூர்வமாக வெளிடப்பட்டது.

வல்லுவம் என்ற சொல்லுக்கு அகதத்துவம், அபரசக்தி, ஆதீனத்துவம், அச்சுவம் எனப் பல பொருள் உண்டு. எனினும் எம் முன்னோர் உபயோகித்த பணம் வைக்க உதவும் கைப்பையையும் ‘வல்லுவம்’ என்றே அழைத்தனர். பெரும்பாலும் அது பனையோலையால் இழைக்கப்பட்டு அழகுற வடிவமைக்கப் பட்டிருக்கும்.

யாழ்.மாவட்டச் செயலகத்திலும் அதன் அதிகாரத்துக்குட்பட்டுக் காணப்படும் பிரதேசச் செயலகங்களில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களிடையே இலைமறை காயாக உள்ள இலக்கிய ஆளுமைகளை இனங்காணுவதும், அவர்கள் திறமைகளை வெளிக் கொணர்வதுமாக அச்சஞ்சிகையின் செயற்பாடுகள் அமையும் என அரச அதிபர் அச்சஞ்சிகைக்கான வாழ்த்துச் செய்திலேயே குறிப்பிட்டதை ஞாபகப்படுத்திக் கொண்டு...

மேற்குறிப்பிட்ட அரச அலுவலங்களில் கடமையாற்றும் அரச உத்தியோகத்தர்கள் வெறுமனே தமது அலுவலகப் பணிகளோடு நின்றுவிடாது தம்மிடையே உள்ள ஆக்கபூர்வமான இலக்கியத் திறமைகளையும் இச்சஞ்சிகை மூலம் அடையாளப்படுத்த முடியும் என அந்த இதழ் குழுவினர் நம்புவது தெரிகிறது. அதே சமயம் யாழ்.மாவட்டதின் கலை,கலைசார பண்பாடு தொடர்பான முயற்சிகளை முன்னிலைப்படுத்தி அவை தொடர்பான தொலை நோக்குச் சிந்தனைகளின் அடிப்படையில் பல பணிகளைத் திட்டமிட இச்சஞ்சிகையின் முயற்சிகள் உதவும் என்றும் அவர்கள் எதிர்பார்ப்பது தெரிகிறது.

இவை அனைத்தையும் கருத்தில் கொண்டு யாழ்.மாவட்டச் செயலகக் கலாசாரப் பிரிவு இவ்விதழை ஓர் இலத்திரனியல் சஞ்சிகையாக வெளியிட முன்வந்திருப்பது பாராட்டுக்குரியது. இதனை ஒரு புதிய முயற்சியாகவும், முன் முயற்சியாகவும் பார்க்கலாம். அதே சமயம் இதனை ஓர் அச்சுப் பிரதியாகக் கொண்டு




வருவதில் உள்ள பொருளாதாரச் சிக்கல்களைக் கருத்தில் கொண்டே இதனை ஓர் இலத்திரனியல் சஞ்சிகையாகக் கொண்டு வருவ தில் அவர்கள் ஆர்வங் காட்டி இருக்கலாம். இருந்தும் காலப் போக்கில் இதனை அச்சுவடி வத்தில் கொண்டு வரக் கூடிய சாத்தியங்களும் இல்லாமலில்லை. ஏனெனில் அதன் கனதியைக் கருத்தில் கொண்ட அரச அதிபரின் வழிகாட்டலிலேயே இச்சஞ்சிகை வெளியிடப்படுவது அந்த நம் பிக்கையைத் துளிர்விடச் செய்கிறது. அவரே ‘வல்லுவம்’ என்று அச்சஞ்சிகைக்குத் தலைப் பிட்டவர் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

இதுபோன்ற சஞ்சிகையை ஏன் வெளிக்கொண்டு வர வேண்டும் என்பதற்குப் பல காரணங்கள் உண்டாயினும் ஒரு மாவட்டச் செயலகமானது தன் ஆட்சிக்குட்பட்ட பிரதேசத்திலுள்ள செயலகங்களில் கடமையாற்றும் பணியாளர்கள் நலனை முன்னிறுத்தி அவர்கள் மன நல மேம்பாட்டை வளப்படுத்துவதாகவும் இருக்கும் என்ற வகையில் இதனை முதன்மைப்படுத்தலாம். அதே சமயம் அவர்கள் மன அழுத்தங்களைத் திசைதிருப்பும் வடிகாலாகவும், அவர்கள் சிந்தனையைச் செப்பனிட உதவும் ஒரு அளவு கோலாகவும் இம் முயற்சியைப் பார்க்கலாம்.

உண்மையிலேயே பிரதேச செயலகத்தில் பணியாற்றுபவர்கள் தான் அதிக மக்கள் தொடர்பாடலைக் கொண்டிருக்கின்றனர். அவர்களே அதிகம் மக்களைச் சந்திக்கின்றனர். அச்சந்திப்புகள் அனைத்திலும் அவர்கள் அனுபவம் என்பது பெறுமதிமிக்கவை. அவர்கள் எதிர் நோக்கும் அச்சந்திப்புகளின் பின்னணியில் ஆயிரம் கதைகள் உண்டு.அக் கதைகளில் “மக்களுக்கு இதனைச் சொன்னால் சமூக ஆரோக்கியத்தை வலுவுறப் பேணலாம்” என்று நம்புவதைத் தேர்ந்தெடுத்து அவற்றை இலக்கிய வடிவங்களாக மாற்றிச் சொல்ல ஒரு தளத்தை இச்சஞ்சிகை ஏற்படுத்திக் கொடுக்கிறது. பல சமூக வழிகாட்டல்களை, சமூகச் சிந்தனைகளை, சமூகச் சீர்திருத்தங்களை இதனூடாக மேற்கொள்ளலாம். அதற்கு இது ஒரு சிறந்த வழி என்பது எனது கருத்து. அத்தகைய பெறுமதிமிக்க இதழ் குழுவினரின் சிந்தனையைச் சமூகம் இனங் கண்டுகொள்ளுமேயானால் அதை விட இச்சஞ்சிகைக்குக் கிடைக்கக் கூடிய வெகுமதி வேறொன்றிருக்கு முடியாது என்பது எனது கருத்து.

இது ஓர் இலத்திரனியல் சஞ்சிகைதானே எப்படி சாதாரண மக்களைச் சென்றடையும் என்ற ஒரு கேள்வி உங்கள் மனதில் எழுவது தெரிகிறது. இப்போது தானே அதற்குப் பல வழிகளுண்டு. நல்லவற்றைக் கண்டால், அது பொதுமக்களுக்குப் பயன் உள்ளது என்று கண்டால் அதனை மறு பிரசுரம் செய்யப் பலர் காத்திருக்கின்றனர். பத்திரிகைகள், கைத்தொலைபேசி உரிமையாளர்கள் மற்றும் பல சமூக ஊடகங்களைத் தம்வசம் வைத்திருப்பவர்கள் எனப் பலர் அவற்றை மக்களிடையே கொண்டு செல்ல வாய்பளிப்பார்கள். பொதுவாக முகநூல் வழியே இதே போன்று பல விடயங்கள் பகிரப்பட்டு அவை பலரைச் சென்றடைவதைப் பார்த்திருக்கிறோம். குறிப்பாகக் காணொளிவாயிலாப் பல விந்தைகள் நடைபெறுவது கண்கூடு. அதனூடாகப் பகிருகின்ற பல விடயங்கள் பலரது வாழ்வை மேம்படுத்துகிறதாக இருப்பது பாராட்டுக்குரியது. உள்ளவரையும் இல்லாதவரையும் இணைக்கின்ற பாலமாக அது அமைந்து காணப்படுகிறது.

இதன் பணிக் குழுவினருக்கு ஒரு வேண்டுகோள்! இச் சஞ்சிகையில் மாவட்ட, பிரதேசச் செயலகப் பணியாளர்கள் மட்டுமே ஆக்கங்களை அனுப்பி உதவலாம், அதில் பங்குகொள்ளலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதனை ஓர் ஒழுங்காக நீங்கள் கருதலாம். இருந்தும் அதனைப் படிக்கும் இலக்கிய ஆர்வலர்கள் மற்றும் இலக்கிய கர்த்தாக்கள் அச்சஞ்சிகை பற்றி என்ன கருத்தினைக் கொண்டுள்ளார்கள், அச்சஞ்சிகை கொண்டுள்ள ஆக்கங்கள் பற்றிய சிறப்புகள் பற்றிய விடயங்களைப் பெற்று ஆகக் குறைந்தது ஒரு பக்கத்திலாவது பிசுரிப்பீர்களேயானால் அது ஒரு புது வழியைத் திறப்பதற்கு வழிகோலலாம் என்பது எனது எண்ணம். அதனால் சஞ்சிகை மேலும் சிறப்புறும். அம்முயற்சி திருவினையாக்கும். •

# இந்தவார ராசிபலன் 08.10.2023 -14.10.2023

ஞாயிற்றுக்கிழமை
சோபகிருது வருடம் - புரட்டாதி 21

நல்ல நேரம்: 7.30 - 9.00 ராகு காலம் : 4.30 - 06.00 திதி : தசமி

## மேஷம்
[ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

அமைதியாகச் செயல்பட்டு பலன்களைப் பெறுவீர்கள். செல்வாக்கை அதிகரிக்க முயற்சிப்பீர்கள். யோசித்து பேசுவீர்கள். பெரியோரின் ஆலோசனைப்படி நடப்பீர்கள். உத்தியோகஸ்தர்கள் சுறுசுறுப்பாக இருப்பீர்கள். வியாபாரிகளுக்கு கூட்டாளிகளுடன் ஒற்றுமையான சூழல் நிலவும். விவசாயிகளுக்கு வேலையாள்களின் ஆதரவு கிடைக்கும். அரசியல்வாதிகளுக்கு வெற்றி கிடைக்கும். கலைத்துறையினருக்கு வாய்ப்புகள் தேடி வரும். பெண்கள் வீண்விவாதங்களைத் தவிர்க்கவும்.

## ரிஷபம்
[ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

மனக்கவலையிலிருந்து விடுபடுவீர்கள். தொழிலை சீராக நடத்துவீர்கள். உறவினர்களால் நற்பலன்கள் கிடைக்கும். சிறிது மருத்துவச் செலவுகள் உண்டாகும். உத்தியோகஸ்தர்கள் பாராட்டு பெறுவீர்கள். வியாபாரிகளுக்கு தன்னம்பிக்கை அதிகரிக்கும். விவசாயிகள் தேவையான உபகரணங்களை வாங்குவீர்கள். அரசியல்வாதிகள் பிரச்னைகளுக்கு சுமுகத் தீர்வு காண்பீர்கள். கலைத்துறையினருக்கு பொருளாதார அபிவிருத்தி கிடைக்கும். பெண்களுக்குப் பூர்வீகச் சொத்துகளால் அனுகூலம் ஏற்படும். மாணவர்கள் வெளியூர் சென்று படிக்கும் வாய்ப்பு கிடைக்கும்.

## மிதுனம்
[ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

பொதுகாரியங்களில் ஈடுபடுவீர்கள். தொழிலில் கூடுதல் முதலீடு செய்வீர்கள். உற்சாகமாய் பணிபுரிவீர்கள். வழக்குகளில் சாதகமான சூழல் நிலவும். உத்தியோகஸ்தர்கள் மேலதிகாரிகளிடம் அனுசரித்து நடப்பார்கள். வியாபாரிகள் நேரடியாக வியாபாரத்தை நடத்துவீர்கள். விவசாயிகளுக்கு கால்நடைகளால் லாபம் கிடைக்கும். அரசியல்வாதிகள் திட்டமிட்ட பணிகளைத் தீவிரமாக முடிப்பார்கள். கலைத்துறையினருக்கு பணவரவு அதிகரிக்கும். பெண்களுக்கு நன்மதிப்பு கிடைக்கும். மாண வர்களுக்கு பெற்றோரின் ஆதரவு கிடைக்கும்.

## கடகம்
[ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

பயணங்களால் புதிய அனுபவம் கிடைக்கும். தொழிலில் நல்ல முன்னேற்றம் கிடைக்கும். கடுமையான போட்டிகளை எதிர்கொள்ள வேண்டி வரும். உத்தியோகஸ்தர்கள் பணிகளை உடனுக்குடன் முடிப்பீர்கள். வியாபாரிகள் கொடுக்கல் - வாங்கலில் வளர்ச்சியைக் காண்பீர்கள். விவசாயிகளுக்கு விளைச்சல் பெருகும். கலைத்துறையினருக்குப் புதிய ஒப்பந்தங்கள் கிடைக்கும். பெண்கள் உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும்.

## சிம்மம்
[ மகம், பூரம், உத்திரம் 1 ]

உடனிருப்போருடன் சகஜமாகப் பழகுவீர்கள். பெயரும் புகழும் உயரும். இல்லத்தில் மகிழ்ச்சி நிறையும். அரசு விஷயங்களில் கவனமாக இருக்கவும். உத்தியோகஸ்தர்களுக்கு வேலைப்பளு அதிகரிக்கும். வியாபாரிகள் வியாபாரத்தைப் பெருக்குவீர்கள். விவசாயிகளுக்கு அரசு மானியம் கிடைப்பதில் தாமதம் ஏற்படும். அரசியல்வாதிகளுக்கு வெற்றிகள் கிடைக்கும். கலைத்துறையினர் சக கலைஞர்களின் பாராட்டுகளைப் பெறுவீர்கள்.

## கன்னி
[ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

நெடுநாள் பிரச்னைகள் தீரும். கொடுத்த வாக்கைக் காப்பாற்ற முனைப்புடன் செயல்படுவீர்கள். குடும்பத்துடன் மகிழ்ச்சியான பயணம் மேற்கொள்வீர்கள். உத்தியோகஸ்தர்கள் சக ஊழியர்களின் வேலைச் சுமையில் பங்கேற்பீர்கள். வியாபாரிகளுக்கு கொள்முதலில் நல்ல லாபம் கிடைக்கும். விவசாயிகள் விளைச்சலில் புதிய இலக்குகளை எட்டுவார்கள். அரசியல்வாதிகள் கட்சிப் பணிகளில் கவனமாக இருக்கவும். கலைத்துறையினர் யோசித்து செயல்படவும். பெண்களுக்கு மருத்துவச் செலவு குறையும். மாணவர்கள் மனவலிமையைப் பெறுவார்கள்.

## துலாம்
[ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

குடும்பத்தில் சுப நிகழ்ச்சிகள் நடக்கும். நண்பர்களின் உதவியுடன் புதிய தொழில் தொடங்குவீர்கள். வருமானம் உயரும். உங்கள் சொல்லுக்கு மரியாதை உயரும். உத்தியோகஸ்தர்கள் நற்பெயரை எடுப்பீர்கள். வியாபாரிகள் நவீன பொருள்களை வாங்கி விற்பனை செய்வீர்கள். விவசாயிகளுக்கு கால்நடைகளால் லாபம் கிடைக்கும். அரசியல்வாதிகள் தொண்டர்களிடம் அனுசரணையாக இருப்பார்கள். கலைத்துறையினரின் திறமைகள் வெளிப்படும்.

## விருச்சிகம்
[ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

குடும்பப் பிரச்னையை சரி செய்வீர்கள். தடைபட்டு நின்ற திருமணப் பேச்சை வெற்றிகரமாக முடிப்பீர்கள். இழுபறியான சொத்து பிரச்னைக்கு சாதகமான முடிவு கிடைக்கும். உடல் உபாதைகள் சீரடையும். உத்தியோகஸ்தர்கள் அலுவலக வேலையைத் திட்டமிட்டபடி முடிப்பீர்கள். வியாபாரிகள் கடையை விரிவுபடுத்துவார்கள். விவசாயிகளுக்கு புதிய குத்தகைகள் கிடைக்கும். அரசியல்வாதிகள் நேர்மையாக நடப்பார்கள்.

## தனுசு
[ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

உங்கள் பேச்சாலும் செயலாலும் பாராட்டுகளைப் பெறுவீர்கள். அரசு கௌரவமும் கிடைக்கும். சேமிப்பு அதிகரிக்கும். உடல் ஆரோக்கியத்தை மேம்படுத்துவீர்கள். உத்தியோகஸ்தர்களின் புத்திசாலித்தனம் வெளிப்படும். வியாபாரிகள் சிறிய முதலீடுகளைச் செய்வார்கள். விவ சாயிகளுக்கு மகசூல் பெருகும். அரசியல்வாதிகள் புதிய திட்டங்களைச் செயல்படுத்துவார்கள். கலைத்துறையினர் ஆக்கப்பூர்வ முயற்சிகளில் ஈடுபடுவார்கள்.

## மகரம்
[ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

தடைபட்ட காரியங்களை நிறைவேற்றத் தொடங்குவீர்கள். தொழிலில் பாதிப்பு இருக்காது. பிரிந்த உறவினர்கள் குடும்பத்துடன் இணைவார்கள். உத்தியோகஸ்தர்கள் சிக்கலான பணிகளை முடிப்பார்கள். வியாபாரிகள் தங்களது வியாபாரத்தில் இருந்த மந்த நிலையை மாற்றுவார்கள்.விவசாயிகளின் செயல்திறன் அதிகரிக்கும். அரசியல்வாதிகள் சுறுசுறுப்புடன் பணியாற்றுவார்கள். கலைத்துறையினர் ரகசியங்களைப் பகிர வேண்டாம். பெண்கள் பொறுப்புடன் இருப்பார்கள். மாணவர்கள் ஆசிரியர் பேச்சுக்கு மரியாதை அளிப்பார்கள்.


## கும்பம்
[ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

செல்வாக்கை உயர்த்திக் கொள்வீர்கள். தொழிலை மேம்படுத்த உதவிகள் கிடைக்கும். அதிர்ஷ்ட வாய்ப்புகள் கிடைக்கும். கணக்குகளை அரசிடம் சரியாகச் சமர்ப்பிக்கவும். உத்தியோகஸ்தர்களுக்குப் பாராட்டு கிடைக்கும். வியாபாரிகளின் திட்டங்களுக்கு வெற்றி கிடைக்கும். விவசாயிகள் பிறரின் ஆலோசனையைக் கேட்பார்கள். அரசியல்வாதிகள் எவருக்கும் உத்தரவாதம் அளிக்க மாட்டார்கள்.கலைத்துறையினர் கடினமான பயிற்சிகளில் ஈடுபடுவார்கள். பெண்கள் ஆன்மிகத்தால் உயர்வடைவார்கள்.

## மீனம்
[ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

தொழிலில் ஊக்கத்துடன் பணியாற்றுவீர்கள். வெளியூரில் இருந்து நல்ல செய்திகள் கிடைக்கும். குடும்பத்தில் சுப நிகழ்ச்சிகள் நடக்கும். பெற்றோரின் மனக்குறைகளைத் தீர்ப்பீர்கள். உத்தியோகஸ்தர்கள் பணியை விரைந்து முடிப்பீர்கள். வியாபாரிகள் பிறருக்கு உதவுவீர்கள். விவசாயிகளுக்கு நன்மைகள் கிடைக்கும். அரசியல்வாதிகள் தன்னடக்கத்துடன் இருப்பார்கள். கலைத்துறையினர் புதிய ஒப்பந்தங்களைப் பெறுவார்கள். பெண்கள் கணவரிடம் விட்டுக் கொடுத்து நடப்பார்கள். மாணவர்கள் பிறரிடம் சகஜமாகப் பழகுவார்கள்.

# “அப்படியே ஆகட்டும் நண்பா!” ரணிலிடம் சீன அதிபர் சொல்லப்போகிறாரா?



சென்னை மடல் -பகவான் சிங்-

சர்வதேச செலாவணி நிதியத்தின் உதவித் தொகையின் முதல் தவணை மார்ச் மாதத்தில் வந்ததையும், அதிபர் ரனில் விக்கிரமசிங்க, அரசின் செலவினங்களைத் திறமையாகக் கையாள்வதையும் அடுத்து, இலங்கையின் பொருளாதாரம் ஏறுமுகமாகத் தொடங்கியுள்ளது என்ற சில அண்மைச் செய்திகளைப் படித்து நான் மகிழ்ந்தேன். உணவுப் பொருள் மற்றும் எரிபொருள் தட்டுப்பாட்டை எதிர்த்துத் தெருவில் இறங்கி மக்களைப் போராடவைத்து, ராஜபக்ச அதிகாரத்தைப் பறிக்கச் செய்த, முன்னெப்போதும் இல்லாத பொருளாதார நெருக்கடியிலிருந்து இலங்கையை மீட்டெடுக்கத் தற்போதைய சூழலில் பக்குவப்பட்ட தலைவரான ரணிலால்தான் முடியும் என்று எனது முந்தைய ‘ஈழநாடு’ கட்டுரைகளில் எழுதிவந்தேன். எனினும், ‘கணிசமான இறங்குமுக அபாயங்கள்’ குறித்துப் பேசிய உலக வங்கியின் அண்மை அறிக்கை என்னைக் கவலையடையச் செய்கிறது. ஓகஸ்ட் மாதம் இலங்கை அரசின் மக்கள் தொகை மற்றும் புள்ளியியல் துறை வெளியிட்ட அறிக்கையில், பண வீக்க விகிதம் 6.3 வீதம் அளவுக்குக் குறைந்து, கடந்த இரண்டாண்டுகளில் இல்லாத வகையில் ஒற்றை இலக்கத்தை எட்டியிருப்பதாக அறிக்கை வெளியானதை அறிந்திருப்பீர்கள். கொடும் ஈழப் போர் முடிவுக்குப் பிறகு, தங்கள் வாழ்வு பல மடங்கு ஒளிமயமாக விளங்கப்போகிறது என்று நம்பிக்கை கொண்டிருந்த காலத்தில் கடும் பொருளாதார நெருக்கடியால் அழுத்தப்பட்டுத் தவித்துக்கொண்டிருந்த மக்களுக்கு ஒரு நற்செய்தியாக இது விளங்கியது. அந்தப் பொருளாதார நெருக்கடியின் உச்ச கட்டத்தில், கடந்த ஆண்டு செப்ரெம்பர் மாதத்தில் இந்தப் பணவீக்க விகிதம் 69.8 வீதம் என்ற பூதாகார உரு எடுத்திருந்தது. பெரும் பொருளாதார நெருக்கடியை அடுத்த கால் காலிமுக புரட்சி, கோட்டாபய ராஜபக்சவைப் பதவியிலிருந்து இறக்கியதுடன், சில நட்பு நாடுகள் மட்டுமல்லாமல், உலக வங்கி மற்றும் சர்வ தேச செலாவணி நிதியம் (IMF) ஆகியவை நிதியுதவியளிப்பதாக வாக்குறுதி அளித்த நிலையில் ரணில் விக்கிரமசிங்க புதிய அதிபராகப் பதவியேற்றார். தடுமாறித் தத்தளித்துக்கொண்டிருந்த அத்தீவு தேசத்தின் கடனை மறு சீரமைக்கும் உறுதியை சர்வதேச செலாவணி நிதியத்துக்கு அளித்தது உள்ளிட்ட, பல வழிகளில் இலங்கைக்கு ஓடிச் சென்று உதவிய முதல் நாடு இந்தியா தான் என்பதும் யாவரும் அறிந்ததே. இப்படிப்பட்ட கடன் மறு சீரமைப்பைக் கடன் வழங்கியுள்ள பெரிய நாடுகள் செய்வதாக உறுதியளிக்கவேண்டும் என்பது, நிதியுதவி அளிக்க சர்வதேச செலாவணி நிதியம் வைத்த நிபந்தனையாகும். ஜப்பான் மற்றும் பாரிஸ் கிளப் (மூன்றாம் உலக நாடுகளின் நெருக்கடிக் காலத்தில் உதவும் ஐரோப்பிய நாடுகளின் கூட்டமைப்பு) ஆகியவையும் இத்தகைய உத்தரவாதங்களை அளித்தன. இறுதியாக, சீனா, மூன்று பில்லியன் அமெரிக்க டொலர் உதவித் தொகுப்பை வழங்கலாம் என்று நிதியத்திற்குப் பரிந்துரைத்தது. மார்ச் மாதம் சர்வதேச செலாவணி நிதியம் தனது முதல் தொகுப்பாக 330 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியை விடுவித்ததையடுத்து ரணில், நாட்டின் பொருளாதாரத்தை மீண்டும் கட்டமைக்க முழு மூச்சில் இறங்கி, மக்களுக்கு ஓரளவு வசதியான வாழ்க்கைக்கு உறுதியளித்தார்.

ஆனால் இப்போது, நிதியத்தின் அடுத்த 330 மில்லியன் அமெரிக்க டொலர் இரண்டாவது தொகுப்பைப் பெறுவதில் இலங்கைக்குச் சிக்கல் ஏற்பட்டுள்ளது. கார

## ஜெய்சங்கர் கொழும்பில் தமிழ் சிவில் சமூக கூட்டமைப்பை சந்திப்பாரா?

ணம், சீனா. இலங்கையின் மிகப்பெரிய கடன் வழங்கு நாடான சீனாவைக் கடன் மறுசீரமைப்பு செய்யவைக்கத் தவறியதால் சர்வ தேச செலாவணி நிதியத்தின் உதவித் தொகையின் இரண்டாவது தொகுப்பான 330 மில்லியன் அமெரிக்க டொலர் வரவில்லை என்பதை அறிந்து நான் மிகவும் கவலை கொண்டேன். ஐ எம் எப் குழுவொன்று கடந்த மாதம் கொழும்பு வந்து செய்த ஆய்வில், கடன் மறு சீரமைப்பில் இலங்கையின் மிக மெதுவான முன்னேற்றம் குறித்துக் கவலை தெரிவித்திருந்தது. கடன் வழங்கு நாடுகளின் ‘நிதியுதவி வாக்குறுதி’களை மிக முக்கியமான நிபந்தனையாக நிதியம் விதித்திருந்த நிலையில், “இந்த இரண்டாவது தொகுப்பைப் பெறும் ஆய்வில் இதனால் இலங்கை தோல்வியடைந்தது” என்று, அண்மையில் ரோக்கியோவின் நெய்க்கி-ஏஷியா செய்தித்தாளின் அறிக்கை ஒன்று கூறியிருந்தது. “3 பில்லியன் அமெரிக்க டொலர் உதவித் தொகையின் இரண்டாவது தொகுப்பை

இலங்கை பெற முடியாமல் போனதன் காரணம், தனது மிகப் பெரிய கடன் வழங்கு நாடான சீனாவிடமிருந்து வலுவான கடன் நிவாரணத் திட்டத்தைப் பெறுவதில் இலங்கை அடைந்த இராஜதந்திர தோல்விதான்” என்று அந்த அறிக்கை கூறியிருந்தது. விஷயம் தெளிவாகத் தெரிகிறது. ஒக்ரோபர் மத்தியில் ‘பெல்ட் அன்ட் ரோட் இனிஷியேரிவ்’ (BRI) திட்டத்தின் பத்தாவது ஆண்டு நிறைவுக் கொண்டாட்டங்களில் பங்கேற்க பீஜிங் செல்லவிருக்கும் ரணில், சீன அதிபர் ஷீ ஜின்பிங்கைச் சந்தித்து, நிதியத்தின் இரண்டாவது உதவித் தொகுப்பைப் பெறத் தேவையான கடன் மறு சீரமைப்பைக் கோருவார் என்றே கருதுகிறேன். உடனே ஷீ, “அப்படியே ஆகட்டும், நண்பா” என்று சொல்லப்போகிறார் என நீங்கள் நம்புகிறீர்களா? இதற்குப் பதிலாக சீன எஜமான், குமுறி வந்த தனது விருந்தினரிடம், ஏற்கெனவே கடனில் மூழ்கியிருக்கும் இலங்கையை இன்னும் தன் வசம் எடுத்துக்கொள்ளவே கோருவார். தனது கடந்த கால ஆட்சியாளர்களால் இன்று நலிவடைந்த ஒரு சிறு தேசமாக இலங்கை இருக்கலாம். ஆனால், இந்து மாகடல் பிராந்தியத்தில் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிலப் பரப்பு கொண்டது இலங்கை. சீனா, தனது புவிசார் உத்தி இலக்கை மிகத் தெளிவாகப் பல முறை



## ஐ. எம்.எவ். துருப்புச் சீட்டுடன் சீனா

வெளிப்படுத்தியுள்ளது - அமெரிக்கா மற்றும் அதன் ‘க்வாட்’ கூட்டாளிகளான அவுஸ்திரேலியா, ஜப்பான், இந்தியா ஆகிய நாடுகளின் அனைத்து முயற்சிகளையும் முறியடித்து, இந்து மாகடல் பிராந்தியத்தில் தானே கோலோச்சவேண்டும் என்பதே அது. சீனாவுக்கும் க்வாட் நாடுகளுக்கும் இடையிலான இந்த அதிகார மோதலில் சிக்கித் தவிக்கப்போவது, போருக்கு அஞ்சும் அளவுக்கு ஏற்கெனவே போரால் பாதிக்கப்பட்ட மக்களைக் கொண்ட இந்தத் தீவு தேசம்தான் என்று எனது ‘ஈழநாடு’ கட்டுரைகளில் நான் முன்பே எழுதியுள்ளேன். வரும் வாரம் இலங்கையில் நடக்கவிருக்கும் இந்து மாகடல் விளிம்பில் அமைந்திருக்கும் நாடுகளின் கூட்டணியான இண்டியன் ஓஷன் ரிம் அசோஷியேஷன் (IORA)இன் 23ஆவது அமைச்சர்கள் மட்டத்திலான கூட்டம் குறித்துக் குறிப்பிடுவது இங்கு முக்கியமாகிறது. இந்தக் கூட்டமைப்பின் மூத்த அதிகாரிகளின் குழுக் கூட்டம் ஒக்ரோபர் 9-10 திகதிகளிலும், அமைச்சர்கள் மட்டக் கூட்டம் 11ஆம் திகதியும் கொழும்பில் நடக்கவிருப்பதாகத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் இதில் கலந்து கொள்வார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அப்போது, அவர் ரணிலிடமிருந்து ஒத்துழைப்புக்கான உறுதியைப் பெறுவதில் வெற்றியடைவாரா என்பது மிக முக்கியமாக எழும் கேள்வி. சீனப் பயணத்துக்குத் தயாராவதில் மும்முரமாக இருக்கும் வேளையில், ரணில் இந்த ஐஓஆர்ஏ கூட்டத்தில் பங்கு பெறுவாரா என்றேகூட எனக்கு ஐயம் உள்ளது. பீஜிங் சந்திப்பு ‘ஒக்ரோபரில்’ நடக்கும் என்று சீன ஊடகங்கள் தெரிவித்த செய்தியைத் தவிர, அது எப்போது என்பது குறித்து எந்தத் தெளிவான விளக்கமும் இன்னும் தெரியவில்லை என்பதே உண்மை நிலை. இந்த பி ஆர் ஐ மாநாட்டில் கலந்து கொள்ள 90 நாடுகள் உறுதியளித்துள்ளதாகச் சீன அரசு தெரிவிக்கிறது. ரஷ்ய அதிபர் விளாடிமிர் புட்டின் உள்ளிட்ட சில உயர் தலைவர்கள் பீஜிங் செல்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இப்படிப்பட்ட மூச்சு முட்டும் கூட்டத்தில் ரணில் எப்படி உணர்வார் என்பதை நீங்களே கற்பனை செய்து பாருங்கள். இதை இன்னும் விவரமாக உங்களிடம் விளக்கும் அளவுக்கு எனக்கு மன உறுதி இல்லை. வயிற்றைக் கலக்குகிறது, தலை சுற்றுகிறது, நெஞ்சு அடைக்கிறது.

‘பிராந்திய அடித்தள வலிமை, இந்து மாகடல் அடையாளத்தில் அதிகாரம்’ என்ற கருப்பொருள் கொண்ட ஐ ஓ ஆர் ஏ கூட்டம்பற்றிக் கவனம் செலுத்துவோம். 1995இல் உருவாக்கப்பட்ட ஐ ஓ ஆர் ஏ, பல அரசுகளுக்கிடையிலான ஓர் அமைப்பு. 23 உறுப்பினர் நாடுகள் மற்றும் 11 பேச்சுவார்த்தைக் கூட் டாளிகள் மூலமாகப் பிராந்திய ஒத்துழைப்பை வலுப்படுத்தி, இந்து மாகடல் பிராந்தியத்தில் நிலை யான வளர்ச்சியை மேம்படுத்துவதில் கவனம் செலுத்தும் ஓர் அமைப்பு இது. பங்களாதேஷின் இரண்டாண்டுத் தலைமைக்குப் பிறகு இக்கூட்ட மைப்பின் தலைமைப் பொறுப்பை இலங்கையும், துணைத் தலைமைப் பொறுப்பை இந்தியாவும் ஏற்க விருக்கும் நிலையில், கொழும்பில் நடைபெறும் இந்தக் கூட்டத்தில் ஜெய்ஷங்கர் பங்கேற்பார் என்று உறுதியாக நம்புகிறேன். கொழும்பின் இந்திய தூதரகத்தில் பணி யாற்றிய அனுபவம் உள்ளிட்ட, பரந்துபட்ட தூதரக அனுபவம் கொண்ட ஜெய்ஷங்கர், இந்தப் பயணத்தின் மூலம் கொழும்புடனான உறவுகளை வலுப்படுத்த முயற்சிக்கலாம். இந்தத் திசையில் அவர் எடுக்கும் முயற்சிகள் இந்தியாவிற்கு மட்டுமல்லாமல், மொத்த ஐ ஓ ஆர் ஏ-க்குமே பெரும் பயன் அளிக்கக்கூடியது. ஐ எம் எப் உதவி என்ற துருப்புச் சீட்டைக் கொண்டு இலங்கை யைத் தன் காலடியில் வீழ்ந்து கிடக்கச் செய்யும் சீன முயற்சிகளுக்கு நடுவில் இது மேலும் முக்கியத்துவம் பெறுகிறது.

மேலும் தனது பரபரப்பான நிகழ்ச்சிகளுக்கு நடுவில், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் தமிழ் சிவில் சமுதாயக் கூட்டமைப்பு அவரைச் சந்திக்க நேரம் கேட்டு விடுத்துள்ள கோரிக்கைக்கு ஜெய்ஷங்கர் ஒப்புக் கொண்டால், இன்னும் சிறப்பாக இருக்கும். 13ஆவது சட்ட திருத்தத்தை அமுல் படுத்தவும், மாகாண சபைத் தேர்தல்களை நடத்தவும் ரணிலுக்கு இந்திய பிரதமர் மோடி அழுத்தம் கொடுக்க, அமைச்சர் உதவவேண்டும் என்று கோரி, இரண்டு மாதங்களுக்கு முன்னரே கடிதம் எழுதியுள்ளது இந்தக் கூட்டமைப்பு. பல்கலைக் கழக வேந்தர்கள், துணை வேந்தர்கள், மத தலைவர்கள், வழக்கறிஞர்கள், மருத்துவர்கள் மற்றும் இதர தொழில் வல்லுநர்கள் உள்ளிட்ட பல பிரபலங்கள் அந்த மனுவில் கையொப்பமிட்டுள்ளதுடன், அதில் இலங்கைத் தமிழர்களின் இந்திய ஆதரவு நிலைப்பாட்டுக்கும் உறுதியளிக்கப்பட்டுள்ளது. வெளிநாடுகளில் வாழும் செல்வாக்கு மிக்க இலங்கைத் தமிழர்களும்கூட தமிழர் பிரச்னைக்கு ஒரு நிரந்தரத் தீர்வையும், அதன் தொடக்கமாக 13ஆவது சட்ட திருத்த அமுல்படுத்தலையும் கோரி, இந்தியாவின் உதவியை நாடுவதாக நான் அறிகிறேன். ஜெய்ஷங்கரும் டில்லியில் உள்ள அவரது மேலிடமும் சற்றே சிந்தித்துச் செயல்பட்டால், இலங்கையில் உள்ள சிவில் சமூகக் கூட்டமைப்பு மற்றும் வெளிநாடு வாழ் செல்வாக்கு மிக்க தமிழர்கள் மட்டுமல்லாமல், இன்னமும் பொது நலனின் சாயலைப் பிரதிபலித்து வாழ்ந்துவரும் சில தமிழ் அரசியல் தலைவர்கள் இணைந்த ஓர் இந்திய ஆதரவுக் கூட்டணியை வலுவாகக் கட்டமைக்கலாம். அப்படி ஒரு கூட்டணி அமைந்தால், இச்சிறு தீவில் சீன ஆதிக்கத்தையும் கட்டுப்படுத்தலாம். நான் கடந்த காலங்களில் பல முறை கூறியதைப்போல, சிங்கள அரசியல் மற்றும் சமூக அமைப்புகளில் இருக்கும் முற்போக்குவாதிகளையும் இதில் இணைக்க இந்தியா முயலவேண்டும்.

உங்கள் சுவையான ஞாயிறு டிபன் இனியும் உங்களுக்காகக் காத்திருக்கக்கூடாது, எனவே நான் விடைபெறுகிறேன். இறைவன் அருளால் இவ்வாரம் இனிமையானதாக அமையட்டும்.

●

# மீண்டும் சீனக்கப்பல் வருகைப் பிரச்னை





வீரகத்தி தனபாலசிங்கம்

இலங்கையின் துறைமுகங்களுக்கு பல நாடுகளின் கப்பல்கள் வந்து போகின்றன. எந்தப் பிரச்சினையும் எழுவதில்லை. ஆனால் சீனக்கப்பல்கள் வருகின்ற வேளைகளில் எல்லாம் இந்தியா கிளப்புகின்ற ஆட்சேபனை இலங்கைக்கு ஒரு இராஜதந்திரச் சிக்கலை ஏற்படுத்துகிறது.

கடந்த வருடம் ஆகஸ்டில் யுவான் வாங் 5 என்ற சீன ஆய்வுக்கப்பல் அம்பாந்தோட்டை துறைமுகத்துக்கு வந்தபோது இலங்கை எதிர்நோக்கவேண்டியிருந்ததைப் போன்ற இக்கட்டு நிலை இம்மாத பிற்பகுதியில் மீண்டும் ஏற்படுவதற்கு வாய்ப்பு இருக்கிறது.

வங்குரோத்து நிலையடைந்த இலங்கை முன்னென்றும் இல்லாத வகையிலான பொருளாதார நெருக்கடியினால் அவலத்துக்குள்ளாகியிருந்தபோது இந்தியா 400 கோடி அமெரிக்க டொலர்கள் அவசர தொடர் கடனை வழங்கி உதவிக்கொண்டிருந்தவேளையில் அந்த கப்பல் வந்தது. இந்தியாவின் ஆட்சேபனைக்கு மத்தியிலும் இலங்கை அந்த சிக்கல் நிலையை ஒருவாறாக சமாளித்துக் கொண்டது.



இரு வாரங்களில் வரவிருப்பதாக கூறப்படும் ஷி யான் 6 என்ற சீனக்கப்பல் தொடர்பில் ஏற்படக்கூடிய சிக்கலை இலங்கை எவ்வாறு சுமுகமாகக் கையாளப்போகிறது என்பது இப்போது முக்கியமான கேள்வி.

யுவான் வாங் 5 கப்பல் அம்பாந்தோட்டை துறைமுகத்துக்கு வந்தபோது ஆட்சேபனை தெரிவித்ததற்கு முன்வைத்த காரணத்தையே ஷி யான் 6 கப்பலின் வருகை தொடர்பிலும் இந்தியா கூறுகிறது.

சீனக்கப்பல் புலனாய்வுத் தகவல்களைச் சேகரிக்கக்கூடிய ஆற்றலைக் கொண்டதால் இந்தியாவின் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமையும் என்று காரணம் கூறியே புதுடில்லி அந்தக் கப்பல் கொழும்பு துறைமுகத்துக்கோ அல்லது அம்பாந்தோட்டை துறைமுகத்துக்கோ வருவதற்கு இலங்கை அனுமதியை மறுக்கவேண்டும் என்று எதிர்பார்க்கிறது. ஆனால் கப்பல் சமுத்திரவியல் ஆராய்ச்சியில் ஈடுபடுவதாகவும் எந்த வழியிலும் எந்தவொரு நாட்டினதும் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலை அது தோற்றுவிக்காது என்றும் சீனா கூறுகிறது.

கடந்த மாதம் இந்திய பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் இலங்கைக்கு மேற்கொள்விருந்த விஜயம் இறுதிநேரத்தில் கைவிடப்பட்டதற்கு புதுடில்லி தரப்பில் வேறு காரணங்கள் கூறப்பட்டபோதிலும் கூட சீனக்கப்பலின் வருகைக்கு இந்தியா தெரிவித்த ஆட்சபனைக்கு இலங்கை அரசாங்கத்திடமிருந்து சாதகமான சமிக்ஞை எதுவும் வெளிக்காட்டப்படாதமையே முக்கிய காரணம் என்றும் நம்பப்படுகிறது.

சீனக்கப்பல்களின் வருகை தொடர்பில் மூளும் பிரச்சினைக்கு இலங்கை இந்தியாவையோ அல்லது சீனாவையோ அசௌகரியப்படுத்தாத ஒரு தீர்வைக் காணவேண்டிய நிர்ப்பந்தத்துக்கு உள்ளாகி வந்திருக்கிறது.

இலங்கையின் துறைமுகத்தில் தரித்துநிற்கும் நாட்களில் எந்தவொரு ஆராய்ச்சிப் பணியிலும் ஈடுபடக்கூடாது என்ற நிபந்தனையின் அடிப்படையிலேயே கடந்த வருடம் யுவான் வாங் 5 கப்பலை அம்பாந்தோட்டை துறைமுகத்தில் தரித்துநிற்கு அரசாங்கம் அனுமதித்தது.

சீனக்கப்பல்களின் இலங்கை வருகை தனது பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்ற இந்தியாவின் விசனம் சான்று ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்டதா அல்லது இலங்கை விதித்த நிபந்தனையின் அடிப்படையில் கடந்த வரும் சீனக் கப்பல் ஆராய்ச்சி எதையும் செய்யவில்லையா என்பது யாருக்கு வெளிச்சம்?

இந்தியாவிடமிருந்தும் சீனாவிடமிருந்தும் நெருக்குதல்கள் அதிகரித்து வரும் நிலையில் அரசாங்கம் முன்னைய அணுகுமுறையின் அடிப்படையிலேயே தற்போதைக்கு ஒரு வழிவகையைக் கண்டுபிடித்திருப்பதாக கூறப்பட்டது. அதாவது தேசிய நீரியல் ஆராய்ச்சி நிறுவனமான 'நாரா'வின் பிரசன்னம் இல்லாமல் இலங்கையின கடற்பரப்பில் ஷி யான் 6 எந்தவிதமான ஆராய்ச்சிப் பணியையும்



செய்யக்கூடாது என்று அரசாங்கம் கூறியிருப்பதாக செய்திகள் வெளியாகின.

அதேவேளை, மண்டலமும் பாதையும் செயற்திட்ட உச்சிமகாநாட்டில் (Belt and Road Initiative Summit) பங்கேற்பதற்காக விரைவில் சீனாவுக்கு விஜயம் செய்யவிருக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதி சி ஜின்பிங்குடன் பல்வேறு விவகாரங்களுக்கு மத்தியில் இந்த விவகாரத்தையும் கலந்தாலோசிப்பதற்கு வசதியாக கப்பலின் வருகையை அடுத்த மாதத்துக்கு ஒத்திவைக்குமாறு அரசாங்கம் வேண்டுகோள் விடுத்தபோதிலும் அதற்கு பெய்ஜிங் இணங்க மறுப்பதாகவும் இந்த மாதமே கப்பலின் வருகை இடம்பெறவேண்டும் என்று உறுதியாக நிற்பதாகவும் நம்பகமான தகவல்கள் கூறுகின்றன.


இம்மாதம் கொழும்பில் இந்து சமுத்திர கரையோர நாடுகள் சங்கத்தின் உச்சிமகாநாடு (Indian Ocean Rim Association Summit) நடைபெறவிருப்பதால் அது தொடர்பிலான ஏற்பாடுகளில் தீவிரமாக ஈடுபட்டிருப்பதையும் காரணமாகக் கூறி அரசாங்கம் கப்பலின் வருகையை தாமதிக்குமாறு சீனாவிடம் கேட்டது என்றும் அந்த தகவல்கள் தெரிவித்தன.

இந்தியா மாத்திரமல்ல இப்போது அமெரிக்காவும் ஜப்பானும் கூட சீனக் கப்பலின் வருகை தொடர்பில் விசனத்தை வெளிப்படுத்தியிருக்கும் நிலையில் அரசாங்கத்தின் சிக்கல் மேலும் அதிகரித்திருக்கிறது. இந்த முத்தரப்பு நெருக்குதல்களை ஜனாதிபதி விக்கிரமசிங்க எவ்வாறு கையாளப்போகிறார்?

அமெரிக்காவுக்கும் ஜப்பானுக்கும் புவிசார் அரசியல் அக்கறைகள் இருக்குமானால் அவை குறித்து நேரடியாகவே இலங்கையுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தலாம் என்றும் இலங்கை விவகாரத்தில் மூன்றாவது நாடொன்றின் அக்கறைக்காக அந்த நாடுகள் குரலெழுப்பத் தேவையில்லை என்றும் அண்மையில் நியூயோர்க்கில் அமெரிக்க இராஜாங்க இணைச் செயலாளர் விக்டோரியா நுலாண்டைச் சந்தித்தவேளை வெளியுறவு அமைச்சர் அலி சப்ரி கேட்டுக்கொண்டதாகவும் கூறப்படுகிறது.

இந்தியாவுக்கு சார்பாகவே சீனக் கப்பலின் இலங்கை வருகை விவகாரத்தில் அமெரிக்காவும் ஜப்பானும் தலையிடுகின்றன என்று இலங்கை அரசாங்கம் நம்புகிறது என்பதை இது காட்டுகிறது.

இத்தகைய பின்னணியிலேயே ஜனாதிபதி விக்கிரமசிங்க அண்மைய நாட்களில் ஐக்கிய நாடுகள் பொதுச்சபையின் வருடாந்தக் கூட்டத்தொடர் உட்பட பல சர்வதேச மகாநாடுகளில் வல்லாதிக்க நாடுகளுக்கு இடையிலான புவிசார் அரசியல் போட்டாபோட்டியினால் மூன்றாம் உலக நாடுகள் பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்குவதாக முறையிட்டு நிகழ்த்திய உரைகளை நோக்கவேண்டும்.



நாடுகளுக்கு இடையிலான ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்காக பாடுபடும் இரு நிறுவனங்கள் (Carnegie Endowment for International Peace and Sasakawa Peace Foundation) நியூயோர்க்கில் ஏற்பாடுசெய்த 'தீவுகள் பேச்சுவார்த்தை' (Islands Dialogue) மகாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றிய விக்கிரமசிங்க சீனாவின் உளவுக்கப்பல் எதுவும் இலங்கைக்கு வந்ததில்லை என்று கூறினார்.

"இலங்கைக்கு உளவுக்கப்பல்கள் வருகின்றன என்பதை நிரூபிப்பதற்கு எவரிடமும் எந்த சான்றும் இருந்ததில்லை. இலங்கையின் தேசிய நீரியல் ஆராய்ச்சி நிறுவனத்துடனும் பல பல்கலைக்கழகங்களுடனும் சீன விஞ்ஞான அகாடமி உடன்படிக்கைகளை செய்திருப்பதனால் சீன ஆராய்ச்சிக் கப்பல்கள் வருகின்றன. கடந்த பத்து வருடங்களாக ஆராய்ச்சிக் கப்பல்கள் வந்தன. அதனால் எந்த பிரச்சினையும் இல்லை. இந்த ஆராய்ச்சிக் கப்பல்கள் உளவு வேலைகளுக்காக பயன்படுத்தப்படக்கூடும் என்று ஒரு சில நாடுகள் பிரச்சினை கிளப்பின.

"வெளிநாட்டுக் கப்பல்களுக்கு அனுமதி வழங்குவதற்கு கடற்டையினால் வகுக்கப்பட்ட தரம்வாய்ந்த செயற்பாட்டு நடைமுறையொன்றை இலங்கை கொண்டிருக்கிறது. அந்த நடைமுறை குறித்து இந்தியாவுடன் அண்மையில் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டன. இந்தியாவினால் விதந்துரைக்கப்பட்ட திருத்தங்களுக்கும் இலங்கை சேர்த்திருக்கிறது.

"அதனால் இப்போது இலங்கை வருகின்ற எந்த கப்பலும் இந்தியாவுடன் ஆலோசனை கலந்து நாம் கொண்டு வந்திருக்கும் நடைமுறைக்கு உட்படவேண்டும். அதனால் இந்தியாவுக்கு ஓர் அச்சுறுத்தலாக இருக்கக்கூடிய எந்தவொரு கப்பலும் வருவதாக என்னால் காண முடியவில்லை" என்று ஜனாதிபதி தனதுரையில் குறிப்பிட்டார்.

சீனாவின் ஆராய்ச்சிக் கப்பலோ அல்லது இராணுவக் கப்பலோ எதுவென்றாலும் இலங்கைக்கு வருவதாகக் கூறப்படுகின்ற சந்தர்ப்பங்களில் தனது பாதுகாப்பு குறித்து இந்தியா வெளிப்படுத்துகின்ற அக்கறைகள் மிகைப்படுத்தப்பட்டவையாக இருப்பதாக சந்தேகிக்கும் சில அவதானிகள் இந்தியா அதன் ஏவுகணைகளை அல்லது அணுவாயுதங்களை எங்கெல்லாம் நிலைவைத்திருக்கிறது என்பதை அறிந்துகொள்வதற்கு சீனா இலங்கைக்கு கண்காணிப்புக் கப்பல்களை அனுப்ப வேண்டியதில்லை. சீனாவிடம் உளவுச் செய்மதிகள் இருக்கின்றன. இந்த செய்மதிகளை விண்வெளியில் வைத்திருக்கும் நாடொன்றுக்கு வேறு எந்த நாட்டினதும் இரகசிய ஆயுதங்கள் அதிர்ச்சியைத் தரப்போவதில்லை. அந்த அளவுக்கு இன்று செய்மதி தொழில்நுட்பம் அபார வளர்ச்சியடைந்து விட்டது என்று கூறுகிறார்கள்.

அதன் காரணத்தினால் தான் ஐரோப்பிய நாடுகள் சிலவற்றின் துறைமுகங்களில் சீனாவின் முதலீடுகள் குறித்து அமெரிக்காவோ அல்லது வட அத்திலாந்திக் ஒப்பந்த (நேட்டோ) நாடுகள் அமைப்போ பெரிதாக சர்ச்சையைக் கிளப்புவதில்லை என்று அவர்கள் சுட்டிக்காட்டவும் செய்கிறார்கள். அதனால் இலங்கை மீதான இந்தியாவின் நெருக்குதல் சீனக்கப்பல்களின் ஆராய்ச்சி நடவடிக்கைகள் தொடர்பிலான விசனத்தின் விளைவானது என்பதையும் விட இந்து சமுத்திரத்தின் தெற்காசியப் பிராந்தியத்தை அதன் ஆதிக்கத்தில் வைத்திருக்க வேண்டும் என்ற விருப்பத்தின் விளைவானது என்றும் அந்த அவதானிகள் நம்புகிறார்கள்.

இலங்கையை இந்தியா அதன் செல்வாக்குப் பிராந்தியத்தினதும் பாதுகாப்பு புற எல்லையினதும் பகுதியாக கருதுகிறது. ஆழமான வரலாற்று மற்றும் சமகால கலாசார ரீதியானதும் மதரீதியானதுமான பிணைப்புக்களைக் கொண்ட இயற்கையான ஒரு நேச நாடாகவும் இலங்கையை இந்தியா பார்க்கிறது. அதனால் ஒரு பிரத்தியேகமான உறவுமுறையை புதுடில்லி கொழும்பிடம் இருந்து எதிர்பார்க்கிறது. இந்தியாவின் போட்டி நாடுகளை அல்லது அதனுடன் பகைமைகொண்ட எந்தவொரு சக்தியையும் இலங்கை நெருங்கவிடாமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்பதே அதன் அர்த்தமாகும். மேலும் "அயலகத்துக்கு முன்னுரிமை" (Neighborhood First policy) என்ற கொள்கை மற்றும் கடல்சார் பாதுகாப்பு உடன்படிக்கைகள் ஊடாக இந்தியா அதன் அரசியல், பொருளாதார மற்றும் பாதுகாப்புக் குடையின் கீழ் இலங்கையைக் கொண்டுவருவதற்கு மிகுந்த அக்கறையுடன் முயற்சிக்கின்றது என்று கொழும்பில் இருந்து இயங்கும் மூத்த

(14ஆம் பக்கம் பார்க்க)

# இனநாயகமே ஜனநாயகமானால் அநீதியே நீதியாக மாறிவிடும்!

**பனங்காட்டான்**

குட்டித்தீவில் காணாமற்போயுள்ள நீதிபதி ரி.சரவணராஜா தொடர்பான வாதங்களும், விவாதங்களும், போராட்டங்களுமே இப்போதைய முக்கிய அரசியல். 'காணாமற்போயுள்ள' என்று குறிப்பிடுவதற்கான காரணம், அவர் எங்கே இப்போது இருக்கிறார் என்று தெரியாத நிலையில், அல்லது அதிகாரபூர்வமாக எவரும் குறிப்பிட முடியாத நிலையில் இருப்பதுவே.

நீதிபதி சரவணராஜா கனடா சென்றுவிட்டதாக ஒரு வதந்தி. சுவிஸிற்கு சென்றுவிட்டதாக இன்னொரு வதந்தி. மேற்கு நாடொன்றுக்குச் செல்லும் வழியில் இடைத்தரிப்பாக சிங்கப்பூரில் நிற்பதாகவும் சொல்லப்படுகிறது.

கொழும்பில் அவர் தனது வாகனத்தை விற்றார் என்றும், இரண்டு நாடுகளின் ராஜதந்திரிகளை கொழும்பில் அவர் சந்தித்தாரென்றும் புலனாய்வாளர்களின் அறிக்கையை அடிப்படையாக வைத்து பகிரங்கமாகக் கூறுபவர்கள், எவ்வளவு தூரம் அவரை புலனாய்வாளர்கள் பின்தொடர்ந்தார்கள் என்பதை சொல்லப்போவதில்லை.

இந்த நிலையில் நீதிபதி அவர்கள் நாட்டைவிட்டு காணாமற்போயுள்ளதால் அவரும் இப்போதைக்கு காணாமலாக்கப்பட்டிருப்பவர் என்ற வகையறாக்குள் தள்ளப்பட்டுள்ளாரென்று துணிந்து கூறலாம். அவரது துணிச்சல்தான், புலனாய்வாளர்கள் பின்தொடர்ந்த நிலையிலும் அவரை தப்பிச்செல்ல வைத்திருக்கிறது என்று கூறவேண்டும்.

நீதிபதி சரவணராஜா விவகாரம் தொடர்பாக இப்போது அதிகம் பேசுபவர் அல்லது தன்னிலை விளக்கம் கொடுப்பவர் நாடாளுமன்ற உறுப்பினரான சரத் வீரசேகர. இலங்கையின் தேசிய பாதுகாப்பு துறைசார் மேற்பார்வைக் குழுவின் அக்கிராசனர் இவரே என்பது இங்கு கவனத்தில் கொள்ளப்பட வேண்டியது.

தாம் ஒருபோதும் நீதிபதியின் உயிருக்கு அச்சுறுத்தலாக இருக்கவில்லையென்றும், அச்சுறுத்தல் விடுக்கவில்லையென்றும், குருந்துார்மலை விவகாரத்தில் நாடாளுமன்ற உறுப்பினருக்குள்ள சிறப்புரிமையின் கீழ் உரையாற்றியதை உயிர் அச்சுறுத்தல் எனக் கூறமுடியாதெனவும் விளக்கமளித்து வருகிறார்.

சரத் வீரசேகர சாதாரண ஓர் எம்.பி. அல்ல. கடற்படையில் அட்மிரல் பதவி வகித்த உயர் அதிகாரி. கோட்டாபய ராஜபக்ஷவின் வியத்மக உள்வட்டத்தின் முக்கியஸ்தர். இவரது சகோதரரான மேஜர் ஜெனரல் ஆனந்த வீரசேகர யுத்த காலத்தில் யாழ்ப்பாண மாவட்ட ராணுவ இணைப்பதிகாரியாக பணியாற்றியவர். 2007இல் ஓய்வு பெற்ற பின்னர் பௌத்த பிக்குவாக மாறி அம்பாறை குகைக் கோவிலில் புத்தங்கல ஆனந்த தேரோவாக இருந்து 2021இல் காலமானவர்.

இந்தப் பின்னணிகளை இங்கு குறிப்பிடுவதற்குக் காரணம், இலங்கையின் அரசியல் வழித்தடத்தில் 'உயிர் அச்சுறுத்தல்' என்பதன் அர்த்தம் என்னவென்று சரத் வீரசேகரவுக்கு நன்கு தெரிந்திருக்க வேண்டுமென்பதை நினைவூட்டவே. கையில் கத்தியுடனோ, தோளில் துப்பாக்கியுடனோ சென்று பயப்படுத்துவது மட்டும்தான் உயிர் அச்சுறுத்தல் அல்ல. ஒருவரை இலக்கு வைத்து தாக்க, கடத்திச் செல்ல, கொலை செய்ய, காணாமலாக்கக்கூடியதான முறையில் தூண்டக்கூடிய வகையில் உரை நிகழ்த்துவதும் உயிர் அச்சுறுத்தலே என்பது படைத்துறை குடும்பத்தைச் சேர்ந்த சரத் வீரசேகரவுக்கு தெரியாதெனச் சொல்ல முடியாது.

எவ்வகையிலாவது நீதிபதி சரவணராஜாவை கைது செய்து அரசியல் மயப்படுத்தப்பட்ட சட்டத்தைப் பயன்படுத்தி




பதவி நீக்கம் செய்து சிறைக்குள் தள்ள வேண்டுமென்ற அடிப்படை நோக்கம் சரத் வீரசேகரவுக்கு இருந்தது. அல்லது நீதிபதி மீது காடையரைக் கொண்டு தாக்குதல் நடத்துவதன் மூலம் இவருக்கு மட்டுமன்றி மற்றைய நீதிபதிகளுக்கும் ஒரு பாடம் புகட்ட வேண்டுமென்ற எண்ணமும் இருந்துள்ளது.

இந்த நோக்கங்களுடன் அவர்

> **குட்டித்தீவில் இதுவரை எத்தனை நீதிபதிகள் தங்கள் பதவிகளில் தப்பியுள்ளனர். எத்தனை பிரதம நீதியரசர்களுக்கெதிராக பதவி நீக்க (இம்பீச்மென்ற்)நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. ஷிரானி பண்டாரநாயக்கவுக்கு 2013இல் என்ன நடைபெற்றது? இதுவெல்லாம் தெரியாதவரல்ல 'காணாமற்போயுள்ள' நீதிபதி சரவணராஜா**

தொடர்ந்து நீதிபதி மீது 'தாக்குதல்' உரைகளை நாடாளுமன்றத்தில் நிகழ்த்தியபோது அதனைத் தடுக்காத சபாநாயகர், நீதியமைச்சர், பிரதமர் ஆகியோரும் உடந்தையாக இருந்துள்ளார்கள் என்பதை அவர்களின் மௌனத்தின் வாயிலாக தெரிந்து கொள்ள முடிகிறது.

இலங்கையில் அரசியல்வாதிகள் மீது பதவி நீக்க (இம்பீச்மென்ற்) பிரேரணைகள் முன்னெடுக்கப்பட்டனவாயினும் அவை தோல்வியடைந்தன. ஆனால், நீதித்துறையில், நீதிபதிகள் பிரதம நீதியரசர்கள் போன்றவர்கள் மீதான பதவி நீக்கும் முயற்சிகள் சகல கட்சிகளின் ஆட்சிக்காலங்களிலும் சாதாரணமானவையாக நிகழ்ந்துள்ளன.

ஜே.ஆர்.ஜெயவர்த்தன நாடாளுமன்ற உறுப்பினராகவிருந்த காலத்திலிருந்து அவர் தனிப்பட்ட வழக்கறிஞராக பல வருடங்கள் இருந்தவர் நெவில் சமரக்கோன். முன்னர் ஒருபோதும் நீதிபதியாகக்கூட இருந்திராத இவரை பிரதம நீதியரசராக நியமித்து, இவர் முன்னிலையில் 1978 பெப்ரவரி 4ம் திகதி ஜனாதிபதியாக சத்தியப்பிரமாணம் செய்தார் ஜெயவர்த்தன.



சில ஆண்டுகளின் பின்னர் பொது வைபவம் ஒன்றில் ஜெயவர்த்தனவை இவர் விமர்சித்து உரையாற்றியதால் அப்போதைய பிரதமர் ஆர்.பிரேமதாச தலைமையிலான நாடாளுமன்ற தெரிவுக்குழு இவரை குற்றவாளியென அறிக்கையிட்டு பதவி நீக்கப் பிரேரணைக்கு முன்னறிவிப்பு கொடுத்தது. பிரதம நீதியரசர் பதவியை ராஜினாமா செய்துவிட்டு ஆஸ்திரேலியாவுக்குச் சென்றுவிட்டார் நெவில் சமரக்கோன்.

2001ல் சந்திரிகா குமாரதுங்க ஜனாதிபதியாக பதவி வகித்த வேளையில் அவரது அணியைச் சேர்ந்த 77 எம்.பி.க்கள் ஒப்பமிட்டு அப்போதைய பிரதம நீதியரசர் சரத் என்.சில்வாவை பதவி நீக்கும் பிரேரணைக்கு முன்னறிவிப்புக் கொடுத்தனர். ஆனால், அப்போதிருந்த அரசியல் ஸ்திரமற்ற தன்மையால் அந்த முயற்சியை சந்திரிகா தரப்பால் தொடர முடியாது போய்விட்டது.

2021 மே மாதம் 18ம் திகதி ஷிரானி பண்டாரநாயக்கவை பிரதம நீதியரசராக நியமித்தார் அன்றைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச. ஒரு வருடம் முடிவடைவதற்குள்ளேயே பிரதம நீதியரசரின் சில தீர்ப்புகள் மகிந்தவினால் ஜீரணிக்க முடியாது போயிற்று. நாட்டிலுள்ள எந்தக் காணியையும் அரசுடைமையாக்கும் சட்டமூலம், திவி நெகும சட்ட மூலம் ஆகியவைகளை ஷிராணி பண்டாரநாயக்க தலைமையிலான உச்ச நீதிமன்றம் நிராகரித்ததால், அவரை பதவி நீக்கும் நடவடிக்கையில் மகிந்த இறங்கினார். நாடாளுமன்றத்தில் 155 எம்.பிக்களின் ஆதரவு இருந்ததால் பதவி நீக்கப் பிரேரணை இலகுவாக நிறைவேற ஷிரானி பண்டாரநாயக்க வீடேகினார்.

காலியான பிரதம நீதியரசர் பதவிக்கு முன்னர் ஒருபோதும் சாதாரண நீதிபதியாகக்கூட பதவி வகித்திராத மொஹான் பீரிஸை பிரதம நீதியரசராக நியமித்து அந்தக் கதிரைக்கே கறை பூசினார் மகிந்த. மகிந்தவின் அரசியல் நடவடிக்கைகளுக்கு மொஹன் பீரிஸ் எவ்வாறு துணைபுரிந்தாரென்பதை எழுதினால் ஒரு புத்தகமாக்கலாம்.

ஷிராணியின் பதவி நீக்கத்துக்கு முன்னர் முக்கிய வழக்கொன்றின் தீர்ப்பினை விசாரணை செய்த மேல் நீதிமன்ற நீதிபதிகளான அனில் குணரத்தின, எஸ். சிறீஸ்கந்தராஜா ஆகியோர் இனந்தெரியாதோர்களால் அச்சுறுத்தப்பட்டது நேரடியான கொலைப் பயமுறுத்தலாக பதிவானது.

ரணசிங்க பிரேமதாச ஜனாதிபதியாக இருந்தபோது கொழும்பு மாவட்ட நீதிபதி ஒருவரின் வீட்டுக்கு தொடர்ச்சியாக கல்லெறி இடம்பெற்றது. காடையர் கூட்டம் அவரது வாசஸ்தலத்தைச் சுற்றி எவரும் வெளியேற முடியாது அச்சப்படுத்திக் கொண்டிருந்தது. நீதிபதி என்ற வகையில் தமக்கான பாதுகாப்புக்கு பொலிஸாரின் உதவியை நாடினார். ஆனால் அவரின் அழைப்புக்கு பொலிஸார் செவி சாய்க்கவில்லை. நீதிபதிக்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்க வேண்டாமென்று 'பெரியவர்' உத்தரவிட்டாரென்பது பகிரங்கமானது.

1983ம் ஆண்டில் இன்னொரு சம்பவம் இடம்பெற்றது. அரசுக்குச் சார்பாக ஒரு வழக்கில் தீர்ப்பளிக்க ஒப்புக்கொள்ளாததாகக் கூறி நீதியரசர்கள் விமலரட்ண மற்றும் கொலின்-தொம் ஆகியோரை பதவி நீக்க நாடாளுமன்ற தெரிவுக்குழு அமைக்கப்பட்டது.

பிரேமதாசவை ஜனாதிபதி பதவியிலிருந்து இறக்க லலித் அத்துலத் முதலியும் காமினி திசநாயக்கவும் எடுத்த பதவி நீக்கப் பிரேரணை முயற்சி முறியடிக்கப்பட்டது. அப்போதைய சபாநாயகர் எம்.எச்.மொஹமட் இவ்விடயத்தில் பிரேமதாச பக்கம் சாய்ந்து பிரேரணையை ரத்தாக்கினார். இது நீதித்துறை சார்ந்ததல்ல. அரசியல்மயப்படுத்தப்பட்ட செயற்பாடு.

மேலே குறிப்பிடப்பட்ட நீதியரசர்கள் மீதான பதவி நீக்க முயற்சிகளின் வரலாறு நீதிபதி சற்குணராஜாவுக்குத் தெரியாததல்ல. அதனால்தான் அவர் சமயோசிதமாக நாட்டை விட்டுத் தப்பிச்செல்ல திட்டமிட்டிருக்கலாம்.

அவர் முன்வைத்துள்ள குற்றச்சாட்டுகளை விசாரிக்க அவர் நேரில் வரவேண்டும் என்பதுவும், அவருக்கு உயிர் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டிருந்தால் நீதிபதி என்ற பதவி வழியாக சம்பந்தப்பட்டவர்களை கைது செய்ய அவருக்கு அதிகாரம் இருந்தது என்பதுவும், தமக்கான நீதிபதி அதிகாரங்களை எதற்காக அவர் பயன்படுத்தவில்லையெனக் கேட்பதுவும்.... இவையெல்லாம் வெற்றுப் பேச்சுகள்.

ஒருவர் கொலை செய்யப்பட்ட பின்னரும் அது தொடர்பான கொலை வழக்கை நடத்துவதே சட்டம். சம்பந்தப்பட்டவர் நாட்டில் இல்லையென்றாலும் நீதி விசாரணை நீதியாக நடைபெற வேண்டியது கட்டாயம். இதற்காகவே இன்று போராட்டம் நடைபெறுகிறது.

இனநாயகத்தின் மேலாண்மை ஜனநாயகத்தைப் படுகொலை செய்துவிட்ட நாட்டில், அநீதி என்பதுவே நீதியாக உலா வருகிறது. சட்டத்துறையும் நீதிபரிபாலனமும் அரசியலாளர்களின் பொக்கற் நாய்களாக மாறிவருகின்றன.

# கனவுகளும் நனவாகும்

**மறவன்புலவு க. சச்சிதானந்தன்**

2009 முதலாக காங்கேசன்துறையில் இருந்து நாக பட்டினத்திற்கு கப்பல் சேவை வேண்டுமென முயன்று வந்தேன். 2010இல் யாழ்ப்பாணத்தில் நுணா விலில் என்னைச் சந்திக்க வந்த மாண்புமிகு அமைச்சர் தேவானந்தாவுக்கு இத்திட்ட அறிக்கையைக் கொடுத் தேன். அன்றைய பாதுகாப்புச் சூழலை அவர் நோக்கினார்.

2017ஆம் ஆண்டில் இலங்கை அரசின் ஒப்புதலை மிக எளிமையாகப் பெற்றுத் தந்தவர் வட மாகாணத்தின் மேனாள் ஆளுநர் ரெஜினால்ட் கூரே அவர்கள். சந்தடி இல்லாமல் சலசலப்பு இல்லாமல் அரசு அலுவலர் மட்













டத்திலேயே ஆணைகளையும் ஒப்புதலையும் பெற்றவர் கூரே அவர்கள். அவர்களுக்கு இந்த நாள் மிக மகிழ்ச்சி யான நாள். ஆனாலும் அதைக் காண்பதற்கு அவர் எம் மோடு இல்லை.

இந்திய அரசின் ஒப்புதலுக்காகத் டில்லி சென்றேன். சென்னை சென்றேன். டில்லியில் வெளியுறவுத்துறை அமைச்சர் மாண்புமிகு சுஷ்மா சுவராஜ், சென்னையில் தமிழகத் துணை முதல்வர் மாண்புமிகு ஓ. பன்னீர் செல்வம் இருவரும் தடங்கலின்றி அரசு ஒப்புதல்களைப் பெற்றுத் தந்தனர்.

இவர்களுக்கு விதந்துரைத்த இந்நாள் நாகலாந்து ஆளுநர் மேதகு இல. கணேசன் அவர்களுக்கு நன்றி. அந்நாள் நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் மைத்தி ரேயன் அவர்களுக்கு நன்றி. அக்காலத்தில் கப்பல் துறை அமைச்சரான மாண்புமிகு நித்தின் கட்காரி அவர்களைச் சந்தித்தேன். இணை அமைச்சரான மாண்புமிகு பொன் இராதாகிருஷ்ணன் அவர்களைச் சந்தித்தேன். பெரிதும் உதவினார்கள்.

இந்தியப் பிரதமர் அலுவலகத்தில் ஒப்புதலைப் பெற்று தந்தவர் திரு எஸ் குருமூர்த்தி அவர்கள். அவர்க ளுக்கு என் நெஞ்சார்ந்த நன்றி.

கப்பல் இல்லையே எனத் தேடினேன். தேடலில் உதவிய 'ஈழநாடு' ஆசிரியர் திரு குகநாதன், இந்து மக்கள் கட்சித் தலைவர் அர்ஜுன் சம்பத்தர், இந்துப் போராளி கள் குழுத் தலைவர் திரு அருண் உபாத்தியாயர், இலங் கைக் குடியரசுத் தலைவரின் மேனாள் செயலர் ஒஸ்டின் பெர்ணான்டோ, டில்லி உச்ச நீதிமன்ற வழக்குரைஞர் இராம் சங்கர் இராஜா, டில்லி ஆட்சிப் பணியர் விஜய இராம்மோகன், கொல்கத்தா திரு தேவ்தத்தாமாஜி, சென்னை கலைமாமணி சசிரேகா பாலசுப் பிரமணியன், இவர்களை நன்றியுடன் நினைவு கூர்கிறேன்.

இந்திய அரசு கடல் மாலைத் (சாகர் மாலா) திட் டத்தை உருவாக்கிய பொழுது காரைக் கால் - காங் கேசன்துறை பயணக் கப்பல் இணைப்பையும் அதற்குள் ஒன்றாக்கியமையே இந்தத் திட்டத்தின் பெரும் முன்னேற்றம். என் கனவுக்கு நிலையான நனவாக அந்த அறிவித்தல் அமைந்தது.

மார்கழித் திருவாதிரைக்கு சிதம்பரத்திற்கு இலங்கை வழிபடு பயணிகளுக்கு கப்பல் தேவை எனவே நான் கேட்டிருந்தேன்.

அந்த ஒற்றைப் புள்ளி விரிந்து விரிந்து இன்று நிலை யான காங்கேசன்துறை - நாகபட்டினம் பயணிகள் கப் பல் சேவையாக மலர்ந்து முகிழ்த்துப் பயன் தர உள்ளது. சிவபெருமானின் திருவருளை நெஞ்சார வழுத்துகிறேன்.

வடகிழக்குப் பருவப் பெயர்ச்சிக்கான வாடைக் காற்றும் வலசை நீரோட்டமும் கொந்தளிக்கும் கடலும் இடையிடையே புயலுமாய்க் கால நிலை. எனவே கார்த் திகை மார்கழி மாதங்களில் இக்கப்பல் பயணிக்குமா?

01.11.2023 இற்குப்பின் 31.12.2023 வரை அமையும் காலநிலைக்கேற்பக் கப்பல் பயணமும் அமையும். எனி னும் மார்கழி 10 செவ்வாய்க்கிழமை (26.12.2023) மார்கழித் திருவாதிரை அல்லவா? இலங்கைச் சிவனடி யார்கள் சிதம்பரத்துக்கு வழிவழியாகச் சென்ற பயணம் அல்லவா? எனவே 20.12.2023 தொடக்கம் கப்பல் சேவையை மீளத் தொடங்குமாறு வலியுறுத்த உள் ளேன்.

இலட்சத்தீவுக்கும் கொச்சினுக்கும் இடையே பய ணிக்கும் இந்தியக் கப்பல் கழகத்தின் செரியபாணிக் கப்பல். காங்கேசன்துறை நாலு மீட்டர் ஆழத் துறை. இக்கப்பலோ 150 பயணிகளை ஏற்றிய பின்பும் ஒன்றை மீட்டர் தாழ்வே. எனவே காங்கேசன் துறையிலும் நாக




பட்டினத்திலும் பயணிகள் நேரே கப்பலில் ஏறலாம் இறங்கலாம். (இக்காலத் தில் காங்கேசன்துறைக்கு வரும் சொகுசுச் சுற்றுலாப் பயணிகள் கப்பல் தொலை வில் நிற்கும், நங்கூரமிடும், படகுகளிலேயே பயணிகள் துறைக்கு வருவர்.)

150 பயணிகள். குளி ரூட்டிய அறைக்குள். 50 கிலோ பொதி ஒவ்வொரு பயணிக்கும்.

காலை நாகபட்டினத் தில் புறப்பாடு. 60 கடல் மைல் (100 கிமீ.) பயணம். 3 மணி நேரப் பயணம். நண்பகல் காங்கேசன் துறை.

பிற்பகல் காங்கேசன்துறையில் புறப்பாடு. மாலை நாகபட்டினம்.

நாகபட்டினத்தில் இருந்து பேருந்து மற்றும் தொடர் வண்டிப் பயணமாக இந்தியா முழுக்கப் பயணிக்கலாம்.

ஒரு வழிப் பயணச்சீட்டு ஒருவருக்கு இந்திய ரூபாய் 6500 (இலங்கை ரூபாய் 25,000).

கப்பலில் பயணிக்கச் சீட்டுகளுக்கு இந்தியாவில்: KPV Shaik Mohammed Rowther, 41 இலிங்கிச் செட்டித் தெரு, சென்னை 00 91 44 25244353. இலங்கையில்: ஆஷா கப்பல் Asha Agencies, 72C பௌத்தலோக மாவத்தை, பம்பலப்பிட்டிச் சந்தி0094 11 2503313.

கனவு காணுங்கள், கனவு காணுங்கள், கனவுகள் நனவாகும் உங்கள் வாழ்நாளிலேயே என்பதற்கு, சிவபெருமான் சிவனடியார்களுக்குத் துணை நிற்கிறார் என்பதற்கு, வேறு என்ன சான்று?

●

# லண்டனில் பாலேந்திராவின் ஐம்பது ஆண்டு 'அரங்க நினைவலைகள்' நிகழ்வு

## காட்சியும் கானமும் உரைகளும்

எதிர்வரும் 15ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 330 மணிக்கு மேற்கு லண்டன் பகுதியில் அமைந்த பின்னர் வில்லேஜ் மண்டபத்தில் நவீன தமிழ் அரங்கு சார்ந்த நிகழ்வுகள் நடைபெறுகின்றன.

இந்த நிகழ்வுகள் நாடக நெறியாளர் பாலேந்திராவின் அவரது இரண்டு நூல்களை அறிமுகப்படுத்துவதாகவும் அவரது ஐம்பது ஆண்டு நாடகப் பணியை நினைவு கூர்வதாகவும், அவர் உருவாக்கிய தமிழ் அவைக் காற்று கலைக் கழகத்தின் 45ஆண்டு நிறைவை கொண்டாடு வதாகவும், வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் பாலேந்திரா அண்மையில் வெளி யிட்ட இரு நூல்கள் அறிமுகம் செய்யப்படவுள்ளன. "பாலேந்திராவின் அரங்கக் கட்டுரைகள்","பாலேந்திரா நேர் காணல்கள்" ஆகிய இந்த நூல்கள் இலங்கையில் யாழ்ப்பாணத்தில் திருமறைக் கலாமன்றத்திலும், மட்டக்களப்பில் கிழக்குப் பல்கலைக் கழகத்திலும், கொழும்பில் தமிழ்ச் சங்கத்திலும் மற்றும் கனடா பிரான்ஸ் ஆகிய நாடுகளிலும் ஏற்கனவே இவ் வருடம் அறிமுகப் படுத்தப்பட்டவை. இந்த நூல்கள் முறையே குமரன் பதிப்பகத்தாலும், ஜீவநதி பதிப்பகத் தாலும் இலங்கையில் பதிப் பிக்கப்பட்டவை யாகும்.

இந்த நூல் அறி முக உரைஞர்களாக மாதவி சிவலீலன், றஜிதா சாம், தயா பரன் ஆகியோர் கலந்து கொள்வர். அரங்க நினைவலை கள் ஆற்றுகையில், தமிழ் அவைக் காற்று கலைக் கழகத் தின் முக்கிய கலைஞர்கள், லண்டன் தமிழ் நாடகப் பள்ளியின் மாணவர் ஆகியோர் பங்குபற்று கின்றனர். இவர்கள் பாலேந்திரா ஆனந்தராணி ஆகியோ ருடன் இணைந்து ஆற்றுகைகளை நிகழ்த்த உள்ளனர். நாடகப் பயணத்தில் அவர்களது அனுபவங்களையும் பகிர்ந்து கொள்வர்.






நாடகப் பாடல் நிகழ்ச்சியில் தமிழ் அவைக்காற்று கலைக் கழகத்தை சேர்ந்த இசைக்குழுவினர் பங்கு பற்று வர். மா சத்தியமூர்த்தி, தர்சினி சிவசுதன், விஜயகுமாரி பரமகுமரன் ஆகியோர் பாடல்களை இசைக்கவுள்ளனர்.

பாலேந்திரா நெறிப்படுத்திய நாட கங்களில் இருந்து தேர்வு செய்யப்பட்ட நாடகக் காட்சிகள், பாடல்கள் அடங்கிய "அரங்க நினைவலை கள்" நிகழ்வில், பாலேந்திரா நெறிப் படுத்திய புகழ் பெற்ற நாடகங்களான மழை கண்ணாடி வார்ப்புகள் யுகதர்மம், முகமில் லாத மனிதர்கள், மரணத்துள் வாழ்வு, எரிகின்ற எங்கள் தேசம், பெயர்வு போன்ற நாடகங்களில் இருந்து காட்சிகள் பாடல்கள் இடம் பெறவுள்ளன. முன்னர் இதே போன்ற நூல் அறிமுக நிகழ்வுகள் நிகழ்த்தப் பட்ட இடங்களில் இப்படியான ஆற்றுகைகள் மிகவும் பாராட்டுப்பெற்றன. அனுபவ உரைகள் ,நூல் அறிமுக உரைகளுக்கு இடையிடையே அரங்க நினைவலைகள் நிகழ்வு பார்வையாளர்களது ஆர்வத்தை தூண்டும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இத்துடன் ஐம்பது வருட நீண்ட கலைப் பயணத் தைக் காட்டி நிற்கும் ஆவணங்கள் கண்காட்சியாக காட்சிப் படுத்தப்படவுள்ளன.

# ‘யாகாவாராயினும் நா காக்க’ வேண்டியிருந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க !

அனந்த பாலகிட்ணர்




இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இலங்கையின் ஊடகத்துறை முன்னோடிகளில் ஒருவாரக விளங்கிய டி.ஆர்.விஜேவரத்தனவின் பேரனாவார். அத்துடன் தற்போது இலங்கையில் பிரபலமான சண்டே டைம்ஸ் மற்றும் டெய்லி மிரர் ஆங்கில பத்திரிகைகள், தமிழ் மிரர் போன்ற பத்திரிகைகளின் உரிமையாளரான ரஞ்சித் விஜேவர்த்தனவின் மருமகனாவார்.

இலங்கையின் பழமையான பத்திரிகை நிறுவனமான ஏரிக்கரை பத்திரிகை நிறுவனத்தை ஸ்தாபித்தவர் டி.ஆர்.விஜேவர்த்தன என்பது குறிப்பிடத்தக்கது.

இதுதவிர ரணிலின் தந்தையார் எஸ்மன்ட் விக்கிரமசிங்க ஒரு கீர்த்திமிக்க இராஜதந்திரியாவார். அத்துடன் குருணாகல பிரதேச அங்கிலிகன் ஆயராக இருந்த வணக்கத்துக்குரிய அதி.வண. லக்ஸ்மன் விக்கிரமசிங்க, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் சிறிய தந்தையார் என்பது குறிப்பிடத்தக்கது.

எனவே ஊடகத்துறையில் மாத்திரமல்ல. கிறிஸ்தவ மதத்தைப் பொறுத்தவரை கூட ரணில் விக்கிரமசிங்கவின் பின்னணி முக்கியமானது.

இதுதவிர மற்றுமொரு பிரபல ஆங்கிலப்பத்திரிகையான தி ஐலண்ட் மற்றும் திவயின சிங்களப்பத்திரிகை ஆகியவற்றின் ஸ்தாபகரான உபாலி விஜேவர்த்தன கூட ரணில் விக்கிரமசிங்கவின் ஒரு நெருங்கிய உறவினர்.

முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர் ஜயவர்த்தன கூட ரணில் விக்கிரமசிங்கவின் மிக நெருங்கிய உறவினர்.

எனவே பலவழிகளிலும் ஜன ாயகத்தின் தூண்கள் எனக்குறிப்பிடப்படும் அரசமைப்பு, நீதித்துறை, நிர்வாகத்துறை மற்றும் ஊடகத்துறை என்பவற்றுடன் நெருக்கமான உறவைக்கொண்டுள்ளவர் சட்டத்தரணியாக தொழில் தகமை கொண்டுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. ஆயினும் சில தினங்களுக்கு முன்னர் ஜெர்மன் ஊடக நிறுவனமான டொச் வெல்ல ( Deutsche Welle-DW) ஊடகவியலாளருக்கு வழங்கிய பேட்டியில் ஆத்திரமடைந்தவராக சுமுகத்தன்மயை இழந்து ரணில் விக்கிரமசிங்க பதிலளித்தமை ஜனநாயகத்தின் அனைத்து அம்சங்களையும் எள்ளி நடையாடுவது போன்ற அபிப்பிராயத்தையே தொலைக்காட்சி நேயர்கள் மத்தியில் ஏற்படுத்தியிருந்தது.

இலங்கை தற்போது பொருளாதார நெருக்கடிக்குள்ளாகியிருக்கும் ஒரு நாடாகும். அத்துடன் சர்வதேச நிதி நிறுவனங்களையே பெரிதும் நம்பியிருக்கும் நிலைக்கும் தள்ளப்பட்டுள்ளது. மேற்கத்தேய சர்வதேச நிதி நிறுவனங்கள் தமது உதவிகளை வழங்கும் போது ஒரு நாட்டினது ஜனநாயக நடைமுறைகள், சட்டவாட்சி, அடிப்படை மனித உரிமைகள் மற்றும் ஊழல், மோசடியற்ற நிர்வாகம் போன்றவற்றையே முன்னிறுத்துவது வழக்கமாகும்.

எனவே இலங்கை சர்வதேச சமூகம் எதிர்பார்ப்பவற்றிலிருந்து எவ்வளவு தூரத்தில் இருக்கின்றது என்பதை சொல்லித்தெரிய வேண்டியதில்லை. ஏற்கனவே பல நிபந்தனைகள் இலங்கைக்கு நிதி வழங்குவது தொடர்பாக சர்வதேச நாணய நிதியம் விதித்துள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆட்சிப்பொறுப்பை ஏற்க முன்னர் இலங்கையின் நிலைமை பொருளாதார ரீதியாகவும், சட்டம், ஒழுங்கு என்பவை மிகவும் பாதிக்கப்பட்டுமிருந்தன.

எனவே நாட்டில் ஜனநாயக ரீதியான அம்சங்கள் மற்றும் அடிப்படை மனித உரிமகள் என்பவை எவ்வளவு துாரம் முன்னேற்றம் கண்டு வருகின்றன என்பதை இலங்கைக்கு உதவி வழங்கும் சர்வதேச நிறுவனங்கள் மற்றும் நாடுகள் என்பவை மிக உன்னிப்பாக அவதானித்து வருகின்றன.

இத்தகைய தருணத்திலேயே ஜெர்மனியின் டொச் வெல்ல (DW) தொலைக்காட்சி நிறுவன ஊடகவியலாளருடனான பேட்டியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொறுமையிழந்த நிலையில் சனல்-4 தொலைக்காட்சி நிறுவனம் கொழும்பில் உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல் குறித்து வெளியிட்ட தகவல்கள் பற்றி பதிலளித்திருந்தார்.

டொச் வெல்ல நிறுவன ஊடகவியலாளர் உயிர்த்த ஞாயிறு குறித்த சர்வதேச விசாரணை பற்றி எழுப்பிய கேள்விக்கே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க “எம்மை நீங்கள் இரண்டாந்தர பிரஜைகளாக பார்க்கிறீர்களா? என்னை ஓரங்கட்ட முயலுகிறீர்களா? என்று ஜெர்மன் ஊடகவியலாளரிடம் குறுக்குக் கேள்வி களைக்கேட்டிருந்தார்.

சர்வதேச உதவிகளுக்காக இலங்கை கையேந்தியுள்ள நிலையிலுள்ளது. ஏற்கனவே 2009-ம் ஆண்டு இடம்பெற்ற இறுதிக்கட்ட உள்நாட்டு யுத்தம் தொடர்பாக எழுந்துள்ள யுத்தக்குற்றச்சாட்டுகள் பற்றி தமிழ் அரசியல் தரப்பு சர்வதேச சமூகத்திடம் சரவதேச விசாரணையின் அவசியத்தை வலியுறுத்தி வருகின்றது.

இந்நியையில் ‘யானை தனது தலையில் தானே மண்ணை வாரிக்கொட்டியது’ போல ஜெர்மன் ஊடகவியலாளருடனான பேட்டியின் போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆவேசமாகப் பதிலளித்துள்ளார்.

ஒரு நாட்டின் தலைவர் தமது நாட்டின் மகத்துவத்தை பிரதிபலிக்க வேண்டியவராக இருக்கின்றார். இத்தகைய நிலையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க திருக்குறளில் கூறப்பட்டது போல ‘யாகாவாரயினும் நாகாக்க’ வேண்டிய நிலையில் அப்பேட்டியை வழங்க தவறியிருந்தார். அதனால் அவர் தற்போது ‘காவாக்கால் சோகப்பர் சொல்லிழுக்குப்பட்டு’ என்று கூறுமளவுக்கு இலங்கை ஊடகத்துறையினரது விமர்சனங்களுக்கு மாத்திரமல்ல. சர்வதேச ஊடகவியலாளர்களது விமர்சனங்களுக்குமுள்ளாகி இருப்பதையே அவதானிக்க முடிகின்றது.

# வாய்ப்பைப் பயன்படுத்தும் வங்கதேசம்!

காலிஸ்தான் பிரிவினைவாதிகளுக்கு கனடா ஆதரவுக் கரம் நீட்டுவதால், அண்மைக்காலமாக இந்தியா - கனடா உறவில் விரிசல் ஏற்பட்டிருக்கிறது. கனடாவில் வசித்த அந்நாட்டு குடியுரிமை பெற்ற ஹார்தீப் சிங் நிஜ்ஜார் என்ற பிரிவினைவாதி, கடந்த ஜூன் மாதம் கொலை செய்யப்பட்டதன் பின்னணியில் இந்திய உளவு அமைப்புகள் இருப்பதாக கனட பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ குற்றம்சாட்டினார்.

இது இருநாட்டு உறவில் மேலும் விரிசலை ஏற்படுத்திவிட்டது. பொதுவாகவே கனடாவில் இந்தியாவின் பஞ்சாபை பூர்வீகமாகக் கொண்ட சீக்கியர்களின் எண்ணிக்கை அதிகம். இந்தச் சூழலில், ஹார்தீப் சிங் நிஜ்ஜார் கொலை குற்றச்சாட்டின் பின்னணியில், கனடாவுக்கான நுழைவு இசைவு (விசா) சேவையை இந்தியா செப்டம்பர் 21-இல் திடீரென ரத்து செய்ததால், சீக்கியர்கள் குறிப்பாக, மாணவர்கள் அதிர்ச்சிக்குள்ளாகினர்.

கனடாவில் கடந்த 2021-இல் நடத்தப்பட்ட மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, அங்கு வசிக்கும் இந்தியர்களின் எண்ணிக்கையை கணக்கிட்டால், தங்களை சீக்கியர்கள், பஞ்சாபியர்கள் என்று அடையாளப்படுத்திக் கொண்டவர்களின் எண்ணிக்கை அதிகம். இதற்கு அடுத்தபடியாக தமிழர்கள், குஜராத்தியர்கள், மேற்கு வங்கத்தினர் கனடாவில் அதிகளவில் வசிக்கின் றனர்.

இன்னும் சொல்லப்போனால், கனடாவில் வசிக்கும் 30 வீத சீக்கியர்கள் கனடாவில் பிறந்த இரண்டாம், மூன்றாம் தலைமுறை சீக்கியர்கள் ஆவர். கனடாவில் குடியேறிய வெளிநாட்டினரின் எண்ணிக்கையிலும் இந்தியர்கள் முதலிடம் பெறுவர். 2016 முதல் 2021 வரையிலான நிலவரப்படி, கனடாவில் குடியேறிய வெளிநாட்டினரின் பட்டியலில், சீனாவையும், பிலிப்பைன்ஸையும் பின்னுக்குத் தள்ளி, இந்தியா முதலிடம் வகிக்கிறது.

இதேபோல கனடாவில் கடந்த 2020 ஜனவரி முதல் கடந்த ஜூலை வரையிலான காலகட்டத்தில், நிரந்தரக் குடியுரிமை கோரி விண்ணப்பித்தவர்களிலும், இந்தியர்கள் 4.6 லட்சம் என்ற எண்ணிக்கையில் முதலிடம் பெறுகின்றனர். இதற்கு அடுத்தபடியாக சீனர்கள் (1.05 லட்சம்) மிகப் பெரிய இடைவெளியுடன் 2-ஆம் இடம் வகிக்கின்றனர்.

இதே காலகட்டத்தில் கனடாவில் கல்வி பயில விண்ணப்பித்தவர்களின் எண்ணிக்கையிலும் இந்தியர்கள் (8.7 லட்சம்) முதலிடம் வகிக்கின்றனர். இதற்கு அடுத்தபடியாக 1.2 லட்சம் நைஜீரிய மாணவர்கள் கனடாவில் கல்வி பயில விண்ணப்பித்து, அங்கு கல்வி கற்று வருகின்றனர்.



கனடாவைப் பொறுத்தவரை, குறிப்பிட்ட சில பணிகளில் வெளிநாட்டுப் பணியாளரை பணியமர்த்தும் முன், பணி வழங்கும் நிறுவனம் அல்லது தனிநபர், கனடா அரசிடமிருந்து எல்எம்ஐஏ (தொழிலாளர் சந்தை தாக்க மதிப்பீடு) சான்று பெற வேண்டும்.

அதாவது கனடாவில் ஒரு பணியை அந்நாட்டு பிரஜையோ, நிரந்தரக் குடியுரிமை பெற்ற நபரோ செய்ய முடியாது என ஒரு நிறுவனம் கருதினால், அந்த வேலைக்கு வெளிநாடுகளிலிருந்து தொழிலாளர்களைப் பணியமர்த்திக் கொள்ளலாம். இதன் அடிப்படையில் வேலைவாய்ப்பு பெற விண்ணப்பித்தவர்களின் எண்ணிக்கையிலும் இந்தியர்கள் அதிகளவில் உள்ளனர்.

கல்வி, வேலைவாய்ப்பு மட்டுமன்றி, வணிகத்திலும் இந்தியாவால் தவிர்க்கமுடியாத நாடாக கனடா விளங்குகிறது. 2016 முதல் 2018 வரையிலான நிலவரப்படி, 3.6 மில்லியன் டாலர் மதிப்பில் நிலக்கரியை கனடாவிடமிருந்து இந்தியா தருவித்துள்ளது. இந்தியாவின் ஒட்டுமொத்த நிலக்கரி இறக்குமதியில் இது 2.6 மூ ஆகும்.

இதே காலகட்டத்தில் இந்தியாவிடமிருந்து 1.7 மில்லியன் டாலர் மதிப்பிலான மருந்து பொருள்களை கனடா இறக்குமதி செய்திருக்கிறது. வெளிநாடுகளிலிருந்து கனடா இறக்குமதி செய்யும் மருந்துப் பொருள்களில், இது 4 வீதம் ஆகும்.

இதேபோல கோடிக்கணக்கான ரூபாய் மதிப்பில் வைரம், தங்கம், கைத்தறிப் பொருள்களையும் இந்தியாவிடமிருந்து 2016-2018-இல் கனடா இறக்குமதி செய்துள்ளது. இந்தியாவும் பருப்பு, பட்டாணி, சோயா பீன்ஸ், வேர்க்கடலை போன்றவற்றை அதிகளவில் கனடாவிலிருந்து இறக்குமதி செய்துள்ளது.

தற்போது நிஜ்ஜார் கொலை குற்றச்சாட்டின் எதிரொலியால் இந்தியா- கனடா மட்டுமல்லாமல், கனடா- வங்கதேசம் இடையிலான உறவிலும் விரிசல் ஏற்பட்டிருக்கிறது. பயங்கரவாதிகளுக்கு கனடா அடைக்கலம் கொடுப்பதாக வங்கதேசம் ஏற்கெனவே குற்றம்சாட்டியிருந்தது.

இந்நிலையில், இந்தியா மீதான கனடாவின் குற்றச்சாட்டின் பின்னணியில், வங்கதேச வெளியுறவு அமைச்சர் ஏ.கே. அப்துல் மேமன் கடந்த வாரம் ஒரு பேட்டியளித்திருந்தார். அதில் வங்கதேச தந்தையும், பிரதமர் ஷேக் ஹசீனாவின் தந்தையுமான ஷேக் முஜிபுர் ரஹ்மான் கொலைக்குக் காரணமான பயங்கரவாதி எஸ்.எச்.எம்.பி. நூர் சௌதரிக்கு கனடா பல ஆண்டுகளாக அடைக்கலம் அளித்து வருவதாகக் குற்றம்சாட்டினார். மேலும், கொலை குற்றம் புரிந்தவர்கள் கனடா சென்று ஏகபோகத்துக்கு சலுகைகளை அனுபவிப்பதாகவும் அப்துல் மேமன் தெரிவித்திருந்தார்.

வங்கதேச தந்தை ஷேக் முஜிபுர் ரஹ்மான் கடந்த 1975-இல் சுட்டுக் கொலை செய்யப்பட்டார். அவரை நூர் சௌத்ரி துப்பாக்கியால் சுட்டுக் கொலை செய்ததற்கு பல்வேறு சாட்சிகள் இருந்தபோதிலும், அவரை சட்டப்படி கனடாவிலிருந்து வங்கதேசம் அழைத்து வந்து நீதி விசாரணைக்கு உட்படுத்துவதில், அந்நாடு சிக்கல்களை சந்தித்து வருகிறது. இதே வழக்கில் குற்றவாளியாக சேர்க்கப்பட்டிருந்த முன்னாள் ராணுவ அதிகாரி ரஷீத் சௌதரிக்கு வங்கதேச நீதிமன்றம் மரண தண்டனை விதித்த போதிலும், அவர் கடந்த 1990களிலேயே கனடாவில் குடியேறிவிட்டார்.

நூர் சௌதரியை கனடாவிலிருந்து நாடு கடத்த வங்கதேச பிரதமர் ஷேக் ஹசீனா மேற்கொண்ட முயற்சிகள் பலனளிக்கவில்லை.1996-இல் வங்கதேச பிரதமராக ஷேக் ஹசீனா பதவி ஏற்றதும், தனது தந்தையின் கொலைக்கு காரணமானவர்களை தண்டிக்க உரிய சட்டத்திருத்தம் கொண்டுவந்தார்.

கொலை குற்றவாளிகளுக்கு கீழமை நீதிமன்றம் விதித்த மரண தண்டனையை டாக்கா உச்சநீதிமன்றமும் உறுதிப்படுத்தியது. ஆனாலும், கனடாவில் நூர் சௌதரிக்கு அரசியல் செல்வாக்கு இருப்பதால், அவரை டாக்கா அழைத்து வருவதில் தொய்வு ஏற்பட்டது.

இந்த தருணத்தில், இந்தியா- கனடா இடையிலான பிரச்னையை வாய்ப்பாகப் பயன்படுத்தி, கனடா தங்களுக்கு இழைத்த அநீதியை வங்கதேசமும் உலக மன்றத்தில் முன்வைக்கத் தொடங்கிவிட்டது.

ஈழநாடு



# கனடா தொல்காப்பிய மன்ற ஆண்டுவிழா

குரு அரவிந்தன்

கனடா, ரொறன்ரோவில் உள்ள தொல்காப்பிய மன்றத்தினர் நடத்திய 8வது தொல்காப்பிய ஆண்டுவிழா - 2023 தமிழிசைக் கலாமன்றத்தில் அண்மையில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது.


மங்கள விளக்கேற்றல், கனடிய தேசியப்பண், தமிழ்த் தாய் வாழ்த்து, தொல்காப்பிய மன்றப்பாடல் ஆகிய வற்றைத் தொடர்ந்து அகவணக்கம் இடம் பெற்றது. அதைத் தொடர்ந்து கனடா பழங்குடி மக்களின் அங்கீகாரம் வாசிக்கப்பட்டது. அடுத்து தொல்காப்பிய மன்றத் தலைவர் முனைவர் திருமதி செல்வநாயகி சிறிதாஸ் அவர்களின் தலைமை உரை இடம் பெற்றது.

தலைமை உரையைத் தொடர்ந்து நடன ஆசிரியை திருமதி சியாமளா தயாளனின் மாணவிகளின் நடன நிகழ்ச்சி இடம் பெற்றது. அதைத் தெடர்ந்து பேச்சுப் போட்டிகளில் பங்கு பற்றி முதற்பரிசு பெற்ற ஆறு பிரிவுகளைச் சேர்ந்த மணவர்களின் உரைகள் ஒவ்வொன் றாக இடம் பெற்றன.

இந்த நிகழ்ச்சியைத் தொடர்ந்து சிறப்பு விருந்தின ரின் உரைகளும், செல்வி ஜஸ்வரியா சந்துருவின் வாய்ப்பாட்டு இசைநிகழ்ச்சியும் இடம் பெற்றன. இந்த இசை நிகழ்ச்சிக்கு செல்வன் கீதன் விவேகானந்தன் மிருதங்கமும், நமிகா வசந்தகுமார் வயலினும் வாசித்த னர். தொடர்ந்து அடுத்த தலைமுறையிரை ஊக்குவிக் கும் சிறந்த நோக்கத்தோடு நடத்தப்பட்ட தமிழ் மொழி சார்ந்த போட்டிகளில் பங்கு பற்றியவர்களுக்குப் பரிசுக ளும், நிகழ்வில் பங்குபற்றிய தொண்டர்களுக்குச் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

அடுத்து கலைக்கோவில் நாட்டியக் கலாகுலநிதி திருமதி வனிதா குகேந்திரன் அவர்களின் மாணவிகளின் நடன நிகழ்ச்சி இடம் பெற்றது. அடுத்து முதன்மை விருந்தினர் பேராசிரியர் முனைவர் ஜோசப் சந்திரகாந் தன் அடிகளாரின் உரை இடம் பெற்றது. தமிழக அரசு சார்பாக இலக்கிய விருது பெற்ற மூவர் இவ்விழாவில் கௌரவிக்கப்பட்டனர். தொடர்ந்து மன்றச் செயலாளர் திரு சி. சண்முகராசா அவர்களின் நன்றியுரையுடன் விழா சிறப்பாக முடிவடைந்தது.

இந்த நிகழ்வின் போது தொல்காப்பிய விழா மலர் ஒன்றும் வெளியிட்டு வைக்கப்பட்டது. 279 பக்கங்க ளைக் கொண்ட இந்த மலரில் வாழ்த்துரைகளைத் தொடர்ந்து பலனுள்ள பல கட்டுரைகள் இடம் பெற்றிருக்கின்றன. பேராசிரியர் கு. வே. பாலசுப்ரமணி யன், முனைவர் செல்வநாயகி சிறிதாஸ், சி. சண்முகராசா, எழுத்தாளர் குரு அரவிந்தன், யோகா அருள்சுப்பிரமணி யம், ரஜிதா சூரியகுமார், சாரதா குமாரசாமி, பவானி சந்திரன், மருத்துவர் துளசி விக்னேஸ்வரன், கௌரிசிவம் குணரட்ணம், கஜரூபன் குகதாசன், பேராசிரியர் அமுது ஜோசப் சந்திரகாந்தன், முனைவர் பால.சிவகடாட்சம், முனைவர் ஜோதி எஸ். தேமொழி, மருத்துவர் வரதா. கந்தசாமி, சின்னையா விமலநாதன், இலக்குவனார் திருவள்ளுவன், சிவ ஞான நாயகன், உமா சூரியகுமார், கலா அரியராசா, சண்முகலிங் கம் கந்தையா, விக்னேஸ்வரன் கணபதிப்பிள்ளை, த. சிவபாலு, சுவந்தி சங்கர், மருத்துவர் சாயி சர்மா, மேரி ஞானப்பிரகாசம், புட்பா கிறிட்டி, சாதனா பாலேந்திரன், சந்திரன் வேலாயுதபிள்ளை, முத்தையா அரியராசா, லலிதா. மகேந்திரன், லீலா சிவானந்தன், சசிகலா ஜீவானந்தன், கிருஸ்ணபிள்ளை ஆனந்தராஜா, அகணி சுரேஸ் ஆகியோரது கட்டுரைகள் இதில் இடம் பெற்றிருக்கின் றன.








புலம் பெயர்ந்த மண்ணில் சிறப்பாக இந்த மலரை வெளியிட்டு ஆவணப்படுத்திய தொல்காப்பிய மலர்க் குழவினருக்கும், நிகழ்வைச் சிறப்பாக நடத்தி முடித்த செயற்குழுவினருக்கும் எமது பாராட்டுக்கள் உரித்தாகுக!

---



# வியுக்தியார் பதில்கள்

உங்கள் கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி

வியுக்தியார் பதில்கள்
ஈழநாடு, 707 ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
viyukthiyar@gmail.com

**க. தில்லைநாதன்,**
**மட்டுவில், சாவகச்சேரி**

**கேள்வி:** இலங்கைக்கு சர்வதேச நாணய நிதியத்தின் கடன் நிவாரணம் கிடைப்பதற்கு சீனா தடையாக உள்ளது என்றும், இலங்கைக்கு மிகத் தேவையாக உள்ள 300 கோடி டொலர் கிடைப்பனவை சீனா தடுக்கிறது என்றும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளதே. எதற்காக சீனா இப்படிச் செய்கின்றது என்று நினைக்கின்றீர்கள்?

**வியுக்தியார்:** இப்படித்தானே, அம்பாந்தோட்டை யில் துறைமுகம் கட்டுவதற்கு பணத்தைக் கடனாகக் கொடுத்த பின்னர் இலங்கையால் கடனைக் கட்ட முடி யாதபோது, துறைமுகத்தையே 99 வருடங்களுக்கு எழுதி வாங்கிக்கொண்டது. அதேபோல இப்போதும் எதையாவது எழுதி வாங்கலாமா என்று முயற்சிக்கின் றதுபோலும். கடனைப்பட்டவர்கள் மகிந்த தரப்பினர் என்றாலும் எழுதிக்கொடுத்தவர் ரணில் என்பதால், இப்போதும் அவருக்கு நெருக்கடி கொடுத்தால் எதையா வது எழுதிக் கொடுப்பார் என்று நினைக்கிறார்கள் போலும். ரணிலும் அடுத்தவாரம் சீனா செல்கிறார் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

---

**செல்வா. கேசவன் சங்கிலியன் வீதி,**
**நல்லூர்.**

**கேள்வி:** கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி அகழ்வுப் பணிகள் நிறுத்தப்படும் சூழல் காணப்படுவ தாக முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலை சட்ட வைத்திய அதிகாரி தெரிவித்துள்ள அதேவேளை, மனித புதைகுழி அகழ்வுக்கு ஒதுக்கப்பட்ட நிதி இன்னும் கையிருப்பில் இருக்கிறது என்று முல்லைத்தீவு மாவட்ட செயலகம் தெரிவித்துள்ளதே. அப்போ யார் சொல் வதை மக்கள் நம்புவது?

**வியுக்தியார்:** அவரவர் தத்தமது வேலைகளை செய் தால் இப்படி பிரச்சினை வராதல்லவா? சட்ட வைத்திய அதிகாரி தனது கடமைக்கு உட்பட்ட விடயங்களைப் பேசவேண்டுமே தவிர, தனக்கு சம்பந்தமில்லாத விடயங்களில் தலையை நுழைத்திருக்கத் தேவை யில்லை. மனிதப்புதைகுழுக்களின் அகழ்வுப்பணிகள் தொடர்வதோ அல்லது நிறுத்தப்பபடுவதோ அதன் பின்னால் பல காரணங்கள் இருக்கலாம். ஆனால் புதைகுழிகள் தோண்டப்படவேண்டும் என்பதில் தமிழர் அரசியல் தலைவர்கள் உறுதியாக இருக்கவேண்டும்.

**எம். கௌதம், அமிர்தகழி, மட்டக்களப்பு**

**கேள்வி:** முல்லைத்தீவு நீதிபதிக்கு, தான் அச்சுறுத்தல் விடுத்திருந்தால், தன்னை அந்த நேரத்திலேயே கைது செய்திருக்கலாம் என பொதுஜன பெரமுன வின் பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தெரிவித் திருக்கிறாரே. அவர் சொல்வதிலும் நியாயம் இருப்ப தாகத்தானே தெரிகின்றது?

**வியுக்தியார்:** அவர் அச்சுறுத்தல் விடுத்திருந்தார் என்று யார் சொன்னார்கள் அவருக்கு?. தனக்கு உயிர் ஆபத்து இருக்கிறது என்றுதானே நீதிபதி சொல்லியி ருந்தார். அவர் யார் பெயரையும் குறிப்பிட்டு சொல்ல வில்லையே. யாழ்ப்பாண மேயராக இந்த அல்பிரட் துரையப்பா தமிழ் இளைஞர்களால் சுட்டுக்கொல்லப் பட்டபோது, அந்தக் காலத்தில் இருந்த தமிழ் அரசியல் வாதிகள் உணர்ச்சிகரமான பேச்சுக்கள் பேசியதால்தான் இளைஞர்கள் அவரை சுட்டுக் கொன்றனர் என்று கூறப் படுவதுண்டு. அது ஒருவகையில் சரியானதும் கூட. அதேபோலத்தான் இவரது பேச்சுக்கள் சிங்கள இளை ஞர்களை உசுப்பேத்துகின்றன. அவர்களால் நீதிபதிக்கு ஆபத்து என்று கூறப்படுவதில் உண்மை இல்லாமல் இல்லையே. உசுப்பேத்தும் பேச்சுக்கள் பேசியதற்காக கைதுசெய்யமுடியுமா?

---

**இரா. இராஜேஸ்கரன், ஸ்ரேசன் வீதி, வவுனியா.**

**கேள்வி:** கடந்த சில வருடங்களில் 5 ஆயிரத்து 600 கோடி அமெரிக்க டொலர்கள் சக்தி வாய்ந்த நபர்களால் வெளிநாடுகளில் பதுக்கி வைக்கப்பட்டுள்ளது என்று நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ள அதேவேளை, இந்த ஆண்டு மட்டும் 900 கோடி அமெ ரிக்க டொலர்கள் பதுக்கப்பட்டுள்ளன என்கிறாரே. இத்தனை தொகை வெளிநாடுகளில் பதுக்கப்பட்டால் நாட்டில் பொருளாதார நெருக்கடி ஏற்படத்தானே செய்யும்?

**வியுக்தியார்:** இலங்கை அரசு வெளிநாடுகளிற்கு கொடுக்கவேண்டிய தொகையை விட அதிகமாக இலங் கையர்கள் பதுக்கி வைத்திருக்கிறார்கள் என்கிறாரே. அதைவிட இந்த ஆண்டில் மாத்திரம் 900 கோடி டாலர் என்பது, ஒன்பது பில்லியன் டாலர்கள். ஐஎம்எவ்விடம் முதலில் 300 மில்லியன் டாலர்கள் (30 கோடி) கடன் பெறுவதற்காக எத்தனை மாதங்களாக மத்திய வங்கியும் நிதி அமைச்சும் மண்டையைப் போட்டுக் குழப்பிக் கொண்டிருந்தார்கள். இப்போது மீண்டும் 300 மில்லி யன் கடன் பெறுவதற்காக படாதபாடு பட்டுக்கொண் டிருக்கின்றனர். ஐ.எம்.எவ்வின் நிபந்தனைகளை ஏற்றுக்கொள்வதால், அதனாலும் மக்கள் தான் பாதிக்கப்படுகின்றனர். இத்தனை தொகை பணம் பதுக்கிவைக்கப்பட்டிருக்கின்றது என்று சொல்லும் நீதி அமைச்சர் அதனைக் நாட்டிற்குள் கொண்டுவருவதற்கு புதிதாக சட்டம் தயாரிப்பதை விட்டுவிட்டு முகநூல்களை எப்படி கட்டுப்படுத்தலாம் என்றல்லவா சிந்தித்துக்கொண்டிருக்கிறார். முதலில் இப்படி சரியான விபரங்களை தெரிந்து வைத்திருக்கின்ற அவர்களைப் போன்றவர்களை விசாரணை செய்யவேண்டும். அந்த பணத்தை நாட்டுக்குள் கொண்டு வந்தாலே கடனற்ற நாடாக நமது நாடு வந்துவிடமே.


# மேற்கு ஆபிரிக்காவில் பிரான்ஸ் படைகளின் விலகல்! முடிவுறுகிறதா மேற்குலக ஆதரவு அரசுகளின் ஆட்சி

ஐங்கரன் விக்கினேஸ்வரா

ஆபிரிக்காவில் கடந்த கால பிரான்சின் காலனித்துவ ஆட்சியில், அல்ஜீரிய மற்றும் கேமரூனிய சுதந்திரத்திற்கான போரில் நூறாயிரக்கணக்கான உயிர்கள் பலியாகின. தற்போது மாலி மற்றும் மேற்கு ஆப்பிரிக்க பிராந்தியம் முழுவதும் பல தசாப்த கால பிரெஞ்சின் ஆதிக்க நடவடிக்கைகளுக்குப் பிறகு, ஆபிரிக்க மக்கள் பிரான்சை அங்கிருந்து வெளியேற கேட்கின்றனர்.

1960-ஆம் ஆண்டில், மேற்கு ஆபிரிக்கா பகுதியில் மட்டும் 50 லட்சம் சதுர கிலோ மீட்டர் பரப்பளவு, பிரான்ஸ் நாட்டின் பரப்பளவைப் போல் 8 மடங்கு, பிரான்ஸ் கட்டுப்பாட்டில் இருந்தது. 19ஆம் நூற்றாண்டின் மத்தியிலிருந்து (1850களில்) பிரான்ஸ் காலனியாதிக்கம் ஆபிரிக்காவின் வடக்கு, மேற்கு மற்றும் மத்தியப் பகுதிகளில் பாய்ச்சல் வேகத்தில் பரவியதும் வரலாற்று உண்மையாகும்.

தற்போது பிரான்ஸ் நைஜரின் இராணுவ ஆட்சிக்குழுவின் கோரிக்கையை ஏற்று அந்நாட்டிலிருந்து தனது இராணுவத்தை திரும்பப் பெற சம்மதித்துள்ளது.




### முடிவுறும் பிரான்சின் ஆதிக்கம்

புர்கினா பாசோவில் உள்ள இராணுவ ஆட்சிக்குழு, அருகிலுள்ள நைஜர், மாலி மற்றும் சஹேல் பிராந்தியம் முழுவதும் 2013 இல் பிரெஞ்சு ஆதரவுடன் அரசுகள் ஆட்சிக்கு வந்தன.

இந்த மூன்று நாடுகளின் இராணுவ ஆட்சியாளர்களும் தற்போது முன்னாள் காலனித்துவ சக்தியான பிரான்சை தங்கள் நாடுகளில் இருந்து துருப்புக்களை திரும்பப் பெறுமாறு கேட்டுக் கொண்டுள்ளனர்.

நைஜீரியா, கானா, ஐவரி கோஸ்ட் மற்றும் பிரெஞ்சு ஆதரவு பெற்ற மேற்கு ஆபிரிக்க நாடுகளின் பொருளாதார சமூகத்தில் (ECOWAS) பாரிஸின் ஆதிக்க இராணுவ ஆட்சிகளை கவிழ்க்க, மொஸ்கோ புதிய மக்கள் ஆட்சிகளுக்கு ஆதரவை வழங்குகிறது எனவும் குற்றச்சாட்டுக்கள் உள்ளன.

வரலாற்று ரீதியில் தேசிய விடுதலைப் போராட்டங்கள் செனகல் தொடங்கி, சாட் வரை வெற்றி பெற்று அந்த நாடுகள் சுதந்திரம் பெற்றாலும், அந்நாடுகளின் நிதி மற்றும் கனிம வளத்தை பிரான்சே கையாண்டது.

### நைஜரில் இருந்து படை விலகல்:

நைஜரில் இருந்து படைகளை விலகுவதற்கான பிரெஞ்சு ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோனின் முடிவு, இந்தப் பிராந்தியத்தில் பிரான்சுக்கான ஒரு சகாப்தத்தின் முடிவைக் குறிக்கிறது.

**நைஜரில் இருந்து படை விலகுவதற்கான பிரெஞ்சு ஜனாதிபதி இம்மானுவல் மக்ரோனின் முடிவு, இந்தப் பிராந்தியத்தில் பிரான்ஸுக்கான ஒரு சகாப்தத்தின் முடிவைக் குறிக்கிறது. ஆட்டங்காணும் பிரான்ஸ் ஆதிக்கத்தால், நவ காலனித்துவ ஆட்சிகளுக்கு முற்றுப்புள்ளியா எனவும் கருதலாம்**




மேற்கு ஆபிரிக்க சஹேல் பிராந்தியத்தில் இராணுவத் தலையீடுகள், ஆபிரிக்காவில் அதன் முன்னாள் காலனிகள் ஆதிக்கம் செலுத்த முடியாததை எடுத்துக் காட்டுகிறது.

பிரெஞ்சு துருப்புக்களை வெளியேற்ற அழைப்பு விடுக்கும் ஆபிரிக்க இராணுவ ஆட்சியாளர்கள், செப்டம்பர் முதல் வாரத்தில் ரஷ்ய துணை பாதுகாப்பு மந்திரி யூனுஸ்-பெக் யெவ்குரோவ் தலைமையிலான ரஷ்ய தூதுக்குழு புர்கினா பாசோவிற்கு விஜயம் செய்து, இராணுவ ஆட்சிக்குழுவின் தலைவர் இப்ராஹிம் ட்ராரேவை சந்தித்தது. சந்திப்புக்குப் பிறகு, செய்தியாளர்களிடம் இராணுவ உதவி, அணுசக்தி மற்றும் பொருளாதார உறவுகள் பற்றி விவாதித்த தாக கூறினார்.

ரஷ்ய-புர்கினா பாசோ இராணுவப் பேச்சுவார்த்தைகளானது, உக்ரேனில் ரஷ்யாவுடனான நேட்டோ போருக்கு மத்தியில் நிகழும் சர்வதேச புவிசார் அரசியல் பதட்டங்களை மேலும் சிக்கலான அரசியல் பிரச்சினைகள் இரண்டையும் எடுத்துக்காட்டுகின்றன.

இந்த ஆண்டு இறுதிக்குள் பிரான்ஸ் தனது 1,500 வீரர்களை படிப்படியாக திரும்பப் பெறுவதாகவும், அண்டை நாடுகளான புர்கினா பாசோ மற்றும் மாலியில் இருந்து வலுக்கட்டாயமாக திரும்பப் பெறப்பட்டதை அடுத்து வரும் இந்த முடிவின் பின்விளைவுகள் பாரிய அளவில் உணரப்படுகின்றன.

இந்தப் பிராந்தியத்தில் பாரிஸுக்கு ஏற்பட்ட தொடர்ச்சியான பின்னடைவாகும். தற்போது இங்கு பிரான்சின் செல்வாக்கு கணிசமாகக் குறைந்துள்ளது. ஆனால் நைஜரில் நிலைகொண்டுள்ள வீரர்கள் எங்கு செல்வார்கள், ஆபிரிக்காவில் இன்னும் எஞ்சியிருக்கும் இராணுவ தளங்களை பாரிஸ் என்ன செய்யும், பிராந்தியத்தில் இஸ்லாமிய பயங்கரவாதத்திற்கு எதிரான போராட் டத்தை எப்படி தொடரும் என்பதுதான் இப்போது முக்கிய கேள்விகள் ஆகும்.

நைஜரில் இருந்து வெளியேற்றப் பட்டமை பிரெஞ்சு இராஜதந்திர வட்டங்களுக்குள்ளும் பலத்த சலசலப்பை ஏற்படுத்தி உள்ளது.

### ஆபிரிக்க நாடுகளுடனான உறவு:

இவ்வருட பெப்ரவரியில், ஆபிரிக்க நாடுகளுடன் ஒரு புதிய வகை இராணுவ உறவுக்கு பிரான்ஸ் அதிபர் மக்ரோன் உறுதியளித்தார். இது நவ-காலனித்து வக் கருத்துகளால் கறைபடாது, மாறாக சமமானவர்களின் கூட்டுறவாக இருக் கும். பிராந்தியத்தில் மீட்டமைப்பதை நோக்கமாகக் கொண்டு, உள்ளூர் அரசாங்கங்களுடன் இணைந்து பயங்கரவாதத்தை எதிர்த்துப் போராடும் பிரான்சின் ஆப்பிரிக்க மூலோபாயத்தின் அடிப்படை மாற்றத்தை மக்ரோன் அறிவித்தார்.




பிரெஞ்சு அரசியல் உயரடுக்கிற்கு, ஆபிரிக்க பின்னடைவானது ஒரு உணர்வுப்பூர்வமான தொனியை ஏற்படுத்தி உள்ளது. பிரான்ஸ் ஒரு உலகளாவிய சக்தியாக அதன் அந்தஸ்தை இழக்கக் கூடும் என்ற அச்சத்தையும் ஊட்டியுள்ளது.

பிரெஞ்சு ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோன், மொஸ்கோவுடனான நைஜீரிய, புர்கினா பாசோ மற்றும் மாலியன் இராணுவங்களின் உறவுகளை ஜனநாயகத்திற்கு எதிரானது என்றும், நவ ஏகாதிபத்தியங்களுடன் சுயமாக பிரகடனப்படுத்தப்பட்ட ஆபிரிக்க வாதிகளின் கூட்டணி என்றும் விபரித்தார்.

### ரஷ்ய-ஆபிரிக்க உச்சிமாநாடு:

கடந்த 2022 ஜூலையில் செயின்ட் பீட்டர்ஸ்பேர்க்கில் நடந்த ரஷ்ய-ஆபிரிக்க உச்சிமாநாட்டின் போது ஜனாதிபதி விளாடிமிர் புட்டினுடன் பேச்சு வார்த்தை நடத்துவதற்காக புர்கினா பாசோ தலைவர் இப்ராஹிம் டிராரோ பின்னர் ரஷ்யா சென்றார்.

செயின்ட் பீட்டர்ஸ்பர்க்கில் புட்டினிடம் பேசிய இப்ராஹிம் டிராரே, ரஷ்யாவுடனான ஒத்துழைப்பை மீண்டும் பாராட்டினார். ஆனால், அவர் பிரெஞ்சு ஆதிக்கத்தை புர்கினா பாசோவில் உழைக்கும் மக்கள் மற்றும் இளைஞர்களை ஒடுக்குபவர்களாக வலியுறுத்தினார்.

தற்போது புர்கினா பாசோ மற்றும் மாலி நாடுகள் தங்கள் நாட்டு துருப்புகளை நைஜர் நாட்டிற்கு உதவ அனுப்பியுள்ளன. நைஜர் நாட்டின் மீதான எந்த ஒரு இராணுவ தலையீடும் தங்கள் நாடுகளுக்கும் எதிரான தலையீடாக பார்க்கப்படும் என்று அறிவித்துள்ளன. புர்கினா பாசோ, மாலி, கினி, நைஜர் ஆகிய நாடுகளில் சுமார் 8.5 கோடி மக்கள் வாழ்கின்றனர், இந்த நாடுகளை இணைத்து புதிய கூட்டமைப்பு உருவாக்க தீவிரமான பேச்சுவார்த்தைகள் நடைபெறுகிறது.

செனகலில் இருந்து சாட் வரையிலும் உள்ள பகுதியில் ஏற்பட்டுள்ள கொந்தளிப்பான நிலைமைகளைப் பார்க்கும் போது ஆப்பிரிக்க கண்டத்தில் மேற்குலக ஆதிக்கம் வலுவிழப்பாதாக பார்க்கலாம்.

மிகப்பெரிய மக்கள்தொகை மற்றும் மிகவும் மூலோபாயம் வாய்ந்த யுரேனியம் மற்றும் எண்ணெய் இருப்புக்களைக் கொண்ட நைஜரில் நடந்த போராட்டங்களுக்குப் பிறகு, ஜூலை 26 அன்று ஆட்சி அதிகாரம் மக்களிடம் வந்தது. நைஜரில் உள்ள நேட்டோவின் பிரதான இராணுவத் தளத்திற்கு வெளியே நடந்த வெகுஜன ஆர்ப்பாட்டங்களுக்குப் பிறகு, இப்போது பிரெஞ்சு துருப்புக்களை அந்தப் பிரதேசத்தை விட்டு வெளியேறு மாறு ஆளும் அரசு கோரியுள்ளது. இதுவே ஆபிரிக்காவில் மேற்குலக ஆதிக்கத்தின் முடிவுறும் சகாப்த அறிகுறியாக தென்படுகிறது.



# ஹாட்லி பழைய மாணவர்களின் விழிப்புணர்வுப் பேரணி நேற்று





வடமராட்சி, ஒக். 08

ஹாட்லி கல்லூரி பழைய மாணவர்களின் விழிப்புணர்வு பேரணி நேற்று காலை 7.30 மணிக்கு கல்லூரி விளையாட்டு மைதானத்தில் இருந்து ஆரம்பமாகி நடைபெற்றுள்ளது.

ஹாட்லி கல்லூரியின் 185 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு பழைய மாணவர்களினால் "பிளாஸ்ரிக் மாசுபாட்டிலிருந்து நமது சுற்றுச் சூழலைப் பாதுகாப்போம்" என்ற தொனிப்பொருளில் குறித்த விழிப்புணர்வு பேரணி ஆரம்பிக்கப்பட்டு முன்னெடுக்கப்பட்டது.

கல்லூரி விளையாட்டு மைதானத்தில் இருந்து ஆரம்பமாகிய விழிப்புணர்வு பேரணியானது முலாம் கட்டைசந்தியை அடைந்து பருத்தித்துறை பிரதான வீதியூடாக பருத்தித்துறை நகரிற்கு சென்று ஹாட்லி கல்லூரியில் நிறைவு பெற்றது.

இப்பேரணியில் பங்கேற்றிருந்த பழைய மாணவர்கள் வீதியோரமாக காணப்பட்ட பிளாஸ்ட்டிக் மற்றும் பொலித்தீன்களை சேகரித்து சுற்றுச் சூழலை துய்மைப்படுத்தும் செயல்பாட்டில் ஈடுபட்டனர். (அ)

## வாகன விபத்தில் ஒருவர் உயிரிழப்பு!

கொழும்பு, ஒக். 08

பண்டாரவளை - இராவணன் எல்ல பகுதியில் நேற்று முற்பகல் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் உயிரிழந்தார்.

முச்சக்கரவண்டி ஒன்றும் பாரவூர்தியொன்றும் நேருக்கு நேர் மோதியதில் குறித்த விபத்து நேர்ந்துள்ளதாக எல்ல பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

முச்சக்கரவண்டியில் பயணித்த நபரே உயிரிழந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது.

உயிரிழந்தவர் கலகெதர பகுதியைச் சேர்ந்த 70 வயதுடையவர்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை எல்ல பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ)

## அற்லஸ் நிர்வாகிகள் தெரிவு

மெல்பேர்ன், ஒக். 08

அவுஸ்திரேலியத் தமிழ் இலக்கிய கலைச்சங்கத்தின் (Australian Tamil Literary and Arts Society – ATLAS) வருடாந்த பொதுக்கூட்டம் கடந்த 06 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை மெய்நிகரில் நடைபெற்றது.

சங்கத்தின் தலைவர் திருமதி சகுந்தலா கணநாதன் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில், செயலாளர் டாக்டர் நடேசன் ஆண்டறிக்கையையும் துணை நிதிச்செயலாளர் லெ. முருகபூபதி நிதியறிக்கையையும் சமர்ப்பித்தனர்.

2023 - 2024 ஆம் ஆண்டுகளுக்கான நிருவாகிகளும் தெரிவுசெய்யப்பட்டனர்.

காப்பாளர் : கவிஞர் இ. அம்பிகைபாகர்.

தலைவர்: கிறிஸ்டி நல்லரெத்தினம்.

துணைத்தலைவர்கள் : சட்டத்தரணி திருமதி மரியம் நளிமுடீன், ஐங்கரன் விக்னேஸ்வரா.

செயலாளர்: லெ. முருகபூபதி

துணைச்செயலாளர்: டாக்டர் நடேசன்

நிதிச்செயலாளர்: திருமதி சிவமலர் சபேசன்.

துணை நிதிச்செயலாளர் : திருமதி தேவகி கருணாகரன்.

செயற்குழு உறுப்பினர்கள்:

திருமதி சகுந்தலா கணநாதன், சட்டத்தரணி - பாடும்மீன் சு. ஸ்ரீகந்தராசா, கலாநிதி ஸ்ரீ கௌரிசங்கர், இப்ரகீம் ரஃபீக், திருமதி ஆழியாள் மதுபாஷினி ரகுபதி, சங்கர சுப்பிரமணியன். (அ)

# ரயில்சேவை பணிப் புறக்கணிப்பால் பணயக் கைதிகளாக்கப்படும் மக்கள்?

### ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க அமைச்சர் பணிப்பு



கொழும்பு, ஒக். 08

**தொடரும் ரயில் சேவை பணிப்புறக்கணிப்பு தொடர்பில் அமைச்சர் மட்டத்தில் விரைவான, பக்கச்சார்பற்ற விசாரணைகளை நடத்தி, பொது மக்களை ஒடுக்கும் பணிப் பகிஷ்கரிப்பாளர்களுக்கு எதிராக கடுமையான ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்குமாறு போக்குவரத்து, நெடுஞ் சாலைகள் மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் பந்துல குணவர்த்தன அமைச்சின் செயலாளருக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.**

கடந்த மாதத்தில் புகையிரதத்துடன் தொடர்புடைய சுமார் 84 பணிப்பகிஷ்கரிப்பாளர்களால் தன்னிச்சையாக முன்னெடுக்கப்பட்ட பணிப்பகிஷ்கரிப்பு நடவடிக்கையினால் மாணவர் ஒருவர் உயிரிழந்தார்.

குறித்த மாணவனின் மரணம் தொடர்பாக திணைக்கள மட்டத்திலும் குற்றப் புலனாய்வுப் பிரிவினராலும் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

இந்த விடயங்கள் அனைத்திலும் கவனம் செலுத்திய அரசாங்கம் விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் ரயில் சேவையை அத்தியாவசிய சேவையாக மாற்ற நடவடிக்கை எடுத்தது.

அந்த விதிகள் மற்றும் விதிமுறைகள் நடைமுறையில் இருந்தபோது, ரயில்வே பாதுகாப்புத் துறை அதிகாரி மற்றும் ரயில்வே துணைக் கட்டுப்பாட்டாளர் இடையே சிகரெட் தொடர்பான தகராறில் தொடங்கப்பட்ட உடனடி ரயில் வேலைநிறுத்தம் காரணமாக சமீபத்தில் ஏராளமான ரயில் பயணங்கள் ரத்து செய்யப்பட்டன.

இதனால், தினசரி ரயிலை பயன்படுத்தும் அலுவலக ஊழியர்கள் உட்பட பயணிகள் மிகுந்த சிரமத்திற்கு ஆளாகினர்.

இந்த விடயங்கள் அனைத்திலும் அவதானம் செலுத்திய அமைச்சர், அமைச்சு மட்டத்தில் விரைவான மற்றும் பக்கச்சார்பற்ற விசாரணைகளை மேற்கொண்டு சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு சட்டத்தை கடுமையாக அமுல்படுத்துமாறு அமைச்சின் செயலாளருக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

மேலும், பணயக்கைதிகளாக பயணிகளை வைத்து மேற்கொள்ளப்படும் இந்த பணிப் புறக்கணிப்பு நடவடிக்கையை அடுத்து ஏதேனும் நாசகார வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படுகிறதா என்பதை கண்டறிய குற்றப்புலனாய்வு திணைக்களத்திற்கு முறைப்பாடு செய்து துரித விசாரணை நடத்துமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதன்படி, போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் செயலாளரின் முன்முயற்சி மற்றும் மேற்பார்வையின் கீழ், அதிகாரிகளின் பங்களிப்புடன் நடத்தப்படும் விரைவான மற்றும் பக்கச்சார்பற்ற விசாரணையின் பின்னர் ரயில்வே பொது மேலாளர் உட்பட ஆர்வமுள்ள தரப்பினரின் சார்பாக சட் டத்தை கடுமையாக நடை முறைப்படுத்துமாறு அமைச்சர் அறிவுறுத்தியுள்ளார்.

# ரூ.90 ஆயிரம் மில்லியன் திறைசேரி உண்டியல்கள் 11ஆம் திகதி ஏலத்தில்

கொழும்பு, ஒக். 08

90 ஆயிரம் மில்லியன் ரூபா பெறுமதியான திறைசேரி உண்டியல்கள், எதிர்வரும் 11ம் திகதி ஏல விற்பனையின் ஊடாக வழங்கப்படவுள்ளதாக இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

இதன்படி, 91 நாட்கள் முதிர்வுக் காலத்தைக் கொண்ட 45 ஆயிரம் மில்லியன் ரூபா பெறுமதியான திறைசேரி உண்டியல்களும்,

182 நாட்கள் முதிர்வுக் காலத்தைக் கொண்ட 25 ஆயிரம் மில்லியன் ரூபா பெறுமதியான திறைசேரி உண்டியல்களும்,

364 நாட்கள் முதிர்வுக் காலத்தைக் கொண்ட 20 ஆயிரம் மில்லியன் ரூபா பெறுமதியான திறைசேரி உண்டியல்களும் ஏல விற்பனையின் ஊடாக வழங்கப்படவுள்ளதாக மத்திய வங்கி அறிவித்துள்ளது. (அ)

# மீண்டும் சீனக்கப்பல்...

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

பத்திரிகையாளரும் அரசியல் ஆய்வாளருமான பி.கே. பாலச்சந்திரன் கூறுகி றார்.

ஆனால், இந்தியா நெருக்குதல் கொடுக்கிறது அல்லது வேண்டுகோள் விடுக்கிறது என்பதற்காக சீனாவுக்கு அசௌகரியத்தைக் கொடுக்கக்கூடிய எந்தவொரு தீர்மானத்தையும் எடுக்கக்கூடிய நிலையில் இலங்கை இல்லை. கடந்த வருடம் படுமோசமான பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கியபோது வழங்கிய அவசரக் கடனுதவிக்கு கைம்மாறு செய்யும் வகையில் கொழும்பின் நடவடிக்கைகள் அமையவேண்டும் என்ற எதிர்பார்ப்பிலேயே சீனக்கப்பல்களின் வருகைக்கு அனுமதி வழங்கக்கூடாது என்ற கோரிக்கை இந்தியாவிடம் இருந்து வருகிறது என்று எண்ணம் இலங்கையில் பரவலாக இருக்கிறது. கொழும்பு சிங்கள, ஆங்கிலப் பத்திரிகைகள் பலவும் இது குறித்து ஆசிரிய தலையங்கங்களை தீட்டியிருக்கின்றன.

தனது கோரிக்கையை இலங்கை மதிக்கவில்லை என்பதற்காக இந்தியாவும் கூட இலங்கையுடன் கடுமையாக நடந்து கொள்வதில்லை எனலாம். முற்றுமுழுதாக சீனாவிடம் இலங்கை சரணடைந்துவிடுவதற்கு வழிவகுக்கக்கூடிய நடவடிக்கைகளில் இறங்குவதும் மூலோபாய அடிப்படையில் இந்தியாவுக்கு பாதகமானதாகவே அமையும்.

இலங்கைக்கு மிகவும் கூடுதலான இரு தரப்புக் கடனுதவியை வழங்கிய நாடான சீனா முக்கியமான உட்கட்டமைப்பு துறைகளில் 650 கோடி டொலர்களுக்கும் அதிகமான நிதியை முதலீடு செய்திருக்கிறது. இந்தியா உட்பட இலங்கைக்கு உதவி வழங்குவதற்கு ஆர்வம் கொண்டிருக்கும் வேறு எந்தவொரு நாடும் சீனாவின் உதவிக்கு நிகராக எதையும் செய்துவிடவும் முடியாது.

வெளிநாட்டு கடன்களை மறுசீரமைக்கும் இலங்கையின் திட்டத்துக்கு தயக்கத்துடன் முன்னர் ஒத்துக்கொண்ட சீனா கொழும்பின் எதிர்பார்ப்புக்கு ஏற்றமுறையில் அது விடயத்தில் நடந்துகொள்ளவில்லை என்பது அண்மையில் சர்வதேச நாணய நிதியத்தின் தூதுக்குழு இலங்கை வந்த பின்னரே வெளியில் தெரியவந்தது.

சீனாவுடன் கடன் மறுசீரமைப்பு பேச்சுவார்த்தைகளில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது என்று கடந்தவாரம் செய்தியாளர்கள் மகாநாட்டில் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க கூறினார். பாரிஸ் கழக நாடுகளுடனான பேச்சுவார்த்தைகளுடன் ஒப்பிடும்போது சீனாவுனான கடன் மறுசீரமைப்பு பேச்சுவார்த்தைகளில் முன்னேற்றம் தாமதமாகிறது என்ற செய்திகளை மறுத்துரைக்கையிலேயே அவர் அவ்வாறு கூறினார்.

சீனாவுக்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொள்ளவிருக்கும் ஜனாதிபதி விக்கிரமசிங்க பெய்ஜிங்கில் நடத்தவிருக்கும் பேச்சுவார்த்தைகளில் கடன் மறுசீரமைப்பு அதி முன்னுரிமைக்குரிய விடயமாக இருக்கும் என்று உயர்மட்ட வட்டாரங்களை மேற்கோள் காட்டி ஊடகங்கள் செய்திகளை வெளியிட்டிருக்கின்றன.

இந்த நிலையில் ஷி யான் 6 கப்பலின் வருகை தொடர்பில் சீனாவுக்கு விசனத்தைத் தரக்கூடிய எந்த அணுகுமுறையையும் இலங்கை அரசாங்கம் கடைப்பிடிக்கக்கூடியது சாத்தியமில்லை. இந்தியாவையும் சீனாவையும் ஒரே நேரத்தில் திருப்திப்படுத்தக்கூடிய தீர்மானம் ஒன்றை இலங்கை எடுப்பதும் நடைமுறைக்கு சாத்தியமானதல்ல.

## ஓ.எல்...

குறைக்கும் வகையிலும், தரத்தை உயர்த்தும் வகையிலும் 2025 ஆம் ஆண்டுக்குள் புலமைப்பரிசில், க.பொ.த சாதாரண தரம் மற்றும் உயர்தர பரீட்சைகளில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்த எதிர்பார்ப்பதாக அவர் தெரிவித்தார்.

அதற்கமைய, க.பொ.த சாதாரண தரத்தில் 9 பாடங்களின் எண்ணிக்கையை 5 அல்லது 6 பாடங்களாகக் குறைக்க உள்ளதாகவும், கட்டாயம் அல்லாத பிரிவு பாடங்களுக்கு பாடசாலை வாரியங்களால் நடத்தப்படும் பரீட்சை மூலம் மதிப்பெண் வழங்கும் முறை பின்பற்றப்படும் எனவும் பேராசிரியர் தெரிவித்தார்.

குறித்த விடயம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது, அதற்கான ஒரு முன்னோடி திட்டம் 2025 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அத்துடன் ஒரே நேரத்தில் 520 பாடசாலை வளாகங்கள் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இதற்கு மேலதிகமாக தற்போது 5 இல் இருந்து உயர்தரப் பாடங்களின் எண்ணிக்கை 8-9 ஆக அதிகரிக்கப்பட்டு மாணவர்கள் தெரிவு செய்வதற்கான வாய்ப்புகள் அதிகரிக்கப்படும்.

புதிய கல்வி சீர்திருத்தங்களின் கீழ், 1-13 தரங்கள் 1-12 ஆக குறைக்கப்பட்டு 12 ஆம் வகுப்பில் முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ)

## மன்னாரில்...

பிடித்து மண்டபம் மரைன் பொலிஸ் நிலையத்தில் வைத்து விசாரணை நடத்தினர்.

விசாரணையில் மன்னார் மாவட்டம் பேசாலை பகுதியை சேர்ந்த தேவராஜன் (வயது-43) என்பது தெரிய வந்தது. இவர் கடந்த 1990 ஆம் ஆண்டு தனது குடும்பத்துடன் தனுஷ்கோடி வழியாக அகதியாக வந்து மண்டபம் அகதிகள் முகாமில் தங்கி இருந்து பின்னர் 1996 ஆம் ஆண்டு கப்பல்கள் மூலம் ராமேஸ்வரத்தில் இருந்து மீண்டும் இலங்கைக்கு சென்றுள்ளார்.

தேவராஜன் மன்னார் மாவட்டத்தில் உள்ள முருங்கன் வைத்தியசாலையில் அம்புலன்ஸ் சாரதியாக பணி புரிந்து வரும் நிலையில், சில நாட்களுக்கு முன்னர் மற்றொரு வைத்தியசாலை ஊழியரான இரத்தினம் என்பவருடன் சேர்ந்து சுமார் 176 கிராம் ஐஸ் போதைப் பொருளை அம்புலன்ஸில் கடத்தி வந்துள்ளார்.

வைத்தியசாலைக்கு வெளியில் வைத்து அதனை விற்பனை செய்த போது இருவரையும் முருங்கன் பொலிஸார் கைதுசெய்து விசாரணை செய்த வேளை தேவராஜன் விசாரணை செய்த பொலிஸ் உத்தியோகத்தரின் விரலை கடித்து விட்டு அங்கிருந்து தப்பி உள்ளார்.

தேவராஜனை பொலிஸார் தேடி வந்த நிலையில் நேற்று முன் தினம் மாலை சுமார் 6 மணி அளவில் தலை மன்னாரிலிருந்து கடல் வழியாக சட்டவிரோதமாக தப்பிச் சென்றுள்ளார். ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாய் பணம் கொடுத்து படகில் புறப்பட்டு தனுஷ்கோடி அடுத்துள்ள மணல் திட்டில் இறங்கியுள்ளார்.

பின்னர் தங்கச்சிமடம் சூசையப்பர் பட்டினத்தைச் சேர்ந்த சந்தியா டைமன் என்பவர் நாட்டுப்படகில் தேவராஜனை அழைத்து வந்து பாம்பன் குந்துகால் கடற்கரை அருகே இறக்கிவிட்டு சென்றதாக தேவராஜன் கூறியதாக தெரிய வந்துள்ளது.

தேவராஜன் மீது சட்டவிரோதமாக கடவுச்சீட்டு இல்லாமல் இந்தியாவுக்குள் ஊடுருவியதாக வழக்கு பதிவு செய்த மரைன் பொலிஸார் விசாரணைக்கு பின் ராமேஸ்வரம் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தி புழல் சிறையில் அடைக்க நடவடிக்கை எடுத்து வருவதாக மரைன் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ)

## மலேசிய...

அந்நாட்டின் உயர்மட்ட இராஜதந்திரிகள் குழுவும் நாட்டுக்கு வருகை தரவுள்ளது.

இன்று வருகை தரவுள்ள மலேசிய வெளிவிவகார அமைச்சர் தலைமையிலான இராஜதந்திரிகள் குழாம் எதிர்வரும் 12 ஆம் திகதி வரை நாட்டில் தங்கியிருப்பார்களென தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## மட்டக்களப்பில்...

மட்டக்களப்பு மயிலத்தமடு எல்லைக் கிராமத்தில் இருந்து 990 தமிழ் அப்பாவிப் பண்ணையாளர்கள் சிங்கள இனவாதிகளால் மிரட்டப்பட்டு வெளியேற்றப்பட்டுள்ளார்கள். அவர்களுடைய மேய்ச்சல் தரைகள் பறிக்கப்பட்டுள்ளன.

இதனை எதிர்த்து இன்று மட்டக்களப்பில் பாரிய எதிர்ப்பு போராட்டம் ஒன்றை அவர்கள் நடத்த இருக்கின்றார்கள். அவர்களுடைய போராட்டத்துக்கு ஆதரவு தெரிவிப்பதற்காக நாங்களும் இங்கே வந்திருக்கின்றோம்.

அன்பார்ந்த தமிழ் மக்களே, நாங்கள் இந்த இடத்தில் மயிலத்தமடு உறவுகளுக்கு ஒட்டுமொத்த ஆதரவையும் காட்டவேண் டிய ஒரு நேரம் வந்துள்ளது. ஆகவே நாங்கள் அனைவரும் திரண்டு தமிழர்களது பலத்தை இங்கே காட்டவேண்டும்.

ஆகவே அனைத்து தமிழ் மக்களும் இன்று மட்டக்களப்புக்கு திரண்டு வர வேண்டும்.

இந்தச் செயற்பாட்டை நாங்கள் அனுமதிப்போமாக இருந்தால், தமிழர் தாயகத்தில் இருந்து தமிழர்களை திட்டமிட்டு வெளியேற்றுவதற்காக ஒரு சதி முயற்சி இடம்பெற்றுக் கொண்டு இருக்கிறது.

இன்று மயிலத்தமடு, நாளை யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, அம்பாறை, திருகோணமலை என்று விரிவடையும். இதனை நாங்கள் அனுமதிக்க முடியாது. ஆகவே இதனை எதிர்த்து மயிலத்தமடு மக்களுக்கு ஆதரவு தெரிவிக்கும் முகமாக அணி திரள்வோம்-என்றார். (அ)

## கதவடைப்பு...

யாழ் வணிகர்கழக பிரதிநிதிகளுக்கும், தமிழ் தேசிய கட்சிகளின் பிரதிநிதிகளுக்குமிடையில் நேற்று யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலில் இந்த விடயங்கள் பேசப்பட்டன.

தமிழீழ விடுதலை இயக்க தலைவர் தசித்தார்த்தன், இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா, ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன் உள்ளிட்டவர்கள் இந்த சந்திப்பில் கலந்து கொண்டனர்.

தமிழ் மக்களின் உரிமை போராட்டம் சார்ந்த எந்த நடவடிக்கைக்கும் பரிபூரண ஆதரவை வழங்கி வரும் பாரம்பரியத்தையுடைய யாழ்ப்பாண வணிகர் கழகம், இந்த போராட்டத்தையும் முழுமையாக ஆதரிப்பதாக வணிகர் கழகத்தினர் தெரிவித்தனர்.

எனினும் நீதிபதி விவகாரத்துடன், தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினை தீர்வுக்கு, முழுமையான சர்வதேச தலையீட்டையும் கோரி இந்த சுதவடைப்பு போராட்டம் நடத்தப்பட வேண்டுமென்றும் வணிகர் கழகம் வலியுறுத்தியுள்ளது.

போராட்ட அறிவிப்பில் இந்த கோரிக்கையும் இணைக்கப்பட வேண்டுமென அவர்கள் கேட்டுக் கொண்டனர். இந்நிலையில் அவர்களது கோரிக்கைக்கு அரசியல் கட்சிகள் இணக்கம் தெரிவித்தன.

இதேவேளை, நீதிபதி சரவணராஜாவை கொச்சைப்படுத்தும் விதமாக அரசியல் கட்சிகள் கருத்து தெரிவிப்பதை கண்டிப்பாக தவிர்த்துக் கொள்ள வேண்டுமென்றும் வணிகர் கழகத்தினர் வலியுறுத்தினர். (அ)

# நாகபட்டினம் - காங்கேசன் கப்பல் சேவை 10ஆம் திகதி

சென்னை, ஒக். 08

நாகபட்டினம் - காங்கேசன்துறைக்கு இடையிலான பயணிகள் கப்பல் சேவை, எதிர்வரும் 10ஆம் திகதி ஆரம்பமாகிறது என இந்திய செய்திகள் தெரிவித்துள்ளன.

“செரியாபாணி” என்ற பெயரைக் கொண்ட இந்த பயணிகள் கப்பலில் பயணிகளுக்கான அனுமதிச்சீட்டுக் கட்டணம் மற்றும் எவ்வளவு நிறை கொண்ட பொருட்களை எடுத்து செல்லலாம் என்பது குறித்த தகவல்கள் தற்போது வெளியாகியுள்ளன.

நாகை - இலங்கைக்கு இடையே இயக்கப்பட உள்ள பயணிகள் கப்பல் கொச்சினில் தயாரிக்கப்பட்டதாகும்.

செரியாபாணி என்று பெயரிடப்பட்டுள்ள குளிரூட்டி வசதியுடன் கூடிய இந்த பயணிகள் கப்பல் நேற்று நாக பட்டினத்தை அடைந்தது.

செரியாபாணி கப்பல் 8 மற்றும் 9 ஆம் திகதிகளில் சோதனைகளை ஓட்டங்களை நடத்துகிறது. இந்த சோதனை ஓட்டத்தில் கப்பலில் பணியாற்றும் 14 ஊழியர்கள் மட்டுமே பயணம் செய்ய உள்ளனர்.

நாகப்பட்டினத்தில் இருந்து காங்கேசன்துறை துறைமுகம் 60 கடல் மைல் தொலைவில் உள்ளது. இதனால் நாகப்பட்டினத்தில் இருந்து இலங்கை சென்று வர 6 ஆயிரம் லீற்றர் எரி பொருள் தேவைப்படும் என கூறப்படு கிறது.

இந்தநிலையில் நாகை - இலங்கை இடையே பயணிக்க 18 சதவீத ஜி. எஸ். டி. வரியுடன் சேர்த்து 6500 இந்திய ரூபாய் கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

அத்துடன், பயணிகள் தங்களுடன் 40 கிலோ எடையுள்ள பொருட்களை கொண்ட செல்ல அனுமதிக்கப்படுகின்றனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த கப்பல் சேவையின் மூலம் நாகப்பட்டினத்தில் இருந்து வெறும் 3 மணி நேரத்தில் இலங்கையை சென்றடைய முடியும் என குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)

## மார்பக புற்றுநோயால் தினமும் 14 பேர் மரணம்!

கொழும்பு, ஒக். 08

நாட்டில் மார்பக புற்றுநோயால் தினமும் 14 பேர் மரணமாகின்றனர். வருடாந்தம் 700-800 பேர் வரை உயிரிழக்கின்றனர் என்று தேசிய புற்றுநோய் கட்டுப்பாட்டு திட்டத்தின் ஆலோசகர் சமூக மருத்துவர் சுராஜ் பெரேரா தெரிவித்துள்ளார்.

2020ஆம் ஆண்டளவில் இலங்கையில் 5 ஆயிரத்து 189 நோயாளர்கள் இனங்காணப்பட்டனர் என்று தெரிவித்த அவர், புற்றுநோய் பரிசோதனை அவசியம் என்றும் கூறினார்.

அத்துடன், ஒரு நாளைக்கு 14 இறப்புகள் பதிவாகின்றன என்று அவர் கூறினார். எனினும், ஆரம்பகால நோயறிதல் நோயைக் குணப்படுத்த வழிவகுக்கும் என்று அவர் வலியுறுத்தினார். (ஐ)

## சிறையிலுள்ள...

எனவும் தெரிவித்துள்ளார்.

ஈரானின் கொடூரமானது என கருதப்படும் ஈவின் சிறையில் தற்போது 10 வருட சிறைத்தண்டனையை அனுபவித்துவரும் நிலையில் அவருக்கு நோபல் பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது.

அவரை ஈரானிய அரசாங்கம் விரைவில் விடுதலை செய்யும் என எதிர்பார்ப்பதாகவும் நோபல் பரிசு குழுவின் தலைவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில், நோபல் பரிசு குறித்த விபரங்கள் வெளியிடப்பட்டுள்ள போதிலும், உத்தியோகபூர்வமாக எதிர்வரும் டிசெம்பர் மாதம் 10ஆம் திகதியே நோபல் பரிசு வழங்கும் நிகழ்வு சுவீடனின் தலைநகர் ஸ்டொக்ஹோமில் நடைபெறவுள்ளது.

எனினும், இந்த விழாவில் ஈரான், கலந்து கொள்ளப்போவதில்லை என ஏற்கனவே தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதவிர, உக்ரைனில் இடம்பெறும் யுத்தத்துடன் ரஷ்யா மற்றும் பெலாரஸ் ஆகிய நாடுகள், தொடர்பை கொண்டுள்ளதால் அவர்களுக்கு அழைப்பிதழ் வழங்கப்படவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## ஜனாதிபதிக்கு...

சுமண ரத்ன தேரர் தலைமையில் நேற்று மட்டக்களப்பு நகரின் மணிக் கூட்டு கோபுரம் அருகே போராட்டத்தில் ஈடுபட்டனர். இவர்களை சந்திக்க ஜனாதிபதி ரணில் மறுத்த நிலையில், அவருக்கு எதிராகவும் தேரர் தலைமையிலான குழுவினர் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மூன்றுநாள் பயணமாக நேற்று மட்டக்களப்புக்கு வருகை தந்தார்.

இந்த நிலையில், சித்தாண்டி மகா வித்தியாலயம் முன்பாக மேய்ச்சல் தரை காணிகளை இழந்த கால்நடை பண்ணையாளர்கள் நேற்று 23ஆவது நாளாகவும் போராட்டத்தில் ஈடுபட்டனர். நேற்றைய தினம் அவர்கள் பிச்சை பாத்திரம் ஏந்தி போராட்டத்தை முன்னெடுத்தனர். தமது நிலத்தை தம்மிடமே தருமாறு அவர்கள் கோரிக்கையை முன் வைத்திருந்தனர்.

இதேநேரம், போராட்ட இடத்துக்கு நேற்று சென்ற சந்திவெளி பொலிஸார் ஏறாவூர் நீதிமன்றம் போராட்டத்துக்கு விதித்த தடை உத்தரவை வழங்க முனைந்தனர். இதைத் தொடர்ந்து அங்கு எதிர்ப்பு நிலை உருவானது. பொலிஸாருக்கு எதிராக போராட்டக் காரர்கள் கோஷம் எழுப்பினர்.

இறுதியில், நீதிமன்றின் கட்டளையை வாசித்த பொலிஸார், கட்டளை பிரதியை அங்கிருந்த சுவரில் ஒட்டினர். ஜனாதிபதியின் வருகையை ஒட்டி போராட்ட இடத்தில் ஏராளமான பொலிஸார் குவிக்கப்பட்டிருந்தனர்.

இதேசமயம், மட்டக்களப்பு நகரில் அம்பிட்டிய சுமணரத்ன தேரர் தலைமையில் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. மேய்ச்சல் தரையை ஆக்கிரமித்த சிங்கள குடியேற்றவாசிகள் இந்தப் போராட்டத்தை முன்னெடுத்தனர். தங்களை வெளியேற்றக்கூடாது என்று கோரி இந்தப் போராட்டத்தை அவர்கள் முன்னெடுத்தனர்.

இதேநேரம், புனித மைக்கல் கல்லூரியின் 150ஆவது ஆண்டு விழாவில் பங்கேற்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வருகை தந்திருந்தார். அவரை சந்திப்பதற்கு அனுமதிக்குமாறு தேரர் தலைமையிலான ஆர்ப்பாட்டக்காரர்கள் கோரிக்கை விடுத்தனர். இதற்கு மறுப்புத் தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து அவர்கள் ஜனாதிபதிக்கு எதிர்ப்பு தெரிவித்து கோஷங்களை எழுப்பினர்.

இதன்போது, சுமணரத்ன தேரர் பொலிஸாரை அச்சுறுத்தும் விதமாக செயல்பட்டார். அவர் தலைமையிலான போராட்டக்காரர்கள் தும்புத்தடிகள், விளக்குமாறு என்பவற்றை கைகளில் ஏந்திப் போராடினர். இவர்களின் செயல்பாடுகளால் அந்தப் பகுதியில் பதற்ற நிலை காணப்பட்டது. முற்பகல் 11 மணிக்கு தொடங்கிய போராட்டம் மாலை 5.30 மணி வரை நீடித்தது. ஜனாதிபதி பாடசாலை விழா நிறைவடைய அங்கிருந்து வெளியேறியமையை தொடர்ந்து ஆர்ப்பாட்டக்காரர்களும் கலைந்து சென்றனர். (ஐ)

ஈழநாடு
Eelanadu

# மேலும் சில எம்.பிக்களின் பதவிகள் பறிபோகலாம்!

## நசீர் அஹமட்டுக்கு வழங்கிய தீர்ப்பினால்

கொழும்பு, ஒக். 08

**முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரும் சுற்றாடல்துறை அமைச்சருமான நசீர் அஹமட், தன்னை கட்சியில் இருந்து நீக்கியமை சட்டவிரோதமானது என உத்தரவிடக் கோரி உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனு நிராகரிக்கப்பட்டுள்ளதை அடுத்து, அவர் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இழக்க நேரிடும் என தெரியவருகிறது.**

ஏற்கனவே சில கட்சிகளில் இருந்து நீக்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் தாக்கல் செய்துள்ள மனுக்கள் விசாரிக்கப்பட்டு வருவதுடன் அவர்களுக்கும் இந்த நிலைமையேற்படலாம் என அரசியல் வட்டாரத்தில் பேசப்பட்டு வருகிறது.

உயர் நீதிமன்ற நீதியரசர் பிரீதி பத்மன் சூரசேன உட்பட மூன்று நீதியரசர்கள், அமைச்சர் நசீர் அஹமட் தொடர்பான வழக்கின் தீர்ப்பை வழங்கினர்.

இந்த தீர்ப்பு சபாநாயகருக்கு கிடைத்த பின்னர், எதிர்வரும் 17 ஆம் திகதி பாராளுமன்றம் கூடும் போது, சபாநாயகர் அதனை சபைக்கு அறிவிக்க உள்ளார்.

இதன் பின்னர்,பாராளுமன்ற உறுப்பினர் பதவிக்கு வெற்றிடம் ஏற்பட்டுள்ளது என்பதை பாராளுமன்றச் செயலாளர், தேர்தல் ஆணைக்குழுவுக்கு அறிவிக்க உள்ளார்.

இதனையடுத்து நசீர் அஹமட்டுக்கு பதிலாக கடந்த பொதுத் தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் முஸ்லிம் காங்கிரஸ் சாரபில் போட்டியிட்டு விருப்பு வாக்குகளின் அடிப்படையில் அடுத்த இடத்தில் உள்ள வேட்பாளர் பாராளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட உள்ளார்.

முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் கடந்த பொதுத் தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிட்ட அலிசாஹிர் மௌலானா பாராளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்படலாம் எனக் கூறப்படுகிறது.

கடந்த 2021 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் அன்றைய அரசாங்கத்தின் வரவு செலவுத்திட்டத்திற்கு ஆதரவளித்து, அந்த அரசாங்கத்தில் இணைந்து கொண்டதன் காரணமாக நசீர் அஹமட் முஸ்லிம் காங்கிரஸில் இருந்து நீக்கப்பட்டார்.

இந்த நிலையில், உயர் நீதிமன்றம் நேற்றுமுன்தினம் வழங்கிய தீர்ப்புக்கு பின்னர், எப்படி செயற்பட வேண்டும் என்பது அரசியலமைப்புச் சட்டத்தின், 99,13(அ) மற்றும் (ஆ) ஆகிய ஷரத்துக்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர் 32 வருடங்களுக்கு முன்னர் கடந்த 1991 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 3 ஆம் திகதி உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புக்கு அமைய லலித் அத்துலத் முதலி, காமினி திஸாநாயக்க, ஜீ. எம்.பிரேமச்சந்திர, கே.வின்சன்ட் பெரேரா, பிரேமரத்ன குணசேகர, லக்ஷ்மன் செனவிரத்ன, வீரவன்னி சமரவீர, சந்திரா கங்கானந்த ஆகிய 8 பாராளுமன்ற உறுப்பினர்கள் தமது பதவிகளை இழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# வீட்டில் தனித்து வசித்த மூதாட்டி சடலமாக மீட்பு

## மரணத்தில் சந்தேகம்

யாழ்ப்பாணம், ஒக். 08

வடமராட்சி அல்வாய் பகுதியில் உள்ள வீடொன்றில் தனித்து வாழ்ந்து வந்த மூதாட்டியொருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

அவரது மரணத்தில் சந்தேகம் தெரிவிக்கப்பட்டதையடுத்து, அவரது உடல் மாதிரிகள் இரசாயன பகுப்பாய்வுக்காக கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

நெல்லியடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அல்வாய் கிழக்கு பகுதியில் வசித்து வந்த பழனிப்பிள்ளை தில்லைராணி (வயது-89) என்பவரே சடலமாக மீட்கப்பட்டார்.

மூதாட்டி திருமணம் செய்யாமல் தனித்து வாழ்கிறார். அவரது சகோதரியின் மகன் ஒருவர் கனடாவில் வசிக்கிறார். அவரே மூதாட்டியின் பராமரிப்புச் செலவை கவனித்து வருகிறார்.

மூதாட்டி தனித்து வாழ்ந்து வந்த வீடு அமைந்துள்ள வளவுக்குள் மற்றொரு வீடும் அமைந்துள்ளது. அங்கு இளம் குடும்பமொன்று வசித்து வருகிறது. சுதந்திரக் கட்சியின் சார்பில் மாகாணசபை உறுப்பினராக அங்கம் வகித்த வர்த்தகர் ஒருவரின் மகள், இரண்டாவது திருமணம் செய்து, அந்த வீட்டில் வசிக்கிறார்.

கனடாவில் உள்ள அந்த மூதாட்டியின் மகன், அந்த குடும்பத்திற்கு பணம் அனுப்பி பராமரித்து வந்துள்ளார். மூதாட்டியை பராமரிக்க பெண்ணொருவர் பணிக்கமர்த்தப்பட்டிருந்தார்.

இந்த நிலையில் கடந்த 4ஆம் திகதி மூதாட்டிக்கு உணவு கொண்டு சென்றபோது, மூதாட்டி அசைவற்றிருந்ததாக அந்த வளவில் தங்கியிருந்த குடும்பத்தினர் தகவலளித்துள்ளனர். பொலிஸார் தகவலளித்ததை தொடர்ந்து, சம்பவ இடத்துக்குச் சென்ற அவசர நோயாளர் காவு வண்டியினர், மூதாட்டி உயிரிழந்ததை உறுதி செய்திருந்தனர்.

இதை தொடர்ந்து கிராமசேவகர் ஊடாக சடலத்தை வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

பிரேத பரிசோதனையில் மரணத்தில் சந்தேகம் இருப்பதாக தெரிவிக்கப்பட்டதையடுத்து, உடல் மாதிரிகள் மேலதிக பரிசோதனைக்காக கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (அ-2)

# இலங்கையில் புதிதாக வடிவமைக்கப்பட்ட யானைவேலி முல்லைத்தீவில் அறிமுகம்

முல்லைத்தீவு, ஒக். 08

இலங்கையில் முதல் முதலாக ஐ வடிவிலான யானை பாதுகாப்பு வேலி முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு மன்னாகண்டல் பகுதியில் பாடசாலை ஒன்றுக்கு அமைத்து கொடுக்கப்பட்டுள்ளது.

வவுனியா பல்கலைக்கழகத்தின் உயிர்த்துறை திணைக்களத்தின் தலைவரும் விரிவுரையாளருமான கலாநிதி விஜயமோகன் எண்ணத்தில் வடிவமைக்கப்பட்ட யானை பாதுகாப்பு வேலி (தொங்குவேலி) இலங்கையில் முதல் முறையாக முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு மன்னாகண்டல் அ.த.க.பாடசாலையினை யானையில் இருந்து பாதுகாப்பதற்காக அமைத்து கொடுக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வு நேற்று முன் தினம் நடைபெற்றுள்ளது. வவுனியா பல்கலைக்கழகத்தின் ஏற்பாட்டில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியில் 10 இலட்சம் ரூபா செலவில் இந்த யானை பாதுகாப்பு வேலி அமைக்கப்பட்டுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக வவுனியா பல்கலைக்கழகத்தின் போராசிரியர் காமினி செனநாயக்க மற்றும் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் அ.உமாமகேஸ்வரன், வவுனியா பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் மங்களேஸ்வரன் , புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் எஸ்.ஜெயகாந்தன் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்ததுடன் பாடசாலை வளாகத்தினை சூழ அமைக்கப்பட்ட யானை வேலியினை வைபவ ரீதியாக திறந்து வைத்தனர். (அ)



# வெள்ளத்தில் மூழ்கும் மாத்தறை



கொழும்பு, ஒக். 08

மாத்தறையில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக நிவாரணக் குழுக்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

மாத்தறை, அகரஸ்ஸ, மாபலகம போன்ற பிரதேசங்களில் தற்போது வெள்ள நிலைமை ஏற்பட்டுள்ளதாக மாவட்ட செயலகம் தெரிவித்துள்ளது.

ஜின் கங்கை நிரம்பி வழிவதால் மாபலகம நகரம் நேற்று நீரில் மூழ்கியதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காலி அல்பிட்டிய இகல பிரதேசத்தில் வீடொன்றின் மீது மண்மேடு சரிந்து வீழ்ந்ததில் வீடு முற்றாக சேதமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இராணுவம், பொலிஸ் மற்றும் நிவாரணக் குழுக்கள் அங்கு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

மாத்தறையில் ஏற்பட்டுள்ள வெள்ளத்தையடுத்து, அங்கு மேலும் 2 நாட்களுக்கு பாடசாலைகளுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது. 9ஆம்,10ஆம் திகதிகளிலும் பாடசாலைகளுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# மின்கம்பி அறுந்து விழுந்து பெண் ஒருவர் படுகாயம்!

யாழ்ப்பாணம், ஒக். 08

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சங்கரத்தை பத்திரகாளி அம்மன் ஆலயத்திற்கு அண்மையில் உள்ள மின்சார கம்பி அறுந்து விழுந்து, மின்சாரம் தாக்கியதில் பெண்ணொருவர் படுகாயமடைந்துள்ளார்.

குறித்த பகுதியில் வீதி அகலிப்புப் பணிகள் தற்போது இடம்பெற்று வருகின்றன. இந்நிலையில் வீதியோரத்தில் நின்ற பனைமரம் ஒன்று வெட்டப்பட்டது. இவ்வாறு வெட்டப்பட்ட பனைமரம் மின்சாரக் கம்பி மீது விழுந்தது.

பனை விழுந்ததால் மின்சார கம்பி அறுந்து வீதியில் நின்ற பெண்ணொருவரின் மோட்டார் சைக்கிள் மீது முட்டியது. இந்நிலையில் மோட்டார் சைக்கிளில் இருந்த பெண் தூக்கி வீசப்பட்டார்.

அவர் அவசர நோயாளர் காவு வண்டி மூலம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டு அங்கு சிகிச்சை பெற்று வருகின்றார்.

இந்த சம்பவத்தில் ஐந்து மின் கம்பங்கள் முறிந்து சேதமாகின. இதனால் அப்பகுதிக்கு நேற்று முன் தினம் பிற்பகல் வேளையில் இருந்து மின்சாரம் தடைப்பட்டது. மின்சார இணைப்பினை சீர் செய்யும் நடவடிக்கையில் இலங்கை மின்சார சபையினர் ஈடுபட்டனர். (அ)

# காலி மாவட்டத்தில் அதிக மழை வீழ்ச்சி

கொழும்பு,ஒக். 08

நேற்று சனிக்கிழமை காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணித்தியாலத்தில் காலி மாவட்டத்தில் அதிக மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது.

காலி மாட்டத்தில் கினிதும என்ற பகுதியில் 181.5 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 08.10.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# பொருத்தம்!

**எஸ்.ஜெகதீசன்**

அவளை முதன்முதலாக பார்ப்பவர்கள் அக்கா என்று அழைப்பதா? அல்லது அன்ரி என்று அழைப்பதா என ஒரு கணம் தடுமாறுவார்களோ என்ற ஓர் ஐயப்பாடு அவ்வப்போது என்னுள் விசுவரூபமெடுக்கும். செண்பகவல்லி என்ற அவளது பெயர் மட்டும் அதன் காரணம் அல்ல என்பதுவும் எனக்குத் தெரியும்..

சாய்மானைக் கதிரையில் சாய்ந்திருந்தவரின் நினைவு அவரது மகளை விட்டுச் சாய்வதாக இல்லை.

தோல் சுருக்கமான பலர் தோள் நெருக்கமாகவே வாழ வழி காட்டுவது ஜாதகம் அல்லவா? உவள் ஏன் உதை உணர்கிறாள் இல்லை? தள்ளாடிய தேகம்.தள்ளாடாத நோக்கம். விட்டு விடாமலும் வாழ்கின்றார்கள். விட்டுக் கொடுக்காமலும் வாழ்கின்றார்கள்.

தேநீருடன் வந்த மகள் மீதான அவரது சிராய்ப்பில்லாத சிரிப்பு ஏதோ சொல்லத் துடிப்பதை காயப்படுத்தாமல் உணர்த்தியது.

“மகிழ்ச்சியின் ரகசியம் சாதகத்தை விரும்புவது என்பது உனக்குத் தெரியாதா மகளே?”

“வெற்றியின் ரகசியம் சாதிப்பதை விரும்புவது என்பது உங்களுக்குத் தெரியும் தானே அப்பா!”

“நாங்கள் தகமையை நாடுகின்றோம் நீங்கள் தலைமையை தேடுகின்றீர்கள். அப்படித்தானே மகள்?”

அகத்தை அகலப்படுத்துங்கள் அப்பா! பயம் வந்து உங்களைப் பிடிப்பதில்லை. நீங்கள்தான் அதைப் போக விடாமல் பிடிதது வைத்துக் கொண்டு தவிக்கின்றீர்கள்.அடுப்போடு வாழ்ந்தது உங்க காலம். நெருப்போடு எழுவது எங்க காலம். மனசு குடுக்காத நம்பிக்கையை வேறு எது குடுக்கப் போவுது? எனது உலகம் என்னிடமிருந்தே தொடங்குகின்றது.

- தனது மனதோடு தானே பேசிக் கொண்டாள் செண்பகவல்லி.


மவளே! உன் மனக்குரல் என்னுள் சத்தமாக எக்காளமிடுவது உனக்கெங்கே கேட்கப் போவுது! இளிச்சவாயன் இருக்கிற ஊரில இஞ்சி இனிக்கும் என்பதை நீ உணரும் வேளை உன் வாழ்வில் வராமலா இருக்கப் போவுது?

சாதகம்...சாதகம்...என்கின்றீர்களே அப்பா! நீங்கள் கடைப்பிடிக்கும் சாதகம் வேறு.நாம் கைக்கொள்ளும் சாதகம் வேறு! உங்களுக்கு பத்தும் பொருந்தினால் அது உத்தமம். எங்களுக்கோ அந்தப் பத்தும் பொருந்தினாலும் அது மத்திமம். சரிதானே அப்பா?

சரியா என்றால் முடிவைக் கேட்பது. சரிதானே என்றால் முடிவு செய்து விட்டுக் கேட்பது.நீ முடிவெடுத்து விட்டுக் கேட்கிறாய்.... உங்களது பொருத்தங்கள் எவை?அதனை ஒருக்கா செவ்வையாகச் சொல்லு பார்ப்பம்?

நாங்கள் எதிர்பார்க்கின்ற பொருத்தத்திலை உயர்ந்த படிப்பு இருக்கும். நிறைந்த சம்பளம் இருக்கும். ஆரோக்கியமான உடம்பு இருக்கும். ஆறடி உயரம் இருக்கும். அதி நவீன போன் இருக்கும். படவரி இருக்கும். சொகுசு மிக்க கார் இருக்கும். இரண்டு வீடுகள் இருக்கும். விடுமுறை காலத்துகந்த ஒரு படகு இருக்கும். உல்லாசப் பயணங்களில் நாட்டம் இருக்கும். இன்னும் இன்னும் இருக்கும்!

“அதனால்தான் உங்களது பெயரை கேட்டால் கூட தமது நினைவில் சற்றுத் தாமதமாக வர வேண்டும் என்ற அளவுக்கு உங்களை மறக்க வேண்டும் என்கின்ற பெற்றோரையும் நான் அறிவேன்.”என்றேன்.



முகநூல், ஊடலை, புலனம், கீச்சகம், அளாவி, பகிரலை, ஆலலை, திறன் பேசி, செறிவட்டை, மின்னூாக்கி என எதுவுமே இல்லாமல் எப்படி அப்பா உங்களால் வாழ முடிகின்றது?

சோதிட நம்பிக்கை, பாரம்பரியத்தில் அக்கறை, பெற்றோர் சொற் கேட்டல், பெரியோரிடம் மரியாதை, குன்றாத குணம், ஈர்ப்பு, கீழ்ப்படிவு, கட்டுக்கோப்பு, தெய்வ பக்தி இவை அனைத்தும் இல்லாமல் இப்போது நீங்கள் எப்படி வாழப் பழகி விட்டீர்களோ அப்படித்தான்...

“எங்களுக்குச் சாதகமானது உங்களுககுப் பாதகமாகத் தெரியும். உங்களுக்குச் சாதகமானது எங்களுக்குப் பாதகமாகத் தெரியும்.” என்றாள் மகள.

மவளே! நாங்கள் பார்ப்பது மாங்கல்யப் பொருத்தம். நீங்கள் விரும்புவதோ மனப் பொருத்தம்.

அப்படிச் சொல்லுங்கள் என்ரை செல்ல அப்பு! ஒருவரிடம் நவீன வசதிகள் கூடிய ‘ஐபோன்15’ இருக்குமெனின் அவர் யோகமுள்ளவர். உன்னத பொருத்தமுள்ள அவருடன் நான் இருப்பேன். இதுவரை ‘ஐபோன்15’ என்ன என்றே தெரியாதவர் எம்முடன் வாழத்தெரியாதவர்.

அடி ஆத்தீ! 1.நட்சத்திரப் பொருத்தம் 2.கணப் பொருத்தம் 3.மகேந்திரப் பொருத்தம் 4. ஸ்திரீகப் பொருத்தம் 5. யோனிப் பொருத்தம் 6.ராசிப் பொருத்தம் 7. ராசி அதிபதி பொருத்தம் 8. வசியப் பொருத்தம் 9.தாலி (இரச்சு)ப் பொருத்தம் 10. வேதைப் பொருத்தம் என்ற இந்தப் பத்தும் பிரதானம்.

உவை எல்லாம் எமக்கு புராதனம் அப்பா! எங்களுக்கு படவரி இருந்தால் உத்தமம். தூர உணரி, ஒளி உணரி, அசைவுணர்மாணி, அதிவேக இணைய வசதி உள்ள திறன் பேசி, என்பன இல்லை எனின் மத்திமம். ஊடலை அற்றவர் எம் முன் ஊடாடதுவது கூட அதமம்.

மகளே! வடிவாகக் கேள்! நட்சத்திரப் பொருத்தம், கணப் பொருத்தம், யோனிப் பொருத்தம் இராசிப் பொருத்தம் இதாலி (இரச்சு)ப் பொருத்தம் என்ற அடிப்படை ஐந்தும் வாழ்க்கைக்கு அத்தியாவசியம்.

அப்பா! செவ்வாய் தோஷம் உள்ளவர்களுக்கு உங்கள் ஜாதகத்தில் பரிகாரம் உண்டு. ஆனால் பல்வேறு சிறப்பு வசதிகள் இருந்தாலும் நவீன வசதிகள் சற்றே குறைந்த ‘ஐபோன்14’ வைத்திருப்பவருக்குக் கூட எங்கள் ஜாதகத்தில் பரிகாரமே கிடையாது.

போடி பைத்தியம். செவ்வாய் தோஷம் மட்டுமல்ல மாங்கல்ய தோஷம் அல்லது மூல நட்சத்திரம், ஆயில்ய நட்சத்திரம் என்றால் கூட அந்தப் பேச்சே எடுக்க மாட்டம். பிறக்கும் போது லக்கினத்திலிருந்து 2 4 7 8 12 ஆகிய இடங்களில் எதிலாவது செவ்வாய் கிரகம் உள்ளவர் தோஷமுள்ளவர் என்பது விதி.

பின்னர் 40 வயதிற்கு மேற்பட்ட ஆண்களுக்கும் 35 வயதிற்கு மேற்பட்ட பெண்களுக்கும் சாதகம் பார்க்கத் தேவையில்லை என்ற விதி விலக்கையும் சொல்லிக் கொள்வதும் நீங்கள்தானே அப்பு!

அப்பா அப்பா இதைக் கொஞ்சம் பாருங்கப்பா! இலையுதிர் கால மரம் அழகாக காட்சி அளிக்கிறது என்றால் வசந்த காலத்தில் அதே மரம் பேரழகாக காட்சியளித்திருக்கும். பத்திரிகை ஒன்றைக் காட்டினாள். எனது கவனத்தை திசை திருப்புகின்றாளாம்.

உனக்கென்ன பெரிய பேரழகி என்ற உள்ளூர நினைப்பா? அல்லது ஆகக் குறைந்தது நூாறு பேராவது வரிசையாக சுயம் வரத்தில் உனக்காகக் காத்து நிற்கின்றார்கள் என கற்பனையாக ஒரு மிதப்பா? உன்னை மணம் முடிக்க விரும்பிய எத்தனையோ பேரை அற்ப காரணங்களுக்காக நிராகரித்து விட்டு பின் அவர்களது திருமணத்திற்குச் சென்று பரிசளித்துவிட்டுத் திரும்புவாயே! அந்த எண்ணிக்கையாவது உனக்கு தெரியுமா?அல்லது ஒவ்வொரு தடவையும் சுட்டு விரலால் ஒரு துளி கண்ணீரையாவது அப்பொழுது நான் சுண்டிவிடுவதையாவது நீ அறிவாயா?

கேட்க நினைத்தேன். கேட்கவில்லை.

மவளே...உன்னை ஒன்று கேட்பேன் செய்வாயா?

ஜாதகம் பார்த்து கல்யாணம் செய் என்று நிர்ப்பந்திக்காவிடின் எதையும் செய்வேன் அப்பா!

நீ கல்யாணம் கட்டிய பின்பு கடைசி வரை உன்ரை கணவனோடு இருப்பாய் தானே?

**திரைப்படம் - 800**
**இயக்கம் - எம். எஸ். சிறீபதி**
**இசை - ஜிப்ரான்**
**நடிப்பு - மதுர் மிட்டல், மகிமா நம்பியார், நாசர்**

சர்வதேச டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றின் 800 விக்கெட்களை வீழ்த்திய தமிழரான இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர் முத்தையா முரளிதரனின் இளமை காலம், கிரிக்கெட் வாழ்க்கையின் ஏற்றத்தாழ்வுகள், நாட்டின் அரசியல் சூழல் போன்றவற்றைப் பேச முயன்றிருக்கிறது '800'.

காலியில் உள்ள மைதானத்தில் 2010 ஜூலையில் இந்தியா - இலங்கைக்கு எதிரான பரபரப்பான டெஸ்ட் போட்டி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. டெஸ்ட் போட்டிகளில் அதுவரை 792 விக்கெட்களை எடுத்துள்ள முன்னணி சுழல்பந்து வீச்சாளரான முத்தையா முரளிதரன் (மதுர் மிட்டல்) 800 விக்கெட்கள் என்ற இமாலய சாதனையை தொட இன்னும் 8 விக்கெட்கள்தான் உள்ளன.

முரளிதரன் இந்த சாதனையை நிகழ்த்த வேண்டும் என இலங்கை கிரிக்கெட் ரசிகரகள் ஆக்ரோஷமாகவும் ஆர்வமாகவும் பார்த்துக் கொண்டிருக்கிறார். மறுபுறம், தீவிர கிரிக்கெட் ரசிகரும், முத்தையா முரளிதரனுடைய விளையாட்டின் மீது அன்பு கொண்டவருமான 'வீரகேசரி' நாளிதழின் ஆசிரியர் முகுந்தன் சதாசிவம் (நாசர்), முத்தையா முரளிதரனின் இளமை காலம் தொடங்கி 800 விக்கெட் எடுக்கும் நாள் வரையிலான வாழ்க்கை கதையைத் தன் சக தொழிலாளி விநோத்திடம் (ஹரிகிருஷ்ணன்) விவரிப்பதாக முத்தையா முரளிதரனின் வாழ்க்கைக்குள் நுழைகிறது படம்.

முத்தையா முரளிதரனாக வரும் மதுர் மிட்டலின் தோற்ற ஒற்றுமையிலேயே கவர்கிறார். ஒரு விளையாட்டு வீரருக்கான உடல்மொழியைக் கொண்டு வந்ததோடு, முத்தையா முரளிதரனின் வாழ்க்கையில் நிகழும் நிராகரிப்புகள், அவமானங்கள், வெற்றி - தோல்விகளை தன் பக்குவமான நடிப்பால் உயிரூட்டி நம் கண்முன் கொண்டு வருகிறார். முரளிதரனின் அப்பா முத்தையா கதாபாத்திரத்தை ஏற்றிருக்கும் வேல ராமமூர்த்திக்கு பெரிய வேலை இல்லை.
வடிவுக்கரசியும் நாசரும் தங்களது அனுபவ நடிப்பில் குறையில்லை.

முரளிதரனின் சகோதரராக வரும் திலீபன், அம்மாவாக ஜானகி சுரேஷ், கோச்சாக லோகிதஷ்வா, 'மாஸ்டராக' நரேன், ஹரி கிருஷ்ணன் ஆகியோர் சில காட்சிகளே வந்தாலும் குறையில்லாத நடிப்பை தந்திருக்கிறார்கள். மகிமா நம்பியார், அருள்தாஸ், ரித்விகா, யோக் ஜேபி என பலர் தலையை மட்டும் காட்டி செல்கிறார்கள். இலங்கை அணியின் முன்னாள் தலைவர் அர்ஜுன ரணதுங்கவாக வரும் கிங் ரத்னம், ரணதுங்கவுக்கே உரித்தான "கெத்து" தோற்றத்திலும் உடல் மொழியிலும் ரசிக்க வைத்ததோடு, கச்சிதமான நடிப்பையும் வழங்கியிருக்கிறார்.

இலங்கை அணியின் முன்னாள் வீரர்களான அரவிந்த டி செல்வா, ருமேஷ் களுசவிதாரண, அனுசிரி, அவுஸ்திரேலிய அணியின் முன்னாள் வீரர்கள் ஷேன் வோர்ண், ஜேசன் கில்லெப்ஸி மற்றும் கபில் தேவ் போன்ற கிரிக்கெட் வீரர்களுக்கான நடிகர்கள் தேர்வும், அவர்களிடம் வாங்கப்பட்ட 'அளவான' நடிப்பும் கச்சிதம்.


ஆர்.டி.ராஜசேகரின் ஒளிப்பதிவும், பிரவீன் கே.எல்-இன் படத்தொகுப்பும் கைகோர்த்து, ஆவணத்தன்மையால் தவிக்கும் படத்துக்கு ரசிக்கும்படியான திரையாக்கத்தைத் தந்திருக்கின்றன.




ஜிப்ரானின் பின்னணி இசை படத்துக்கு ஆன்மாவாக இருக்கிறது. முக்கியமாக, இரண்டாம் பாதியில் முரளிதரன் கதாபாத்திரதுக்கு முதுகெலும்பாக இருக்கிறது. அக்காலத்து வட, கிழக்கு மற்றும் தென்னிலங்கையின் கட்டடங்கள், பேருந்துகள், சுவரொட்டிகள், பலகைகள், இலங்கைக்கே உரித்தான கொண்டாட்டங்கள் நிறைந்த கிரிக்கெட் மைதானங்கள் என படம் முழுவதுமே தயாரிப்பு வடிவமைப்பாளர் விதேஷின் உழைப்பு பலன் அளித்துள்ளது.

அண்மையில் புக்கர் பரிசு பெற்ற எழுத்தாளர் செகான் கருணாதிலக மற்றும் இயக்குநர் எம்.எஸ்.சிறீபதி கூட்டணியின் கோர்வையில்லாத தொங்கு திரைக்கதையால் தள்ளாடுகிறது.

கிரிக்கெட்டின் தோற்றம், அதன்




பரிணாமம், பிரிட்டிஷார் வழியாக உலகம் முழுவதும் பரவுதல் போன்றவற்றை அனிமேஷ் காட்சித்தொகுப்பாக பேசி, இலகுவாக கதைக்குள் கூட்டிச் செல்கிறது படம். அதற்கு பின், கிரிக்கெட் மீதான முரளிதரனின் ஆசை, கிரிக்கெட்டையே தன் வாழ்க்கையாக தேர்ந்தெடுப்பது என ஒரு புறமும் இலங்கையில் நடக்கும் இனவெறி, அதைத் தொடர்ந்து நடக்கும் கலவரங்கள் மற்றும் குண்டு வெடிப்புகளால் முரளிதரனின் தனிப்பட்ட வாழ்க்கையும் கிரிக்கெட் வாழ்க்கையும் பாதிக்கப்படுவது என்று மறுபுறம் பேச தொடங்குகிறது.
ஆனால், இந்த இனவெறியை பரப்புவது யார்? அப்படி பரப்புவதால் அவர்களுக்கு கிடைக்கும் நன்மை என்ன? இந்த இனவெறி அரசியலை இலங்கை அரசு எப்படி அணுகுகிறது? தமிழர்கள் அந்த வெறுப்பையும் தாக்குதல்களையும் எப்படி எதிர்கொண்டு பதிலடி கொடுத்தார்கள்? என்று பல கேள்விகளுக்கான பதிலை வலுக்கட்டாயமாக சொல்லாமல் ஓடுகிறது திரைக்கதை.

இலங்கை அணியில் இடம்பிடிக்க முரளிதரனின் போராட்டம், அதற்கு பின் அணிக்குள்ளே உள்ள அரசியல், முரளிதரனின் உதவியுடன் இங்கிலாந்து மண்ணில் இலங்கை பெற்ற முதல் டெஸ்ட் வெற்றி, அர்ஜுன ரணதுங்க - முரளிதரனின் நட்பு என முதற்பாதியில் உள்ள பல தொகுப்புகள் நடிகர்களின் நடிப்பால் கொஞ்சம் ரசிக்க வைக்கின்றன.

இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடர், அவுஸ்திரேலிய மண்ணில் டெஸ்ட் தொடர், 1996 உலகக் கிண் ணம் என முக்கிய நிகழ்வுகள் குறித்த தலைப்பை திரையில் ஸ்லைடாக ஓடவிட்டு, அந்நிகழ்வுகளை வரிசையாக தொகுத்துள்ளார் இயக்குநர். இந்த தொகுப்புகள் நமக்கு தெரிந்த தகவல்களை கொஞ்சம் புனைவு கலந்த காட்சிகளாக பார்க்கும் உணர்வை மட்டுமே தருகிறது. கிரிக்கெட் ரசிகர்கள் அல்லாதவர்களையும் இணைக்குமா என்பது கேள்வியே.

முரளிதரன் மீது அவுஸ்திரேலிய நடுவர்கள் நிகழ்த்திய அநீதி, ஷேன் வோர்ன் - முரளிதரன் உரசல், முரளிதரன் பந்தை எறிவதாக எழுந்த குற்றச்சாட்டுகள், அதற்கு எதிராக முரளிதரன் போராடுவது என இரண்டாம் பாதி ஒரு தனிப்படமாகவே மாறுகி றது.

அரசியல் நீக்கப்பட்ட ஒரு முத்தையா முரளிதரனை கொண்டுவர முயன்றிருக்கிறது திரைக்கதை. மொத்த படத்திலும் எங்குமே இலங்கை இராணுவத்தின் ஈழத்தமிழர் மீதான அட்டூழியங்கள், இலங்கை அரசின் நிலைப்பாடுகள், ஈழத்தமிழரின் சமூகநிலை, சர்வதேச நாடுகளின் கண்டனங்கள் என எதுவுமே காட்சியாக்கப்படவில்லை. நாட்டில் நிலவும் அரசின் இன வெறுப்பு அடக்குமுறைகள் முரளிதரனையும் அவர் சார்ந்திருக்கும் இனத்தையும் எங்கனம் பாதிக்கிறது என எதையுமே, அதற்கு முரளிதரனின் நிலைப்பாட்டையும் பேசாமல், முரளிதரனை 'தமிழர்... தமிழர்.. தமிழர்..' என முன்வைத்திருக்கிறது படம்.

மலையகத் தமிழராக அடையாளப்படுத்தப்படும் முரளிதரன், மலையகத் தமிழர்களின் அரசியலையாவது பேசுகிறாரா அல்லது அவர்களின் வாழ்வியலையாவது பிரதிபலிக்கிறாரா என்றால் அதுவும் இல்லை.

அதேநேரம், பதில் தாக்குதலில் ஈடுபடும் தரப்பை கேள்விக்கு உள்ளாக்க தவறவில்லை.

விடுதலைப் புலிகள் அமைப்பை சேர்ந்த 'மாஸ்டர்' என்ற ஒரு முக்கிய நபரோடு, போராட்ட சூழலை முரளிதரன் விவாதிக்கும் காட்சிகள், முரளிதரனின் அரசியல் அறியாமையையே சுட்டிக்காட்டுகிறது. "நான் தமிழனோ சிங்களவனோ இல்லை. கிரிக்கெட்டர்", "சிங்களவர்கள் விமர்சிச்சா அவுங்க தப்பா நினைப்பாங்க. தமிழ் ஆளுகள விமர்சிச்சா இவுங்க தப்பா நினைப்பாங்க. அதான் நான் ஒதுங்கிப்போறேன்" போன்ற வசனங்களால் முரளிதரனை அரசியல் ரீதியாக நியாயப்படுத்த முயன்றிருக்கிறது படம். ஆனால், முரளிதரனை வெறும் 'கிரிக்கெட்டராக' மட்டுமே இலங்கை ரசிகர்களோ, இல்லை கிரிக்கெட் ரசிகர்களோ பார்க்கவில்லை என்பது உலக றிந்தது. மேலும், 'ஒரு மலையக தமிழன் - உலக சாதனை நாயகன்' என்றே படத்தின் தொடக்கத்தில் இருந்து கட்டமைக்கப்படும்போது, திடீரென்று அவர் எப்படி அரசியலற்று போவார் என்பது இயக்குநருக்கே வெளிச்சம்.

அரசியல் ரீதியாகதான் சறுக்குகிறது என்றால் இறுதிக்காட்சியில் இருக்கும் அபத்தம் மொத்தமாகவே முரளிதரன் என்ற "வெறும் கிரிக்கெட்டர்" பிம்பத்தைப் போட்டு உடைக்கிறது. "800 விக்கெட்டுக்கு இன்னும் ஒரு விக்கெட்தான் என இருக்கும்போது இஷாந்த் சர்மாகிட்ட போய் "நீ அவுட் ஆகிடேன்"னு முரளிதரன் உதவி கேட்க வைக்கலாமா?

படம் ஆவணத்தன்மையாக மட்டுமல்ல புனைவாக்கமாகவும் தேர்ச்சி பெறவில்லை.



## சீதையாக சாய் பல்லவி

'பிரேமம்' படம் மூலம் அறிமுகமானவர் சாய் பல்லவி. இன்று முன்னணி நடிகையான இவர், ஹிந்தியில் தயாரா கும் இராமாயணம் படத்தில் நடிக்க வுள்ளார்.

இந்தப் படத்தை தெலுங்கு நடிகர் அல்லு அர்ஜுனின் தந்தையும், தயாரிப்பாளருமான அல்லு அரவிந்த் தயாரிக்கிறார். இதை நிதேஷ் திவாரி இயக்குகிறார். இதில் இராமராக ரன்பீர் கபூர் நடிக்கவுள்ளார்.

இதில், சீதையாக சாய் பல்லவி நடிக்க போகிறாராம். அதேபோன்று இராவணன் வேடத்தில் கேஜிஎப் புகழ் யஷ் நடிக்க உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. இந்த படத்தை மூன்று பாகங்களாக எடுக்க திட்டமிட்டுள்ளனர்.

## அஜித் படத்தில் மாற்றம்



நடிகர் அஜித்குமார் 'விடாமுயற்சி' படத்தில் நடிக்க தொடங்கியுள்ளார். இதனை மகிழ்திருமேனி இயக்குகிறார்.

இதில் கதாநாயகியாக த்ரிஷா நடிக்கின்றார். மற்றொரு கதாநாயகியாக நடிக்க பொலிவூட் நடிகை ஹுமா குரேஷி ஒப்பந்தமானார். ஆனால், அவருக்கு ரெஜினா கசண்டரா ஒப்பந்தம் ஆகியுள்ளார் என்று தகவல் வெளியாகியுள்ளது.

## ஜி. வி. 25



இசையமைப்பாளர் ஆக ஜி.வி. பிரகாஷ் குமார் 100ஆவது படத்தை விரைவில் எட்டயுள்ளார். அதேபோல், நடிகராக 25ஈவது படத்தில் விரைவில் நடிக்கவுள்ளார். இதற்கு "கிங்ஸ்டன்" என தலைப்பு வைத்துள்ளதாக கூறப்படுகிறது.

இந்தப் படத்தை கமல் பிரகாஷ் இயக்குகிறார். இதுவரை இல்லாத அளவுக்கு பெரிய பட்ஜெட்டில் இந்த படம் தயாராகிறதாம். இந்த படம் தான் அவரின் திரையுலக பயணத்தில் அதிக செலவில் உருவாகிறது என்கின்றனர்.

# அழியும் பந்துவீச்சு கலை!

அகமதாபாத்தில் வியாழக்கிழமை நடைபெற்ற உலகக் கோப்பை தொடக்க போட்டியில் இங்கிலாந்தின் 283 ஓட்டங்கள் இலக்கை நியூசிலாந்தின் டெவன் கான்வே, ரச்சின் ரவீந்திரா சாதனை சதக்கூட்டணி அமைத்து விளாசித்தள்ளி 36.2 ஓவர்களில் வெற்றி கண்டனர். ஒரு விதத்தில் இங்கிலாந்தின் பாஸ்பால்ஃமோர்கன் பாடத்தை அவர்களுக்கே நடத்திக் காட்டினர் டெவன் கொன்வேயும் ரவீந்திராவும். இதனால் சாதனைகள் பல உடைந்தன, ஆனால் அத்தோடு பந்துவீச்சு என்ற கலையும் கொஞ்சம் கொஞ்சமாக குழிதோண்டி புதைக்கப்பட்டு வருகின்றன.

இங்கிலாந்தின் மிகப்பெரிய கவலை அந்த அணியின் துடுப்பாட்டம் அல்ல. எப்படியும் ஒரு 400 ஓட்டங்களை அடிக்கும் என்பது போல்தான் துடுப்பெடுத்தாடுகிறது. ஆனால், இங்கிலாந்தின் பந்துவீச்சு கவலையளிக்கக் கூடியது. காரணம் நேற்று அதன் சிறந்த பந்துவீச்சாளர்களான ஆதில் ரஷீத், மார்க் உட் இருவருமே நன்றாக அடி வாங்கினர். இவர்களை சர்வ சாதாரணமாக டெவன் கொன்வேயும், ரவீந்திராவும் ஆடினர் என்பதே.

2015 உலகக்கிண்ணத்தில் அயர்லாந்தின் 260 ஓட்டங்கள் இலக்கை இந்திய அணி 36.5 ஓவர்களில் துரத்திய பிறகு இதுதான் உலகக் கோப்பையில் சிறந்த அதிரடி துரத்தல். அதே போல் ரச்சின் ரவீந்திரா, டெவன் கொன்வே சேர்ந்து எடுத்த 273 ஓட்டங்கள் இணைப்பாட்டம் உலகக் கோப்பையில் 4வது மிகப்பெரிய இணைப்பாட்டமாகும். அதாவது 250 மேல் இலக்கை விரட்டும் போது. அதேபோல் குறைந்த வயதில் நியூசி வீரர் ஒருவர் உலகக் கோப்பையில் எடுத்த சதம் என்ற பெருமையை 23 வயது 321 நாட்களில் ரச்சின் ரவீந்திரா பெற்றுள்ளார். இவருக்கு முன்பாக நேதன் ஆஸ்ட்ல் 1996ஆம் ஆண்டு உலகக் கோப்பையில் இதே அகமதாபாத்தில் இங்கிலாந்துக்கு எதிராகவே 101 ஓட்டங்களை எடுத்தபோது அவர் வயது 24. குறைந்த வயதில் உலகக் கோப்பை சதம் எடுத்த சாதனையை வைத்திருப்பவர் விராட் கோலி.

இங்கிலாந்தை நேற்று நொறுக்கியது நியூசிலாந்து என்றும், இது 2019 உலகக் கோப்பை பைனலில் இங்கிலாந்துக்கு உலகக் கோப்பையை தூக்கிக் கொடுத்த கோபம் என்றும் பல விதங்களில் ஊடகங்கள் செய்திகள் சொல்லப்படுகின்றன. ஆனால் ஒரு விஷயத்தை அனைவரும் மறந்து விட்டனர். 283 ஓட்டங்கள் இலக்கு 36.2 ஓவர்களில் முடியலாமா என்ற கேள்விதான் அது.



அதாவது 2011 உலகக் கோப்பையின் போது முதல் 10 ஓவர், பிறகு எதிரணி தலைவரின் விருப்பில் பவர் ப்ளே 5 ஓவர்களும், துடுப்பாட்ட அணியின் விருப்பில் 5 ஓவர் பவர் ப்ளேயும் உண்டு. மீதி 30 ஓவர்கள் பவர் ப்ளே இல்லாத ஓவர்கள்தான், இதில் களவியூகக் கட்டுப்பாடுகள் இல்லை. இதனால் அணித் தலைவருக்கும் ஒரு பங்கு இருந்தது, அதிரடி வீரர்களுக்கு களவியூகம் எப்படி அமைக்கலாம் யாருக்கு பந்துவீச்சு தரலாம் என்ற ஒரு தெரிவு இருந்தது, புத்திசாலித்தனத்தைப் பயன்படுத்தி முடிவுகளை எடுத்து வெற்றியும் பெறலாம்.

ஆனால் இப்போது முதல் 10 ஓவர்களில் 2 களத்தடுப்பாளர்களுக்கு மட்டுமே 30 யார் வட்டத்துக்கு வெளியே அனுமதி. பிறகு 11ஆவது ஓவரிலிருந்து 40வது ஓவர் வரை 30 யார் வட்டத்துக்கு வெளியே 4 களத்தடுப்பாளர்கள்தான் நிற்க முடியும். இதனால் மத்திம ஓவர்களை வீசும் பந்துவீச்சாளர்கள் சாத்து முறை வாங்குகின்றனர். இந்தப் போட்டியையே எடுத்துக் கொள்வோம். முதல் 10 ஓவர்களில் நியூசிலாந்து 81 ஓட்டங்களை விளாசியது. அதன் பிறகு 40வது ஓவர் வரை மேட்ச் வரவில்லை. 202 ஓட்டங்களை 26 ஓவர்களில் விளாசியது நியூசிலாந்து. இது நல்ல அறிகுறி அல்ல.

ஏனெனில், தொடக்க வீரர்களின் பங்களிப்பு ஒன்றுமில்லாமல் போய் விடுகிறது. முன்பு ஸ்பின்னர் துருப்புச் சீட்டாக இருப்பார்கள். முதல் 10 ஓவர்களில் 80 ஓட்டங்களை அணிகள் எடுத்தாலும் அதன் பிறகு ஸ்பின்னர்கள் வரும் போது துருப்புச் சீட்டாக மாறி எதிரணியை 2-3 விக்கெட்டுகள் மூலம் அடுத்த 10 ஓவர்களில் நிலைகுலையச் செய்து விடுவார்கள். ஆனால் இப்போது 30 யார் வட்டத்துக்கு வெளியே 4 களத்தடுப்பாளர்கள்தான் எனும் போது, ஒரு லெக் ஸ்பின்னர் வீசுகிறார் என்றால் 4 களத்தடுப்பாளர்களை எங்கு வைப்பீர்கள். லெக் ஸ்பின்னர் என்பதால் லோங் ஓவ் நிச்சயம் வேண்டும்.

லோங் ஒன், ஸ்வீப்பர் கவர் வைத்தால் லேங் லெக், ஸ்கொயர் லெக், மிட்விக்கெட் பௌண்ட்ரிகள் வெறுமையாகவே இருக்கும். களத்தடுப்பாளர்கள் நிற்கும் இடங்களில் மட்டுமே பந்து போகும் விதமாக பந்துவீச முடியாது. இந்த 3 இடங்களில் களத்தடுப்பாளர்கள் இருந்தால் வளைத்து மிட்விக்கெட்டில் ஸ்லாக் ஸ்வீப் ஆடினால் என்ன செய்ய முடியும்?. நிச்சயம் ஆடுவார்கள், ஏனெனில் அங்குதான் கவர் செய்ய களத்தடுப்பாளர் இல்லையே. சரி நீங்கள் லோங் ஒன் வேண்டாம், டீப் மிட் விக்கெட் நிறுத்துகிறேன் என்றாலும் லோங் ஒன்னில் அடிக்க முடியாது என்று சொல்வதற்கில்லை.

அதேபோல், ஓவ் ஸ்பின்னர் வீசுகிறார் என்றால், லோங் ஓவ், லோங் ஒன், மிட்விக்கெட், ஸ்வீப்பர் கவர் நிறுத்தப்படுகிறது என்றால். டீப் தேர்ட் மேன், ஸ்கொயர் லெக், பைன்லெக், லாங் லெக் ஆகியவை காலியாகவே இருக்கும் ஆகவே ஸ்கூப் ஷொட், ரிவ்ர்ஸ் ஷொட் உள்ளிட்ட ஷொட்களை ஓவ் ஸ்பின்னர்களுக்கு எதிராக பயன்படுத்துவார்கள், அன்று டேவிட் வோர்ணர் வலது கையிலேயே அஸ்வினுக்கு எதிராக துடுப்பெடுத்தாடினார்.

வேகப்பந்து வீச்சாளர்களுக்கும் கஷ்டம்தான். லோங் ஓவ்வில் டீப்பில் வைத்தால் லோங் ஒன்னை முன்னால் வைக்க வேண்டும் அப்போதுதான் ஹூக், புல் ஷொட்கள், பிளிக் ஷொட்களுக்கு இரண்டு களத்தடுப்பாளர்களை லெக் திசையில் டீப்பில் நிறுத்த முடியும். அப்படி நிறுத்தினாலும் பந்துவீச்சாளர் ஓவ் ஸ்டம்பில் வீச முடியாது, பளார் என்று அடித்தால் கவர், எக்ஸ்ட்ரா கவர், பாயிண்ட், தேர்ட்மன்களில் பௌண்ட்ரி பறக்கவே செய்யும். அதனால்தான் எந்த பந்துவீச்சாளரும் மிடில் ஓவர்களில் திணறுகிறார்கள்.

ஏனெனில் இன்சைட் அவுட் போய் ஆடினால் லெக் திசை களத்தடுப்பே ஒன்றுமில்லாமல் ஆகிவிடும், சரி ஓவ் திசையில் நிறுத்தி வீசுவோம் என்றால் லெக் திசையில் ஒன்றிரண்டு பௌண்ட்ரி பொசிஷன்கள் காலியாக இருக்கும். அதை துடுப்பாட்ட வீரர்கள்தான் பயன்படுத்துவார்கள். இதுதான் சமீப காலங்களில் ஓட்டங்கள் 350க்கும் மேல் செல்ல காரணம். முன்பெல்லாம் 283 ஓட்டங்கள் இலக்கை 45 ஓவர்களில் சேஸ் செய்தாலே அது நல்ல வசதியான துரத்தல், இப்போது 283 போன்ற இலக்கெல்லாம் அழித்தொழிக்கப்படுகின்றது.

ஆகவே இந்த களவியூக களத்தடுப்பு கட்டுப்பாடுகளை ஐசிசி பரிசீலனை செய்தால்தான் கிரிக்கெட் துடுப்பாட்டம், பந்துவீச்சு என்பதற்கு இடையேயான சரிசமமான போட்டியாக இருக்க முடியும். அதுதான் கிரிக்கெட் என்னும் கலையை ஒருசார்பாக மாற்றாமல் உண்மையான கிரிக்கெட்டை வழங்கி பார்வையாளர்களையும் த்ரில்லிங்கின் உச்சத்துக்குக் கொண்டு செல்லும். பண்டிதர்களுக்கும் எந்தச் சூழ்நிலையில் எத்தனை புத்தி கூர்மையுடன் ஒரு வீரர் துடுப்பாட்டம் செய்து அணியை வெல்ல வைத்தார், ஒரு பந்துவீச்சாளர் எவ்வளவு பிரமாதமாக யோசித்து தன் அணியை வெற்றி பெறச் செய்தார் என்று சுவாரஸ்யத்தை ஏற்படுத்தும்.

முன்பெல்லாம் அதனால்தான் கிரிக்கெட் தொடர்களில் சாதாரண அணிகள் சில வேளைகளில் பெரிய அணியை வீழ்த்தி அதிர்ச்சியளிக்க முடியும். இப்போது அதற்குச் சாத்தியமே இல்லை. பெரிய அணிகள் தங்கள் பணபலம் உள்கட்டமைப்பு மூலம் பெரிய அணியாகவே இருக்கும் சிறிய அணிகள் முன்னேறாமல் சிறிய அணிகளாகவே இருக்கும். ஐசிசி நிச்சயம் இதற்கு ஒரு தீர்வு காண வேண்டும், இல்லையெனில் மெல்ல இனி ஒருநாள் கிரிக்கெட்டும் செத்துப் போகும்.

# பாகிஸ்தான் இலகு வெற்றி



நடப்பு உலகக் கோப்பை தொடரின் 2ஆவது போட்டியில் பாகிஸ்தான் மற்றும் நெதர்லாந்து அணிகள் விளையாடின. இதில் 81 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பாகிஸ்தான் அணி வெற்றி பெற்றுள்ளது.

ஹைதராபாத் நகரில் உள்ள ராஜீவ் காந்தி சர்வதேச மைதானத்தில் நடைபெற்ற இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற நெதர்லாந்து அணி பந்துவீச்சைத் தேர்வு செய்தது. முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 49 ஓவர்களில் அனைத்து விக்கெட்களையும் இழந்து 286 ஓட்டங்கள் எடுத்தது. அந்த அணிக்காக ரிஸ்வான் மற்றும் சவுத் ஷகீல், தலா 68 ஓட்டங்கள் எடுத்திருந்தனர். மொகமது நவாஸ் 39 ஓட்டங் களும், ஷதாப் கான் 32 ஓட்டங்களும் எடுத்தனர். நெதர்லாந்து பந்துவீச்சாளர் பாஸ் டி லீட், 4 விக்கெட்களை கைப் பற்றி இருந்தார்.

287 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்கை விரட்டியது நெதர்லாந்து. விக்ரம்ஜித் சிங் மற்றும் பாஸ் டி லீட் இணைந்து 70 ஓட்டங்களுக்கு இணைப்பாட்டம் அமைத்தனர். விக்ரம்ஜித் சிங், 52 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். பின்னர் துடுப்பெடுத்தாட வந்த தேஜா, நெதர்லாந்து தலைவர் ஸ்காட் எட்வர்ட்ஸ் மற்றும் சகிப் ஆகியோர் விரைந்து ஆட்டமிழந்தனர்.

68 பந்துகளில் 67 ஓட்டங்கள் எடுத்திருந்த பாஸ் டி லீட், மொகமது நவாஸ் பந்து வீச்சில் வெளியேறினார். 41 ஓவர்களில் அனைத்து விக்கெட்களையும் இழந்து 205 ஓட்டங்கள் எடுத்த நெதர்லாந்து போட்டியில் தோல்வியை தழுவியது. லோகன் வான் பீக், 28 ஓட்டங்கள் எடுத்திருந்தார். இந்த வெற்றியின் மூலம் நடப்பு உலகக் கோப்பை தொடரை வெற்றியுடன் தொடங்கியுள்ளது பாகிஸ்தான் அணி.

ஹாரிஸ் ராஃப், 3 விக்கெட்கள் வீழ்த்தி இருந்தார். அசன் அலி, 2 விக்கெட்கள் கைப்பற்றி இருந்தார். சவுத் ஷகீல், ஆட்ட நாயகன் விருதை வென்றிருந்தார்.

“ஹைதராபாத்தில் எங்களுக்கு கிடைக்கும் ஆதரவை கண்டு நாங்கள் மகிழ்ச்சி கொண்டுள்ளோம். எங்கள் அணி பந்துவீச்சாளர்களின் செயல்பாடு திருப்தி அளிக்கிறது. பேட் செய்தபோது விரைந்து 3 விக்கெட்களை இழந்தோம். இருந்தாலும் ரிஸ்வான் மற்றும் ஷகீல் இணைந்து பேட் செய்து நெதர்லாந்து அணிக்கு அழுத்தம் கொடுத்தனர். எங்கள் திட்டத்தை சிறப்பாக செயல்படுத்தினோம் என கருதுகிறேன்” என வெற்றிக்கு பிறகு பாகிஸ்தான் தலைவர் பாபர் அஸாம் தெரிவித்தார்.

# நசீர் அஹமட்டை உதாரணமாகக் கொண்டு பொதுஜன பெரமுனவும் அதிரடி நடவடிக்கை!

கொழும்பு, ஒக். 08

அமைச்சர் நசீர் அஹமட்டின் நாடாளுமன்ற உறுப்பினர் பதவி தொடர்பில், உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை உதாரணமாக எடுத்து பொதுஜன பெரமுனவிலிருந்து பிரிந்து சென்றவர்கள் தொடர்பில் தீர்மானம் ஒன்றை மேற்கொள்ள அந்த கட்சி அவதானம் செலுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பொதுஜன பெரமுனவின் சிரேஷ்ட உறுப்பினர்கள் குறித்த வழக்கின் தீர்ப்பு தொடர்பாக தற்போது அவதானம் செலுத்துவதாக பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகல காரியவசம் குறிப்பிட்டார்.

2022ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டுச் சட்ட மூலத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தின்போது, முஸ்லிம் காங்கிரஸ் அதற்கு எதிராக வாக்களிக்க தீர்மானித்திருந்தது.

எனினும் அந்த தீர்மானத்துக்கு பாராளுமன்ற உறுப்பினர் நசீர் அஹமட், 2022ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டுச் சட்டமூலத்திற்கு ஆதரவாக வாக்களித்தார்.

இதனையடுத்து அவர், முஸ்லிம் காங்கிரஸின் உறுப்பினர் பதவியில் இருந்து நீக்கப்பட்டார்.

பின்னர் இதற்கு எதிராக அமைச்சர் நசீர் அஹமட் உயர்நீதிமன்றத்தில் வழக்கொன்றினை தாக்கல் செய்திருந்தார்.

முஸ்லிம் காங்கிரஸில் இருந்து அமைச்சர் நசீர் அஹமட் நீக்கப்பட்டமை சட்டரீதியானது என பிரீத்தி பத்மன் சூரசேன, எஸ்.துரைராஜா மற்றும் மஹிந்த சமயவர்தன ஆகிய மூவரடங் கிய நீதியரசர் குழாம் தீர்ப்பளித்திருந்தது.

# நில்வள கங்கை பெருக்கெடுக்கும் அபாயநிலை; தாழ்நிலப் பகுதியில் வாழ்வோருக்கு எச்சரிக்கை

கொழும்பு, ஒக். 08

நில்வள கங்கையை அண்மித்த தாழ்நிலப் பகுதிகளில் பாரிய வெள்ளம் ஏற்படுவதற்கான அபாயம் நிலவுவதாக நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், இன்று வரை அமுலில் இருக்கும் வகையில், நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நில்வலா கங்கையை அண்மித்து 100 மில்லிமீற்றருக்கும் அதிக மழைவீழ்ச்சி பதிவாகக் கூடுமென வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளதுடன், அவ்வாறு கடும் மழை பெய்தால், நில்வலா கங்கை பெருக்கெடுக்கும் நிலை ஏற்படுமெனவும் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

இதனிடையே, நாட்டில் பெய்துவரும் கடும் மழையினால் 12 மாவட்டங்களில், 13,027 குடும்பங்களை சேர்ந்த 53,399 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதுவரை 06 பேர் உயிரிழந்துள்ளதுடன், 20 பேர் காயமடைந்துள்ளனர்.

மேல் மாகாணத்திலேயே அதிகளவானோர் பாதிக்கப்பட்டுள்ளதாக இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இதற்கமைய, மேல் மாகாணத்தில் 10,373 குடும்பங்களை சேர்ந்த 42,682 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தென் மாகாணத்தில் 2119 குடும்பங்களை சேர்ந்த 8,615 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வட மேல் மாகாணத்தில் 146 குடும்பங்களை சேர்ந்த 1000 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், 381 கும்பங்களை சேர்ந்த 1556 பேர் பாதுகாப்பான 16 இடங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

(அ)

# நிரந்தர தீர்வின்றேல் இனவாதமும் தொடரும்!

## ஈ. பி. டி. பி. கட்சி சொல்கிறது




யாழ்ப்பாணம், ஒக். 08

நிரந்தர அரசியல் தீர்வை நோக்கி தமிழர் தரப்பு நகராவிட்டால் பெருந்தேசியவாதமும் குறுந்தேசிய வாதமும் தமது இருப்புக்காக இனவாதத்தை கக்கிக்கொண்டே இருக்கும் என்று ஈ. பி. டி. பி. பேச்சாளர் ஐ. சிறீரங்கேஸ்வரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

நேற்று முன்தினம் அவர் நடத்திய ஊடக சந்திப்பிலேயே இத னைத் தெரிவித்தார்.

தற்போது நாட்டில் நிலவுகின்ற அரசியல் சூழலை உற்று நோக்குகின்ற சனல் 4, திலீபனின் ஊர்தி பவனி, குருந்தூர்மலை தீர்ப்பு தொடர்பான நீதிபதியின் விவகாரம், பயங்கரவாத தடைச்சட்டம் மற்றும் சமூகவலைத் தளங்களை கட்டப்படுத்தல் என காலத்துக்கு காலம் ஒவ்வொரு செய்திகளாக வந்துகொண்டிருக்கின்றன.

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியாகிய எம்மைப் பொறுத்தவரை இவ்வாறான பிரச்னைகளுக்கு அடிப்படையாக தீர்வாக அரசியல் தீர்வையே நாம் வலியுறுத்துகின்றோம்.

அதற்காக எல்லா அரசியல் கட்சிகளும் ஒரு நிலைப்பாட்டுக்கு வந்து அரசியல் தீர்வை நோக்கி நகர வேண்டியவர்கள் என்பதை காண்பித்து நிற்கின்றன.

இதேபோல ஐ. நா சபை, இந்தியா மற்றும் ஏனைய நாடுகள் எல்லாம் இனப் பிரச்னை தீர்வு தொடர்பாக தமிழ் கட்சிகள் ஒற்றுமையாக ஓர் இணக்கத்துக்கு வர வேண்டும் என்றே வலியுறுத்தி வருகின்றன. இதனடிப்படையில் அனைத்து தமிழ் தரப்பினரும் ஓர் அணியாக ஒரே நிலைப்பாட்டில் வரவேண்டும் என எதிர்பார்க்கின்றன.

ஆனால், துரதிர்ஷ்டம் வடக்கு - கிழக்கில் தமிழ் பேசும் கட்சிகளில் அவ்வாறான ஓர் இணக்கப்பாடான சூழல் இல்லை என்பதே கண்கூடாக உள்ளது. இவ்வாறான சூழல் இருக்கும் பட்சத்தில் இது போன்ற பிரச்னைகள் தொடர்ந்துகொண்டுதான் இருக்கும் - என்றும் கூறினார்.

(ஐ-02)

